முகப்பு:
அண்மையில் 3—4—80 அன்று திருக்குட நீராட்டு விழா சிறப்புற நிகழ்ந்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் அழகிய தோற்றம்.

# திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

R. RAJU, Dy. Commissioner H.Qrs. (Retired)

மாலை: 22 | சித்தார்த்தி ஆண்டு-மாசித் திங்கள்-மார்ச்-1980 | மணி: 5

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடு மாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் *[PINCODE]* எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

சீவக சிந்தாமணி
—திரு க.த. திருநாவுக்கரசு, எம்.ஏ., எம்.லிட் பிஎச்.டி.,

மார்கழி நோன்பு
—திரு கா.அ.சா. ரகுநாயகன், எம்.ஏ.,

திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

தணிகை முருகன் தமிழ்மாலை
—திரு சோமசுந்தர நாயகர்

சுந்தரரும் கல்வெட்டுக்களும்
—திரு கே.எம். வேங்கடராமையா, எம்.ஏ.,

சேக்கிழார் பரவிய அப்பரடிகள்
—திரு மறை திருநாவுக்கரசு

சிவநெறியும் திருமுறையும்
—திரு பெ. திருஞானசம்பந்தம், எம். ஏ., எல்.டி.,

திருக்குடந்தை எம்பெருமான்
—திரு பி.ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாசகமும், திருக்கோவையாரும்
—திரு ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

நிசும்ப சூதினி
—திரு மு. அருணாசலம், எம்.ஏ.,

தீக்கையும் அதன் வகைகளும்
—ஆசிரியர்.

திருவிருத்தத்தின் சிறப்பு
—திரு ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

# சீவக சிந்தாமணி

திரு. க. த. திருநாவுக்கரசு, M.A., M. Litt., Ph.D.,

உலகத்தமிழ் ஆராய்ச்சித்துறை நிறுவனம், சென்னை-20.

**முன்னுரை:**

இந்திய மொழிகளுள் தமிழ் தொன்மையான இலக்கிய வளமுடையது. பிற, இந்திய மொழிகளுக்கில்லாத சிறப்பியல்புகள் பல தமிழிற்கு உண்டு. இந்தியாவில் தோன்றிய சமயங்கள், வந்து குடிபுகுந்த சமயங்கள், ஆகியவற்றின் சார்பாகப் படைக்கப்பெற்ற இலக்கியங்கள் அனைத்தும், தமிழ் மொழியில் உள்ளமை அதற்குரிய சிறப்புக்களில் ஒன்றாகும். பல்வேறு சமயங்கள், பல்வேறு காலங்களில் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கின. அக்காலங்களில் புதிய சமயத்தின் சார்பாகப் பல புதிய தமிழ் இலக்கண இலக்கியங்களை அறிஞர்கள் தமிழில் படைத்துள்ளனர்.

தமிழகத்திற்குச் சமண சமயம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டுற்கு முன்பே வந்தது எனலாம். அக்காலம் முதற் கொண்டு கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை சமண சமயப் பெரியோர்கள், தமிழன்னைக்குப் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து வந்துள்ளனர். தென்னாட்டில் சமண சமயம் தழைத்தோங்கிய காலத்தில் எழுந்த நூல்கள் எண்ணற்றவை. அவற்றில் ஒன்றான சிந்தனைக்கினிய சீவக சிந்தாமணி, பெருங்காப்பியங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் சிறப்புடையதாகும். சமண சமயத்தைச் சேர்ந்த சீவகன் என்ற ஓர் அரசனின் வரலாற்றை எடுத்துரைப்பதன் மூலம், சமண சமயத்தின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அழகுணர்ச்சி தோன்ற,இனிமை கனியும்படி செய்யுட்களாகப் பாடியவர், திருத்தக்கதேவர் என்ற சமணத் துறவியாவார்.

**காப்பிய மரபு:**

தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரத்திற்கு அடுத்த நிலையில் சிறப்புற்று இலங்குவது, செந்தமிழ்க் காப்பியமாகிய சிந்தாமணியாகும். காதலும் கற்பனையும் கலந்துறவாடுமாறு இன்பச்சுவை சொட்டச் சொட்டக் காப்பியம் இயற்றிய பெருமையும் சிறப்பும் தேவருக்கே உரியதாகும். 'காப்பியக் கலித்துறை' எனப்படும் விருத்த யாப்பில், ஓசை இனிமை என்ற உயிரோட்டத்தோடு கூடிய சொல்லழகும், சொல்லினிமையும் வாய்ந்த செய்யுட்களைப் படைத்ததன் மூலம் தமிழிலக்கிய வானில், 'பொங்கிவரும் பெருநிலவாக'த் தேவர் பொன்றாப் புகழ் பெற்றுவிட்டார்.

கவிகள் இயற்றுவன காப்பியம் எனப் பொதுவாகக் கூறப்படுவது மரபு. ஆனால், கவிஞர்கள் இயற்றும் எல்லாப் பாடல்களும்நூல்களும் காப்பியமாகப் போற்றப்படுவதில்லை. காப்பியத்தைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர், 'தொடர்நிலைச் செய்யுள்' என்பர். சிந்தாமணியில் வரும்,

''கருதுவ தங்கொன் றுண்டோ
காப்பியக் கவிகள் காம'' (1585)

என்ற அடிகளுக்கு உரைவிளக்கம் தந்த நச்சினார்க்கினியர், ''நால்வகை உறுதிப் பொருள்களையும் கூறுவதாய்க் கதை பற்றி வரும் தொடர்நிலைச் செய்யுள்'' என்று குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும்.

இக்காப்பியம் அமைப்புமுறையில் எளிமையானது. கதையினைப் படிப்போர், எளிதில் அதன் குறிக்கோளை உணரும்வகையில் நெகிழ்ச்சியுடைய இனிய சொற்களினால் அரிய கருத்துக்கள் அழகுறச் சிந்தாமணியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆயினும், அதனுடைய கதையமைப்பு-கட்டுக்கோப்பு நெகிழ்ச்சி உடையதாகக் காணப்படுகிறது.

**காப்பியக் கட்டுக்கோப்பு:**

காப்பியம் என்பது கலையழகு வாய்ந்தது. அக்கலையழகும் சுவையுணர்வும் பெருகவேண்டும் என்றால் காப்பியக் கதை நிகழ்ச்சிகளைக் காலமுறைப்படி (வரலாறு எழுதுவதைப் போன்று) ஒன்றன்பின் ஒன்றாக அமைத்துக் கூறக்கூடாது. காப்பியத் தலைவனுடைய வாழ்க்கையின் குறிக்கோளாய் அமைந்தபெருஞ்

செயலை எடுத்துக்கொண்டு, அதன்தோற்றம், வளர்ச்சி, உச்சநிலை, முடிவுநிலை என்பன வற்றை வரையறுத்து அம்முறைப்படி கதை யைக் கவினுற அமைத்தால், 'கதையொருமை (Unite of Plot) என்ற உணர்ச்சி, கற்பவர் உள்ளத்தில் களிப்பினையூட்டும். இக்கதை யொருமை என்னும் காப்பியத் திறன் சிந்தா மணியில் சிறிதளவும் இடம்பெறவில்லைஎன்றே நாம் கூறலாம். தன்னிகரற்ற தலைவன் ஒருவ னுடைய வாழ்க்கை வரலாற்றை முதலில் இருந்து முடிவு வரையில் கூறுவதோடு, அவன் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பலவற்றைத் திரட்டிப் பட்டியல் அமைத்ததைப் போன்று சிந்தாமணி இயற்றப்பட்டுள்ளதால், அதனு டைய கலையழகு குன்றிவிட்டது.

காப்பியத் தலைவனாகிய சீவகன் வாழ்க் கையில் நிகழ்ந்த பத்திற்கு மேற்பட்ட சுவை மிக்க நிகழ்ச்சிகளைச் சிந்தாமணி சித்திரிக்கிறது. அந்நிகழ்ச்சிகள் பலவண்ண மலர்களால்தொடுக் கப்பட்ட கவர்ச்சிமிக்க மாலையாகத் தோன்ற வில்லை. உதிரிப் பூக்களாகவே சிதறிக் காணப் படுகின்றன. ஒரு நிகழ்ச்சிக்கும் மற்றொரு நிகழ்ச்சிக்கும் நெருக்கமான பிணைப்பு இல்லை. எடுத்துக்காட்டாகக் காந்தருவ தத்தையார் இலம்பகத்தையும், குணமாலையார் இலம்பகத் தையும் குறிப்பிடலாம். இவ்விரண்டிற்கும் இடையே நெருக்கமான பிணைப்பு இருப்ப தாகத் தோன்றவில்லை.சீவகன்என்ற காப்பியத் தலைவனுடைய வாழ்க்கையில் அடுத்து நிகழும் நிகழ்ச்சி என்பதைத்தவிர, முன்னதன் வளர்ச்சி யாக அடுத்துவரும் நிகழ்ச்சி அமையாமல் போனது வருந்தத்தக்கதாகும்.

''காப்பியம் என்பது பல உறுப்புக்களை யுடைய ஒரு சங்கிலித்தொடர். அதனுடைய பல்வேறு உறுப்புக்களும் தக்க முறையில் இணைந்தும் இழைந்தும், படிப்போருடைய உள்ளத்தில் ஒருவிதப் புத்துணர்ச்சியை ஊட்டு வதோடு, சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமையவேண்டும்' என்பர் அரிஸ்டாட்டில்.

இதனால் காப்பியம் என்பது தனிப்பட்ட நிகழ்ச்சிகளின் விரிவுரையாகவோ, குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தின் பண்பு நலனைப் புனைந் துரைப்பதாகவோ அமையக்கூடாது என்பது புலனாகிறது. இதனைத் தொல்காப்பினார் 'வனப்பு' என்பர்.

'வனப்பியல் தானேவகுக்குங் காலைச்
சின்மென் மொழியால் தாய பனுவலோ (டு)
அம்மை தானே அடிநிமிர் பின்றே'
—செய்யு. 235.

''வனப்பு என்பது பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழ காதலின்....பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர் நிலையதே வனப்பு என்னும் பெயர்ப் பகுதியான் ஏற்பதென்பது'' என்று பேராசிரியர் வரைந்துள்ள உரை விளக் கம் இங்குக் கருதத் தக்கதாகும். எனவே வனப்பு என்னும் சொல்லிற்குத் 'திரண்டஅழகு என்று தொல்காப்பியனார் பொருள் கொண் டுள்ளமை தெரிய வருகிறது. இந்தத் திரண்ட அழகினையே, அரிஸ்டாட்டில், காப்பியத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் பண்பு என்று கூறுகிறார். நம்முடைய சிந்தாமணியில் இப் பண்பு சிறிதளவுகூட இடம்பெறவில்லை.

தனித்தனிச் செய்யுட்களில் காணப்படும் கற்பனைவளம், கருத்தாழம், பொருள்நயம், சொன்னயம், இழுமெனும் ஓசையின்பம் என் பனவற்றால் சிந்தாமணிக்கு ஒருவகையான சிறப்பு உண்டாகியிருக்கிறது. ஆனால், அப் பண்புகள் ஒன்றாக இணைந்து, மாண்புமிக்க முழுவடிவம் பெற்றதொரு காவியத்தை உரு வாக்கவில்லை.ஒரு பெரிய மாளிகையின் அமைப் பும் தோற்றமும் அழகுற்று விளங்க வேண்டு மானால் அதைக் கட்டுவதற்கு நல்ல கற்கள் சுதை போன்றவை வேண்டும். ஒரு வரையறைக் குட்பட்டு, கற்களைச் சீராகவும் முறையாக வும் அடுக்கி, அவற்றிடையே சாந்தினைப் பெய்து, புறத்தே சுதையினைப் பூசினால் காண்பவர் கருத்தைக் கவரும் மாளிகையாக அது தோன்றும். அவ்வாறு செய்யாமல், ஒரு பக்கம் செங்கற்களையும், மற்றொரு பக்கம் சுண்ணாம்பையும், பிறிதொரு பக்கம் வேறு பிற பொருள்களையும் குவியல் குவியலாகக் கொட்டிவைத்தால், அக் காட்சி எவ்வாறு இருக் கும் என்று சொல்லவும் வேண்டுமோ? அதைப் போன்று சிந்தாமணி, கொட்டப்பட்ட செங் கற்களாகக் காட்சி தருகிறதேயொழிய, கட்டப் பட்ட மாளிகையாகத் தோன்றவில்லை என்று கூறலாம். இதனை வேறுவகையாக சி.எஸ். லியூயிஸ்(C. S. Lewis) என்னும்திறனாய்வாளர் குறிப்பிடுகிறார்; 'தனித்தனிச் செய்யுட்களின் அழகைக் கண்டு களித்தல், கட்டி முடிக்கப் பட்ட மாளிகையிலே ஒரு தனிக்கல்லின் அழகிய அமைப்பினைக் கண்டு மகிழ்வதோடொக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளமை (A Preface to Paradise Lost, P. 2.) இங்குச் சிந்திக்கத்தக்க தாகும்.

சிந்தாமணியின் செய்யுட்களைப்படிப்போ மானால் இவ்வுணர்ச்சியே மேலெழுகிறது. தனிப்பட்ட செய்யுளின் அழகும் இனிமையும் இந்த உணர்ச்சியைத்தான் மிகுவிக்கின்றன. இதனால் ஆசிரியரின் கவித்திறனில் மிக முக் கியமானதோர் குறைபாடு நமக்குப் புலனாகின் றது. கதை முழுவதையும் மனக்கண்முன் நிறுத்தி, அதன் பல்வேறு பகுதிகளையும் உறுப் புக்களையும் முறைப்பட உணர்ந்து, அவைய னைத்தையும் ஒன்று சேர்த்து, அழகுறக் கற் பித்து அமைக்கும் சிறந்த படைப்புத்திறன் தேவரிடம் அமையவில்லை. மாண்புமிகு கட் டமைப்பினையுடைய காப்பியத்தைப் படைக் கத் தக்க அறிவாற்றல் நிறைந்த பெரும் சிற்பி யாகத் தேவர் விளங்காமற்போனது தமிழரு டைய தவக்குறைவேயாகும்.

**பாத்திரப்படைப்பு:**

கவின்மிகு காப்பியங்களுக்குப் பாத்திரப் படைப்பு என்பது உயிர் நாடியாகும். இளங்

கோவடிகள், கம்பர் முதலியோர் படைத்துள்ள பாத்திரங்கள் உயிர்த்துடிப்பும் கலையழகும் வாய்ந்தவை. இளங்கோவின் 'கண்ணகி' என்றென்றும் நம்முடைய இதயக் கோவிலில் வீறுடன் விளங்கக்கூடிய பாத்திரமாகும். கம்பரின் இராமன், இராவணன், கும்பகருணன் போன்றோர் அழகுமிக்க அரிய பாத்திரங்கள் என்பதில் யாரும் ஐயுறவு கொள்ளுவதற்கு இடமேயில்லை. இப்பாத்திரங்களின் குறையும் நிறையும் வாய்ந்த பண்புநலன்கள் கற்பாருடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விடுகின்றன. ஆனால், சிந்தாமணியில் வரும் பத்திற்கு மேற்பட்ட பாத்திரங்களுள், ஒன்றுகூட உளவியல் நெறிகளைப் பின்பற்றிப் படிப்படியாக வளர்ச்சியுறும் பண்பு நலனைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமையவில்லை. சீவகன் முதற்கொண்டு அவனுடைய தாய் விசயை ஈறாக உள்ள பாத்திரங்கள் எல்லாம் ஆழ்ந்ததும், அகன்றதுமான மனித இயல்புகளைப் பிரதிபலிக்கும் பாத்திரங்களாகத் தோன்றவில்லை; உள்ளத்தைத்தொடும் உண்மையான உயிர்த் துடிப்பினை இப்பாத்திரங்களில் சிறிதும் காண முடியவில்லை. பொதுவாக நோக்குமிடத்து, இக்காப்பியம் 'நெஞ்சை அள்ளும்' சிந்தாமணியாக அமையவில்லை. இத்தகைய குறைகள் சில சிந்தாமணியில் காணப்படுகின்றன என்பதுமறுக்க முடியாத உண்மை. எனினும், 'சிந்தாமணி' தமிழ்க்காப்பிய உலகில் சிறப்புற்று விளங்குவதற்குரிய காரணம் என்ன? என்ற ஐயம் எழலாம்.

## சிறப்பியல்புகள்:

திருத்தக்கதேவர் தம்முடைய காப்பியத்தைக் கற்பவருக்குச் சலிப்புத் தோன்றாமல் இருப்பதற்குச் சில இலக்கியத் திறன்களைக் கையாண்டுள்ளார். அவற்றுள் முதன்மையானது யாப்பு நடையாகும். உணர்ச்சிச் சூழல்களுக்கு ஏற்பவும், இடம், பருவம் முதலியவற்றிற்கு உகந்த முறையிலும், கருத்துக்களை எடுத்துரைக்கும் முறைக்குத் தக்கபடியும் செய்யுட்கள் வேறுபட்ட யாப்பு அமைதியை உடையனவாக அழகுற்று விளங்குகின்றன. நூல் முழுவதிலும் இனிய தமிழ் நடையில், தேவர் பலவேறுவகையான செய்யுட்களை இயற்றியமைத்துள்ளமை பாராட்டத் தக்கதாகும்.

''கூந்தலை ஒருகை யேந்திக்
குங்குமத் தாரை பாயப்
பூந்துகில் ஒருவகை ஏந்திப்
புகுமிடங் காண்டல் செல்லார்
வேந்தனைச் சரணெண் றெய்த
விம்முறு துயரம் நோக்கிக்
காய்ந்துபொற் சிவிறி யேந்திக்
கார்மழை பொழிவ தொத்தான்''
—2600

இப்பாடலில் இழுமெனும் இன்னோசையும் கற்பனை வளமும் பெருக்கெடுத்து ஓடுகின்றன. அழகிய அருவியில் நீராடி வரும் நாகரிக நங்கையரை இச்செய்யுள் நமது மனக்கண் முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறது. பந்தாடும் பாவையினைப் படம்பிடித்துக் காட்ட முனையும் தேவர், பந்தாடுகின்ற பொழுது எழும் இனிய ஒலியினை-ஓசையை,

''குழல்மலிந்த கோதைமாலை
பொங்கவெங் கதிர்முலை
நிழல்மலிந்த நேர்வடம்
நிழற்படப் புடைத்தர
எழில்மணிக் குழைவில்வீச
இன்பொனோலை மின்செய
அழல்மணிக் கலாபமஞ்
சிலம்பொடார்ப்ப ஆடுமே'' —1952.

என்ற செய்யுளில் அழகுற அமைத்துள்ளதை நாம் பாடியுணர்ந்து மகிழலாம். அணைகடந்த வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடும் இன்பச்சுவை, இக்காப்பியம் சிறப்புற்று விளங்குவதற்கு மற்றொரு காரணமாகும். காமநூலாரின் விதிமுறைகளைப் பின்பற்றிக் கூடலைப் பற்றிய தொழில் நுட்பக் கருத்துக்களும், மகளிரின் உடலழகினையும் உறுப்பு நலன்களையும் உச்சிமுதல் உள்ளங்கால்வரை அணு அணுவாகப் புனைந்துரைக்கும் கற்பனைத் திறனும், கற்பவருடைய உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுகின்றன.

பெருங்காப்பிய நெறியின் பண்புகளாகிய தன்னிகரற்ற தலைவன், நாற்பொருள் பயத்தல், மலை, கடல், நாடு, வளநகர் வருணனை, இருசுடர்த் தோற்றம், மறைவு, நன்மணம் புணர்தல், புலவியிற் புலத்தல், கலவியிற்களித்தல், மந்திரம், தூது போன்ற பல கூறுகள் சிந்தாமணியில் இடம்பெற்று உள்ளமையால் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் இதனைப் போற்றிப் பாராட்டினர் எனலாம்.

# மார்கழி நோன்பு

திரு. கா. அ. ச. ரகுநாயகன், எம். ஏ.,

திருப்பத்தூர்

''மாதங்களில் நான் மார்கழி ஆவேன்'' என்று கண்ணபிரான் கீதையில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். மார்கழிக்கு ஒரு தனிச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. அத்திங்கள் இறைவனுக்குரிய மாதமாக நடைமுறையில் இருந்து வருகிறது. விடியற்காலையில் துயிலெழுந்து நீராடி அனைவரும் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவது இத்திங்களில் நிகழ்ந்து வருகிறது; சைவர்களும் வைணவர்களும் தத்தமக்குரிய திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைப்பாடி மகிழ்கின்றார்கள்; திருப்பாவை திருவெம்பாவைப் பாடல்கள் எங்கும் ஒலிப்பதைக் கேட்கின்றோம்; வைகறையில் துயிலெழுவதும், நீராடுவதும், பாடுவதும் நோன்பாக அமைகின்றன.

மார்கழி நோன்பாக இக்காலத்தில் நாம் பின்பற்றிவரும் இந்த வழக்கம் மிகப் பழங்காலத்திலிருந்தே தொடர்ந்து வருவதை நூல்கள் வாயிலாக அறிகிறோம். அக்காலத்தில் இந்நோன்பு 'தைந்நீராடல்' என்று குறிக்கப்பட்டிருக்கிறது. தைந்நீராடலே பின்னர் மார்கழி நோன்பாக மலர்ந்திருக்கிறது.

மார்கழியும் தையும் முன்பனிக் காலமாகும். இக்காலத்தில் தட்பம் மிகுந்து குளிர்வது இயல்பு. குளிரின் மிகுதியைத் ''தண்ணீரைத்தை இத்திங்கள் தண்கயம் போல'' எனப்புறப்பாட்டு (பா.70-6) ஒன்று கூறுகிறது. 'தை மாதத்தின் கண் குளிர்ந்த பொய்கையைப் போல' எனப் பழைய உரையாசிரியர் இவ்வடிக்குப் பெருள் உரைத்துள்ளார். இக் கருத்தையே ''பனிச் சுனைத்தெண்ணீர் தைத் திங்கள் தண்ணிய'' என்னும் குறுந்தொகை (பா.196) அடிகளும் தெரிவிக்கின்றன. தைத்திங்களில் குளிர்ந்திருக்கும் குளத்து நீர் விடியற் காலையில் குளிர்ச்சி மிகுந்திருக்கும். அந்தக் குளிர்ச்சிமிக்க கயத்தில் இளம்பெண்கள் நீராடுகின்றனர். ''நறுவீ யைம்பால் மகளிர் ஆடும் தை இத் தண்கயம்'' என ஐங்குறுநூறு (பா.84) அறிவிக்கின்றது. இதற்கு ''நறிய மலரணிந்த கூந்தலை உடைய கன்னி மகளிர் தைத்திங்களிலே தவத் தைந் நீராடுவதற்குரிய குளிர்ந்த குளம்'' என்று அறிஞர்கள் பொருள் கூறுவர். இவர்களில் 'மகளிர்' என்பதற்குக் 'கன்னிமகளிர்' எனவும், 'ஆடும் தை' என்பதற்குத் 'தைத் திங்களிலே தவத் தைந்நீராடுதல்' எனவும் அவர் பொருள் கூறியிருக்கிறார். இவை குறிக்கத் தக்கனவாகும்.

இளம் பெண்கள் இவ்வாறு குளிர் மிக்க நீரில் ஆடுவது எதன் பொருட்டு? குளிர் மிக்க பனிக்காலத்தில் தண்ணீரில் நின்று உடலை ஒறுத்தல் ஒருவகைத் தவம் அன்றோ? ஆம்; இப்பெண்களும் ஒரு தவம் செய்கின்றனர். இவர்களின் தவமும் ஒரு குறிக்கோளை உடையது. சிறந்த ஓர் ஆண்மகனைத் தலைவனாக (கணவனாக) அடையவேண்டும் என்பதே அந்தக் குறிக்கோள்.

''பெரும்புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து
தழையும் தாரும் தந்தனன் இவன்என
இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள்..........''

என்பது நற்றிணைப் (பா. 80) பாட்டு. ''பெரிய இருள் நீங்கும் விடியற்காலத்து, என்னைப் பெறுமாறு தான் எடுத்துக்கொண்ட நோன்பின் பயனாகத் தைத் திங்களில் தண்ணிய நீரில் ஆடுகின்ற பெரிய தோளை உடைய இளமகள்'' என்பது இவ்வடிகளுக்கு உரையாகும்.

'தைத் திங்களில் பெண்கள் நீராடுவது ஒரு நோன்பு' என்பதும், அந்த நோன்பு ஒரு குறிக்கோளுடன் செய்யப்படுவது என்பதும் கலித்தொகைப் பாடல் ஒன்றில் தெளிவாக அறிய முடிகிறது. குறிஞ்சிக்கலி 23ஆம் பாடல் தாழிசையில், ''தையில் நீர் ஆடிய தவம்தலைப் படுவாயோ'' என்னும் அடியைக் காண்கின்றோம். இவ்வடிக்கு ''நீ தைத்திங்களில் நீராடிய நோன்பின் பயனைப் பெறுவாயோ?'' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார்.

தைந்நீராடலைப் பரிபாடல் என்னும் நூல் மிக விளக்கமாகக் கூறுகிறது. 11ஆம் பாடலின் இறுதியில், (அடி 134 முதல் 140 முடிய)

''இன்ன பண்பின் நின்தைந்நீர் ஆடல்
மின்னிழை நறுநுதல் மகள்மேம் பட்ட
கன்னிமை கனியாக் கைக்கிளைக் காமம்
இன்னியல் மாண்தேர்ச்சி இசைபரி பாடல்
முன்முறை செய்தவத்தின் இம்முறை இயைந்
தேம்
மறுமுறை அமையத்தும் இயைக
நறுநீர் வையை நயத்தகு நிறையே''

என்ற அடிகள் அமைந்துள்ளன. இப்பாடல் தோழி கூற்று. தோழி வையையாற்றை நோக்கிக் கூறுவதுபோல் கூறுகிறாள். தலைவன் அங்கே மறைவாக இருக்கின்றான். அதனை அறிந்துகொண்ட தோழி, அவன் கேட்டு உணர வேண்டும் என்னும் கருத்துடனேயே இதனைக் கூறுகின்றாள்.

தலைவனும் தலைவியும் ஓரிடத்தில் ஒருவரையொருவர் கண்டு விரும்பினார்கள். இருவர் உள்ளத்தும் அன்பு மலர்ந்தது. அது காதலாகக் கனிந்தது. இருவரும் சில நாள் அடிக்கடி தனிமையில் கண்டு பழகி வந்தார்கள். பின் தலைவன் வேறு கடமையினால் தலைவியைக் காண வரவில்லை. தலைவனை மணந்து இல்வாழ்க்கை நடத்தவேண்டும் என்னும் விருப்பம் தலைவிக்கு இயல்பாக எழுந்தது. தலைவன் வராமையினால் அவள் வருந்தினாள். தலைவன் தன்னைக் கைவிட்டு விடுவானோ என்னும் அச்சம் அவளுக்குத் தோன்றியது. அவள் அச்சத்தைப் போக்கவும், காலம் தாழ்த்தாமல் வந்து தலைவியை மணந்து கொள்ளவேண்டும் என்று தலைவனை வலியுறுத்தவும், தோழி இவ்வாறு முயற்சி மேற்கொள்கிறாள்.

தோழி கூறும் இப்பாடற் பகுதியின் கருத்து: ''ஒரு பெண்ணுக்கு வேண்டிய எல்லா நலன்களையும் பெற்றுத் தலைவி மலர்ந்துள்ளாள். ஆனால் அவளுடைய கன்னிப் பருவ நிலை கனியவில்லை. அவளுடைய உள்ளத்தில் நிலைபெற்றுள்ள தலைவன் திருமண முயற்சியில் ஈடுபடக் காணோம். அதனால் அவளுடைய காதல் ஒருதலைக் காமமாகிவிட்டது. தலைவன் தலைவியிடம் கொண்டிருந்த விருப்பம் நீங்கிவிட்டது போலும். இருப்பினும் தலைவனை அடைய வேண்டும் என்னும் விருப்பத்தினால், வையையாறே! தலைவி உன்னிடத்தில் இந்தத் தைந் நீராடலாகிய தவத்தை மேற்கொண்டிருக்கின்றாள். அதன் பயனாக அவளுக்கு மணவாழ்வு அமைவதாக! அந்த வாழ்வு அவளுடைய அடுத்த பிறவியிலும் தொடர்வதாக!''

இவ்வாறு தோழி கூறும் சொற்களில், சிறு பெண்கள் இம்மைப்பயன் கருதித் தைந்நீராடும் வழக்கத்தைத் தெளிவாக அறிய முடிகிறது. அந்தப் பரிபாடல் மேலும் சில விளக்கங்களைக் கூறுகிறது. அவைகளைக் காண்போம்.

''கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்கப்
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நனிமாரிப் பிற்குளத்து
மாயிரும் திங்கள் மறுநிறை ஆதிரை

(அடி 74-77)

வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா வாடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பணிப்புலர் பாடிப் பருமணல் அருவியின்

(அடி 80-83)

தாயருகா நின்று தவத்தைந்நீர் ஆடுதல்
நீயுரைத்தி வையை நதி''

(அடி 91-92)

இவ்வடிகளிலிருந்து நாம் கொள்ளத் தக்க கருத்து வருமாறு: வானத்தில் மேகங்கள் நீங்கி மறையப் பனி மிகுந்து குளிர் நடுக்கும் முன் பனிப் பருவத்தில், ஞாயிறு தெறாத மார்கழி மாதத்தில், நிறைநிலா நேரும் திருவாதிரை நாளில், இளம் பெண்கள் ''இம் மண்ணுலகம் மழை பெய்து குளிர்வதாக!'' என்று பாடி, விடியற்காலையில் நீராடுகின்றனர். அப்பெண்கள் தம்தாயர் அருகே நின்று அத் தைந்நீராடலைச் செய்கின்றனர்.

76ஆம் அடியின் இறுதியில் வரும் 'குளம் என்ற சொல்லுக்கு' மார்கழி மாதம்' என்று பொருளுரைத்துத் ''திருவாதிரை நிறைமதி நாளாங்கால், ஆதித்தன் பூத்தடத்தின் (புனர்பூசம்) கண் நிற்குமாகலின், அதனையுடைய மார்கழி மாதம் குளம் எனப்பட்டது'' என்று விளக்கம் கூறுகின்றார் உரையாசிரியர் பரிமேலழகர்.

மார்கழித் திங்களில், மதி நிறைவுறும் திருவாதிரை நாளில், விடியற்காலையில் இளம் பெண்கள் குளிர்ந்த நீரில் பாடி ஆடுவது, பண்டைய வழக்கம் என்பதனை இப்பாடலின் அடிகளால் நாம் தெளிவாக அறிகிறோம். உலக நன்மையின் பொருட்டு மழை பெய்ய வேண்டும் என்று வேண்டுவது, அப்பெண்கள் பாடும் பாட்டின் கருத்தாக அமைந்திருப்பதையும் நாம் காண்கிறோம்.

''அம்பா வாடலின் ஆய்தொடிக் கன்னியர்''

எனவரும் 81-ஆம் அடிக்கு 'அம்பா ஆடலையுடைய கன்னியர்' என்று பொருள் கூறிய உரையாசிரியர், ''அம்பாவாடல் என்று தைந் நீராடற்குப் பெயராயிற்று தாயோடு ஆய் பெறுதலின்'' என்று விளக்கம் கூறியுள்ளார். இப்பாடலின் 91-ஆம் அடியில், ''தாயருகா நின்று தவத்தைந்நீர் ஆடுதல்'' என்னும் தொடர், இவர் கூறும் விளக்கத்துக்குத் துணை செய்கிறது. சென்னைப் பல்கலைக்கழக வெளியீடான தமிழ் அகராதியில் (Lexicon) 'அம்பாவாடல்' என்னும் தொடருக்குத் 'தைந் நீராடல்' என்று மட்டும் பொருள் சொல்லி, இந்தப் பரிபாடல் அடியை மேற்கொளாகக் காட்டியுள்ளனர்.

'அம்பாவாடல்' என்னும் தொடர், வேறு பழந்தமிழ் இலக்கியம் எதனிலும் இடம்பெறக் காணோம். இடம்பெற்று இருக்குமாயின், அதன் சரியான வடிவமும் பொருளும் அறிவதற்கு இயலும்.

'பாவாடல்' என்னும் தொடருக்குப் 'பாடலோடு ஆடல்' அல்லது 'பாடி ஆடுதல்' என்று பொருள் கொள்ளலாம். இளம்பெண்கள் நீரில் பாடி ஆடுதலைப் 'பாவாடல்' என மிகப் பழங்காலத்தில் வழங்கி வந்திருக்கலாம். 'அம்' என்றசொல் 'நீர்' என்னும் பொருளையும் தருவதால், 'நீரில் பாடி ஆடுதல்' என்னும் கருத்தில் ஆசிரியர் நல்லந்துவனார். ''அம்பாவாடலின் ஆய்தொடிக் கன்னியர்'' என 81ஆம் அடியை, ''வெம்பா தாக யன்நில வரைப்பென'' என்னும் 80ஆம் அடியை எதுகை அமையுமாறு பாடியிருக்கலாம். பின் வந்த உரையாசிரியர் அம்பா ஆடல் எனப்பிரிக்காமல், அம்பா ஆடல் எனப் பிரித்து அதற்கேற்பப் பொருள் கூறியுள்ளார்.

'பாவாடல்' என்னும் தொடர் காலப் போக்கில் 'பாவை' என்னும் குறுகிய வடிவத்தைப் பெற்றிருக்கக்கூடும். மதுரை, சென்னை கோவை என்ற பெயர்கள் தம் பழைய வடிவம் குறுகி இனிய எளிய மரூஉச் சொற்களாய் அமைந்திருப்பது இதற்குச் சான்றாகும்.

திருப்பாவையில் 2 , 3, 13 ஆகிய மூன்று பாடல்களில் 'பாவை' என்ற சொல் இடம் பெற்றுள்ளது. அந்த மூன்று பாடலிலும், 'நோன்பு' என்ற ஒரு பொருளே பொருந்து 'பாவை' என்ற சொல் இடம்பெறவில்லை

இந்தப் பாவை நோன்பில் இலளம் பெண்கள் பாடுவதையும், நீரில் ஆடுவதையுமே,சிறப்பான செய்தியாகத் திருப்பாவையும், திருவெம்பாவையும் கூறுவதைக் காண்கிறோம். திருப்பாவையில், பெண்கள் மார்கழித் திங்கள் மதி நிறைந்த நாளில் பாடி நீராடும் வழக்கம் பற்றிப் பல பாடல்களில் (1, 2, 4, 13, 20) கூறப்பட்டிருப்பதை அறிகிறோம். இவ்வாறே திருவெம்பாவையிலும் ''இறைவன் புகழைப் பாடி நீராட வேண்டும்'' என்று இளம் பெண்கள் விரும்புவதைப் பல பாடல்களில் (11, 12, 13, 14, 15, 17, 18, 20) காண்கிறோம். இதனால் பாடி ஆடுதலையே 'பாவாடல்' குறிக்கும் எனக் கொள்வதில் தவறில்லை. பாவாடலே பின் காலப்போக்கில் 'பாவை' எனக் குறுகிய வடிவம் பெற்றுள்ளது என்று எண்ணுவதற்கு இடமாகின்றது.

பழங்காலத்தில் 'தைந்நீராடல்' என்ற வழக்கே பின்னர் 'மார்கழி நீராடல்' ஆக மாறியுள்ளது. ஆண்டாளின் திருப்பாவை, மணிவாசகரின் திருவெம்பாவை ஆகிய பாவைப் பனுவல் இரண்டும் 'மார்கழி நீராடல்' என்றே குறிக்கின்றன. ''மார்கழி நீராட மகிழ்ந்து'' என 4ஆம் பா7டலிலும், ''மார்கழி நீராடுவான்'' என 26ஆம் பாடலிலும் திருப்பாவை கூறுகிறது. ''போற்றியாம் மார்கழிநீர் ஆட'' என 20ஆம் பாடலில் திருவெம்பாவை கூறுகிறது.

முன்பனிக் காலத்தில், முழுநிலவு சேர்ந்த நாளில் விடியற்காலையில் இளம் பெண்கள் நீர்த்துறைக்குச் சென்று பாடி ஆடுதலைப் பரிபாடலில் விளக்கமாகக் கண்டோம். அப்பெண்கள் உலக நன்மையின் பொருட்டு மழை பெய்ய வேண்டுகிறார்கள் என்பதையும்,நல்ல ஆண்மகனைத் தம் கணவனாகப் பெறவேண்டும் என்பது அவர்தம் உள்ளக்குறிப்பு என்பதையும் 'தைந்நீராடல்' குறித்தது. அது போலவே, பின்னர் எழுந்த பாவைப் பாடல்களும், (1) முன்பனிக்காலம், (2) முழுநிலவு நாள், (3) விடியற்காலை, (4) இளம்பெண்கள், (5) நீராடச்செல்லல், (6) பாடியாடுதல், (7) மழை வேண்டுதல், (8) சிறந்த கணவனை அடைய விரும்புதல் ஆகிய எட்டுக் கருத்துக்களையும் கொண்டிருக்கக் காண்கிறோம்.

ஆயின், 'தைந்நீராடல்' பின்னர் 'மார்கழி நீராடல்' ஆக மாறியது எங்ஙனம்? பிறை நிலவின் வளர்ச்சியையும் தேய்வையும் கொண்டு, மிகப் பழங்காலத்தில் மாதத்தைக் கணக்கிட்டு வந்தார்கள். வானத்தில் பிறைதோன்றிச்சிறிது சிறிதாக வளர்ந்து முழுநிலாவாக முற்றிய நாளை மாதத்தின் இறுதிநாளாகவும், அதற்கு அடுத்த நாளை அடுத்த மாதத்தின் தொடக்க நாளாகவும் வகுத்துக் கொண்டார்கள். இந்த நிலாக்கணக்கு எளிதாகவும், எல்லோரும் அறியக் கூடியதாகவும் நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால் 'பருவம்' எனக்கூறும் பெரும்பொழுதுக்கு இக்கணக்குக் காலப்போக்கில் ஒத்து வரவில்லை; மாறுபட்டுநின்றது.

ஆவணி மாதமே அக்காலத்தில் ஆண்டின் தொடக்க மாதமாக இருந்து வந்தது. ஆவணி மாதத் தொடக்கத்தில் கார்காலமும் தொடங்க வேண்டும். ஆனால் நிலாக் கணக்குப்படி ஆவணி மாதத் தொடக்கமும் கார்காலத் தொடக்கமும் இணைந்து வரவில்லை; முன் பின்னாக மாறி வந்தன. (இப்போது இணைவதில்லை; இன்னும் துல்லியமாக க்கணக்குத் தேவைப்படுகிறது).

வானியல் கலை வளர வளரக் கதிரவன் பன்னிரண்டு ராசிகளிலும் மாறி மாறிப் புகுந்து சுற்றி வருவதைப் பின்வந்தோர் அறிந்தார்கள்; இந்த அறிவின் பயனாகக் கதிரவனின் நிலையைக் கொண்டு ,பெரும்பொழுதையும், அதனுள் அடங்கிய மாதத்தையும் துல்லியமாகக் கணக்கிடக் கற்றார்கள். அதுமுதல் நிலவைக் கொண்டு வகுக்கும் எளிய மாதக் கணக்கு மறையலாயிற்று.

பழைய நிலாக் கணக்குப்படி, மார்கழியில் வரும் முழுநிலவுநாள் அந்த மாதத்தின் இறுதி நாளாகும். மார்கழியும் தையும் முன்பனிப் பருவ மாதங்கள். இந்த மாதங்கள் இணையும் நாள் முன்பனியின் நடுநாளாக அமைகிறது. அந்நாளில் பனியும் மிகுந்திருக்கும். குளிர் மிகுந்த அந்த நாளில், விடியற்காலையில், தண்ணீரில் பாடி ஆடுவது தவமாகும். அதனையே 'நோன்பு' என்றும் கொண்டாடினார்கள்.

மார்கழி மாதம் முழுநிலவு நாள் வாய்த்த இரவின் பின்பகுதியான விடியற் காலையில் இந்த நோன்பு நிகழ்ந்தது வந்தது. இந்த விடியற்காலை நேரம் தை மாதப் பிறப்பாகவும் அமைந்திருந்தது. அதனால் இதனைத் 'தைந்

நீராடல்' என்று பழங்காலத்தில் அழைத்தார்கள். நிலாக்கணக்கு மறைந்து கதிரவன் கணக்கு நடை முறைக்கு வந்தபின்னர், மார்கழியில் வரும் முழுநிலவு நாள் மார்கழியின் இறுதி நாளாகப் பொருந்தி வரவில்லை. மார்கழியில் ஏதோ ஒருநாள் மதி நிறைந்து வரக்கூடியதாக மாறிவிட்டது. அவ்வாறு மாறவே, மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில் நீராடும் பாவைநோன்பு அம்மாதம் முழுவதிலும் எல்லா நாளிலும் வரும் நோன்பாகிவிட்டது. மார்கழியில் செய்யும் நீராடல் 'மார்கழி நீராடல்' என வழங்குவதாயிற்று. 'தைந்நீராடல்' என்று குறிக்கும் வழக்கம் நீங்கிற்று. நோன்பு ஒன்றே; பெயர் மட்டும் வேறு. மார்கழியில்நீராடவே 'மார்கழி நோன்பு' ஆக மலர்ந்தது.

இறைவனுக்குக் கோயில் எடுத்து வழிபடும் முறைவகுத்தபோது, அந்த வழிபாட்டு முறை மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. மார்கழியில் விடியற்காலையில் நீர்த்துறைக்குச் சென்று ஆடிப்பாடி மகிழ்ந்த பின்னர்த் திருக் கோயிலுக்குச் சென்று வழிபடும் வழக்கம் வளரத் தொடங்கியது. சிறு பெண்கள் மட்டுமே அன்றிப் பெரியோரும் ஏனையோரும் அவ்வழக்கத்தை மேற்கொண்டனர். மார்கழி மாதம், வழிபடும் மாதமாகச் சிறப்புற்றுள்ளது.

## மெய்கண்டார் காலம்

சிவஞானபோதம் என்னும் சைவசித்தாந்தத் தலைமணி நூலை இயற்றியருளியவர், ஆசிரியர் மெய்கண்டார் ஆவர். திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலில், முதல் திருச்சுற்றின் வடபுறச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள,

> ''சுவஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் இராஜ ராஜ தேவர்க்கு யாண்டு பதினாறாவது, இடபஞாயிற்று இருபத்தெட்டாம் திகதியும் சனிக்கிழமையும் பெற்ற மிருகசீரிஷத்து நாள், உடையார் திருவண்ணாமலை யுடைய நாயனார் கோயில் சீமாகேசுவரக் கண்காணி செய்வார்களும், தேவகன்மி கோயிற் கணக்கனும், திருவெண்ணெய்நல்லூர் உடையான் மெய்கண்ட தேவன் ஊருடைப் பெருமாள் ஆன எடுத்தது வலிய வேளார்க்குக் கல் வெட்டிக் கொடுத்த பரிசாவது........
>
> இந்நாயனார் தேவதானம் செங்குன்ற நாட்டு மாத்தூர் ஆன இராஜ ராஜ நல்லூரில் இவர் வெட்டுவித்த மெய்கண்ட தேவப் புத்தேரிக்குக் கடமை இறுக்கும் இடத்துத் திருத்தின ஆண்டு கால்வரிசையும் பாடிகாவலும் இறுக்கக் கடவதாகவும்.....'

எனவரும் கல்வெட்டு ஒன்று, நாம் மெய்கண்ட தேவரின் காலத்தை அறியத் துணைபுரிகின்றது. மூன்றாம் இராசராச சோழன் கி. பி. 1216-ஆம் ஆண்டில் அரியணை ஏறினான். அவனது பதினாறாம் ஆட்சியாண்டில் இக் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. எனவே இக்கல்வெட்டு அமைந்த காலம் கி.பி. 1232 ஆகும். அதற்குச் சிறிது முன்னரும் பின்னரும் ஆகவே, ஆசிரியர் மெய்கண்ட தேவர் வாழ்ந்தனராதல் வேண்டும். எனவே அவர்தம் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முதற்பாதி எனக் கொள்ளுதல் பொருத்தம்.

—ஆசிரியர்.

## சிவஞானபோதம் (பெயர் விளக்கம்)

'சிவஞானபோதம்' என்னும் சொற்றொடர், சிவம் ஞானம் போதம் என்னும் மூன்று சொற்களைத் தன்னகத்தே கொண்டது. சிவம்-முழு முதற்பெரும் பொருள். ஞானம்-மெய்யுணர்வு. போதம்-தெளிவித்தல். 'முழுமுதற் பெரும்பொருளைப் பற்றிய மெய்யுணர்வினைத் தெளிவிப்பது சிவஞான போதம்' எனப்படும் நூல் ஆகும்.

> ''நின்ற சிவம் ஒன்று; அதனைத்
> தேர்தல் ஞானம்; நிகழ்போதம்
> தேர்ந்த அதனைத் தெளிவித்தல் ஆகும்''

எனத் திருவாதவூரடிகள் புராணம் பாடிய கடவுள் மாமுனிவர், இத் தொடருக்குப் பொருள் விளக்கியுள்ளார்.

ஆசிரியர் சிவஞான சுவாமிகள், தமது சிவஞான போத மாபாடியம் என்னும் பேருரையின்கண், சிவஞானம்-சிவாகமம்; போதித்தல்-நிச்சயப் பொருள் உணர்த்துதல்; 'சிவாகமங்களின் பொருள் நிச்சயம் உணர்த்துவது சிவஞானபோதம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

—ஆசிரியர்.

# திருவானைக்கா அகிலாண்டநாயகி மாலை

பொழிப்புரை: ந ரா. முருகவேள், M.A., M.O.L.,

(விநாயகர் துதி)

திருவளர் கபோல மதப்பெருக் குண்டு
தெவிட்டுகார் வண்டின மெழுந்து
மருவளர் செய்ய சாந்தினுள் மறைந்த
மத்தக மீதுதங் கிடுதல்,
கருவளர் மணிகள் பதித்தபொற் குடத்திற்
கவினவீற் றிருந்தருள் கொழிக்கு
முருவளர் செல்வ விநாயகன் பொற்றாள்
உபயபங் கயம்முடிக் கணிவாம்

**முன்னுரை:**

திருவானைக்கா என்பது தேவாரப் பாடல்பெற்ற சோழநாட்டுச் சிவத்தலங்களுள் ஒன்று. இதனைப் பஞ்சபூதத் தலங்களுள் ஒன்று எனவும் கூறுவர். காஞ்சிபுரம் திருவாரூர் (பிருதிவி), திருவானைக்கா (அப்பு), திருவண்ணாமலை (தேயு), திருக்காளத்தி(வாயு),சிதம்பரம் (ஆகாசம்) ஆகிய ஐந்தும் பஞ்சபூதத் தலங்கள் எனப்படும்.

திருவானைக்கா அப்புத்தலம் எனப் படுதற்கு ஏற்ப, இக்கோயிலின் கருவறையில் சிவலிங்கத் திருவுருவம் எழுந்தருளியுள்ள இடத்தைச் சுற்றிலும், இடையறாது எப்பொழுதும் நீர் ஊறிக் கொண்டிருத்தல் காணலாம். அதனால் இங்குள்ள பெருமானுக்கு ''நீர்த்திரள்நாதர்'' என்பது பெயர். ''திருவானைக்கா வுளானைச் செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே'' என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்.

திருவானைக்கா என்னும் இத்தலத்தினுள்ள அம்பிகைக்கு 'அகிலாண்ட நாயகி' என்பது பெயர். இவ்வம்பிகையின்மீது திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய சிறந்த கவிதை நூலே, ''திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை'' என்பது. அம்பிகையின் சிறந்த துதிப்பாடல் இலக்கியங்களுள் ஒன்றாக மதித்துப் போற்றத் தகுந்த இவ்வரிய இனிய நூலின் கவிதைப் பொருள் நலத்தினை, ஈண்டுச் சுருக்கமாகக் கண்டு சுவைத்து மகிழ்வோம்.

### காப்புச் செய்யுளின் உரை

சிறப்புமிகுந்த கபோலத்தில் இருந்து பெருகுகின்ற மதநீரை உண்டு, தெவிட்டிய கருமை நிறம் பொருந்திய வண்டின் கூட்டங்கள் புறப்பட்டு, நறுமணம் கமழ்கின்ற சிவந்த சாந்து பூசப்பெற்று அதன்உள்ளே மறைந்திருக்கின்ற மத்தகத்தின்மீது வந்து தங்கியிருத்தல், அழகுமிகுந்த சிறந்த நவமணிகள் பதிக்கப்பெற்றுள்ள பொற்குடத்தைப்போல விளங்க, வீற்றிருந்து, அடியவர்களுக்கு அருளைப் பெரிதும் வழங்கியருளுகின்ற, அழகுமிக்க செல்வவிநாயகரின் பொன்போன்ற இரண்டு தாமரை மலர்களாகிய திருவடிகளை, நாம் நமது தலையிற்சூடி வணங்குவோமாக!

[நூலின் தொடக்கத்தில் மங்கலச் சொல் அமைந்திருத்தல் நலம் பயக்கும் ஆதலின், ''திருவளர்'' என்று இக்காப்புச் செய்யுள் தொடங்கப்பெற்றது. திருவானைக்காவிலுள்ள விநாயகருக்குச் செல்வவிநாயகர் என்பது பெயர். ஆதலின் அவரை ''உருவளர் செல்வ விநாயகன்'' என்று ஆசிரியர் குறிப்பிட்டு அருளினார். கன்னம் கபோலம் பீசம் என்னும் மூன்று இடங்களிலிருந்து யானைகளுக்கு மதநீர் பெருகும் என்பர். விநாயகரின் கபோலத்திலிருந்து பெருகுகின்ற மதநீரை வண்டினங்கள் நிரம்ப உண்ணுகின்றன. உண்டு தெவிட்டிய பின், அவைகள் கபோலத்திலிருந்து புறப்பட்டு விநாயகரின் மத்தகத்தின்மீது வந்து அமர்கின்றன. அம்மத்தகம் நறுமணம் கமழ்கின்ற சிவந்த சாந்து பூசப்பெற்றிருத்தலால், அச்சாந்தினால் மறைக்கப்பட்டுள்ளது. அங்ஙனம் மறைக்கப்பட்டிருக்கும் மத்தகத்தில் கரிய வண்டினங்கள் தங்குதல், பொற்குடத்தில் நவமணிகள் பதிக்கப்பெற்று விளங்குதலைப் போன்று திகழ்கின்றது. மத்தகம், பொற்குடம். வண்டினங்கள் அமர்ந்திருத்தல், அப்பொற்குடத்தில் நவமணிகள் பதித்திருப்பதைப்போல அழகுறக் காட்சிதருகின்றது.]

## (நூல்)

### நிலவும் வெயிலும் :

பூமலி செய்ய பொலிமணித் தோடு
புதுவெயி லெறித்துமுள் மலர்ந்த
தேமலி யாம்பற் செய்யவாய் முளைத்த
சிறுநகை யிளநிலா வெறித்து
மாமலி குழனின் றவர்முக மலர்கண்
வளந்தர முன்புவந் தருள்வாய்
காமலி வானும் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (1)

அகிலாண்ட நாயகி அணிந்துள்ள மாணிக்கத் தோடுகள், சிறந்த ஒளி வீசித் திகழ்ந்து, புது வெயில் எறிக்கின்றன; அப் பெருமாட்டியின் சிவந்த திருவாயினின்று அரும்பும் புன்முறுவல், அழகிய இனிய ஒளியைத் தோற்றி, இள நிலா எறிக்கின்றது: இங்ஙனம் வெயிலும் நிலவும் ஒருங்கே பரப்பும் அம்பிகையின் சிறந்த தோற்றம், காண்பார் கண்களுக்கு அரிய விருந்தாக அமைந்து திகழ்கின்றது. (1)

### கடைக்கண் பார்வை :

வடதிசை யவனுஞ் சமழ்ப்புறக் கனகம்
வாய்ந்துதென் றிசைநகத் தமருங்
குடமுனி யவனுஞ் சமழ்ப்புறக் கல்வி
கூர்ந்துமிக் குயர்ந்தவர் பலருந்
தடமலர் புரைநின் முகத்திரு கடைக்கட்
சார்பொருங் குற்றவ ரன்றோ
கடவுளர் மனம்புக் கமர்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (2)

அகிலாண்ட நாயகியே! வட திசையில் உள்ள குபேரனும் நாணும்படி அளவிறந்த செல்வம் பெற்றும், தென்றிசையில் உள்ள பொதிய மலையில் விளங்கும் அகத்தியரும் நாணும்படி சிறந்த கல்வியில் தேர்ந்தும், மிகவும் உயர்ந்த பெருமையுற்றுத் திகழ்பவர்கள் எல்லோரும், நின்னுடைய தாமரை மலர் போன்ற திரு முகத்தின் கடைக்கண் பார்வையின் அருள் முழுவதும் பெற்றவர்களே யன்றோ! (2)

### அம்மி மிதித்தல் :

விழிவிருந் துதவு நின்றிரு மணத்தில்
விமலனார் கரமலர் மேற்கொண்
டொழிவரு கருங்கன் மிசையுறு நின்தாள்,
உற்றவென் கரமலர் மேற்கொண்
டிழிவற வடியேன் மனக்கலி னிடத்து
மியைந்துறு மென்றுனைத் துதித்தேன்
கழிநசை முனிவர் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (3)

அகிலாண்ட நாயகியே! திருமணக் காலத்தில் சிவபெருமான் தம் திருக்கையால் எடுத்து அம்மியாகிய கல்லின் மீது வைத்த நின் திருவடிகள், என்னுடைய கைகளுக்கும் எளிவந்து, என்னுடைய மனம் ஆகிய கல்லின் மீதும் எழுந்தருளித் தங்கும் என நினைந்து, உன்னை யான் பல காலும் துதிக்கின்றேன். (3)

### துணை அழைத்துவா :

அடியனேன் கொடிய னென்றுமுன் வருதற்கு
அஞ்சினை யென்னின்வெங் கூற்றம்
மடியமுன் னுதைத்தான் றுணையடைந்
தேனும்
வருதிமற் றதுநினக் கரிதோ
நெடியவன் பிரம னிந்திரன் முதலோர்
நித்தமும் தாழ்ந்துசூழ்ந் தேத்திக்
கடியவெவ வினைதீர்த் துயர்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (4)

அடியவன் ஆகிய என்னை, மிகவும் கொடியவன் என்று நினைத்துக் கொண்டு, என் முன் வந்து அருள் புரிவதற்கு நீ அஞ்சுகின்றாய் எனில், முன்னொரு காலத்தில் கொடிய கூற்றுவனை உதைத்த நின் கணவரைத் துணையாக அழைத்துக் கொண்டேனும் வந்து, நீ எனக்கு அருள்புரிவாயாக! (4)

### மாபாதகனுக்கு அருளிய மாட்சி:

பாவிநீ நின்முன் வருவது தகாதென்
பரிசினுக் கென்பையேன் முன்ன
மாவிசூழ் மதுரை யகத்துமா பாவி
யாயினா னொருவன்முன் முக்கட்
கோவினோ டடைந்த குணத்திநீ யலையோ
குலவது மறந்தனை கொல்லோ,
காவியங் கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (5)

''நீ மிகவும் பாவி! உன் முன்னே வருவதும், வந்து அருள் புரிவதும், என்னுடைய இயல்புக்குச் சிறிதும் தகாது'' என்று நீ கூறுவையே யானால், மதுரையில் முன்னே ஒரு காலத்தில் மாபாதகம் செய்த ஒருவனுக்கு, அருள் புரியும் பொருட்டுச் சிவபிரானோடு எழுந்தருளிப் போந்த அருட் குணம் உடையவள் அல்லவோ நீ! அதனை நீ மறந்து விட்டாயோ? (5)

### ஞானப்பால் ஈந்த புகழ் :

பண்டுநீ பெருமா னருள்வழி புகலிப்
பாலனுக் களித்தனை ஞானம்
மண்டுமற் றதனான் முழுப்புகழ் நினக்கே
யாயதோ இரங்குபு நீயே
தொண்டுகொண் டடியேற் களித்தனை
யாயிற்
றூயநிற் கேமுழுப் புகழாங்
கண்டுநேர் மொழியார் பயில்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (6)

முன்பு ஒரு காலத்தில் சிவபெருமான் பணித்தருளியவாறு, புகலி (சீர்காழி)யில் தோன்றிய குழந்தையாகிய திருஞான சம்பந்தர்க்கு ஞானப்பால் அளித்தாய்! அதனால் ஏற்பட்ட புகழ்நினக்கே முழுவதும் உரியதாகாமல், சிவபிரானுக்கும் உரியதாயிற்று. என்னைத் தொண்டு கொண்டு, எனக்கு நீ அங்ஙனம் அளிப்பாயானால், நினக்கே முழுப் புகழும் உண்டாகும்.

(6)

### பித்தன் எனும் பெயர் :

அளவறு பிழைகள் பொறுத்தரு ளின்னை
அணியுருப் பாதியில் வைத்தான்
றளர்பிழை மூன்றே பொறுப்பவ டன்னைச்
சடைமுடி வைத்தன னதனாற்
பிளவியன் மதியம் சூடிய பெருமான்
பித்தனென் றொருபெயர் பெற்றான்
களமர்மொய் கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (7)

திருவானைக்கா அகிலாண்ட நாயகியே! ஆன்மாக்கள் செய்யும் அளவற்ற பிழைகளையும் பொறுத் தருள்பவள் நீ! அத்தகைய நின்னைச் சிவபிரான் தன் அழகிய திருமேனியில் பாதியள வில் மட்டுமே வைத்தான். ஆனால் மூன்று பிழை கள் மட்டுமே பொறுக்கும் இயல்புடைய, தண் ணீர் ஆகிய கங்காதேவியைத் தன் தலையிலுள்ள சடை முடிமேல் தூக்கி வைத்துக் கொண்டான். இதனால்தான் சிவபிரான் 'பித்தன்' என்ற ஒரு பெயரைப் பெற்றான் போலும்! (7)

### அங்குசமும் பாசமும் :

பெரும்புக ழமைந்த நின்பதி யென்னும்
பிரணவ குஞ்சரம் நின்கை
யரும்புவிற் கரும்பு விரும்புபு கவரு
மடல்புரிந் தென்றுளங் குறித்தோ
வரும்புகர் முகங்கொ ளங்குச பாசம்
வயங்குற வேந்தினை நாளுங்
கரும்புய னிறத்தோன் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (8)

அகிலாண்ட நாயகியே! நின்னுடைய திருக் கைகளில் அங்குசம் - பாசம் என்னும் இரு கருவிகளை நீ ஏந்திக்கொண்டிருக்கின்றாய். அதற்குக் காரணம் யாதோ? நின்னுடைய கண வர் ஆகிய பிரணவகுஞ்சரம் (சிவபெருமான் ஆகிய யானை), நின் கையிலுள்ள வில்லாகிய கரும்பை விரும்பி வலிமையினாற் கவர்ந்து கொள்ளுதல் கூடும் என்று கருதியே, நீ அவற்றை நின் திருக் கைகளில் ஏந்தியிருக்கின்றனை போலும்! (8)

### இழப்பு :

யானென தென்னுஞ் செருக்கிழந் தவர்மற்
றிழப்புறார் நின்னையீ துண்மை
தானென மறைகண் முழங்கவு முணராச்
சழக்கனே னினையிழந் துழல்வேன்,
மீனென வயங்குங் கண்ணினாய்கொடியேன்
வினைக்குமோ ரிறுதியுண் டாங்கொல்
கானென அரம்பை சூழ்திரு வானைக்
காவகி லாண்டநாயகியே (9)

யான் எனது என்னும் செருக்கினை இழந்த வர்கள், நின்னை ஒரு போதும் இழக்கமாட்டார் கள். இஃது உண்மைதான் என்று மறைகள் முழங்கு கின்றன. முழங்கினாலும், அதனையுணர்ந்துகொள் ளாத சழக்கன் ஆகிய யான், நின்னை இழந்து, (யான் எனது என்னும் செருக்கினை இழக்க விரும் பாமல்), உழன்று கொண்டிருக்கின்றேன். என்னு டைய தீ வினைக்கும் ஓர் இறுதி யுண்டோ? (9)

### நினக்கே அடைக்கலம்:

விழியிடந் தப்பி மகவரிந் தூட்டி
விருப்புறு தந்தைதா டடிந்து
பழியகன் மனையை யுதவிமற் றின்னும்
பலசெயற் கரியசெய் தார்க்கே
மொழியுநின் கொழுந னருள்செய்வா
னென்னால்
முடிதரா தென்றுனை யடைந்தேன்
கழியுணர் வுடையார் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (10)

கண்ணப்பர் கண்ணைப் பெயர்த்து அப்பியும், சிறுத்தொண்டர் குழந்தையை அரிந்து உணவு சமைத்தும், சண்டேசுரர் தம் தந்தையின் கால் களை வெட்டியும் வழிபட்டது போல, மற்றும் பற் பல செயற்கருஞ் செயல்களைச் செய்து வழிபடு பவர்களுக்கே, நின் கொழுநன் ஆகிய சிவபெரு மான் அருள் புரிவார். எளியேனால் அத்தகைய செயல்களைச் செய்ய ஒரு சிறிதும் இயலாது. அத னால் ,யான் அவரை விட்டு விட்டு, நின்னையே அன்புடன் அடைக்கலமாக வந்து புகுந்தேன். என் னைக் காப்பாற்றுவது நின் கடமையே ஆகும். (10)

### மருதநிலமும் உவர்நிலமும் :

வழிபடு மடிய ராயினார் தமக்கே
வழங்குதுங் கருணைவே றாய
பழிபடு மவர்க்கு வழங்குறா மென்னில்,
பயோதர மருதமு னன்றிப்
பொழிசுவை நறுநீர் புல்லுவர் நிலத்தும்
பொழியுமே புண்ணியப் பொருளே
கழிதவி றென்னங் காத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (11)

அகிலாண்ட நாயகியே! 'வழிபடும் அடியார் களுக்கு மட்டுமே, யான் திருவருள் புரிவேன். வழிபடாமற் பழிபடும் தீவினையாளருக்கு, யான் அருள் வழங்குதல் இல்லை' என்று கூறி, நீ என்னை வெறுத்து ஒதுக்கி விட வேண்டா! மேகமானது விளைந்து பயன்படும் நல்ல மருத நிலத்தில் மட்டு மே பெய்வதில்லை. பயன்படாத உவர் நிலத்தி லும் கூட, மேகம் மழை பொழிகின்றதன்றோ? (11)

### சிபாரிசு செய்யும் திறம்:

கொடியவ னிவற்கு மருள்புரி யென்றுன்
கொழுநனுக் கெனைக்குறித் துணர்த்த
முடிவிலின் னருளா லெண்ணினை யேலம்
முதல்வனின் னூடலை யுணர்த்த
வடிபணி பொழுதி லுணர்த்திடல்வேண்டும்
மஃதுடன் பலிக்குநீ யறிதி
கடிதலில் கழகஞ் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (12)

'கொடியவன் ஆகிய இவனுக்கும் அருள் புரிந்தருள்க' என்று, நின் கொழுநன் ஆகிய சிவ பெருமானுக்கு என்னைக் குறித்துப் பரிவுரை (சிபாரிசு) கூற, நீ நின் அளவில்லாத அருள் காரண மாக எண்ணுவாயானால், ஒன்று செய்தருள்க. சிவ பெருமான் நின்னுடைய ஊடலைப் போக்குவதற் காக, நின் திருவடிகளில் விழுந்து வணங்க முற் படும் பொழுதே, என்னைப் பற்றி நீ அவரிடம்

பரிவுரை கூறியருளுதல் வேண்டும். அது தான் உடனே பலித்து நிறைவேறும். (12)

[''மனைவி உயர்வும் கிழவோன் பணிவும், நினையுங் காலைப் புலவியுள் உரிய'' என்னும் தொல்காப்பியச் சூத்திரம், ஈண்டு அறிந்து இன்புறற்பாலது.]

**முத்தொழிற்கும் மூலம்:**

தாவருஞ் சிருக்கு மணிவடஞ் சங்கு
 சக்கரஞ் சூற்படை யிலைவே
லோவருஞ் சிறப்பின் வேறுவே றேந்து
 முண்மையா லொண்மல ரோன்முன்
மூவரு மியற்று மூவகைத் தொழிற்கும்
 மூலநீ யென்பது தெரிந்தேன்
காவரு மலர்நல் கிடுந்திரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (13)

அகிலாண்ட நாயகியே! சிருக்கு (நெய்த் துடுப்பு), செபமாலை, சங்கு, சக்கரம், சூலம், வேல் முதலிய படைகள் பலவற்றையும் நீ ஏந்திக் கொண்டிருக்கும் இயல்பினால், பிரமன் திருமால் உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் செய்கின்ற மூவகைத் தொழில்களுக்கும், மூலம் நீயே என்பதனை, யான் அறிந்து கொண்டேன். (13)

**அடைந்தோர்க்கு அருள்வாய் :**

தாயினைக் கொன்றுந் தந்தையைக்
 கொன்றுந்
 தவலரு மனைவியைக் கொன்றுஞ்
சேயினைக் கொன்றுங் கடும்பினைக்
 கொன்றுஞ்
 சேர்ந்தவர்க் கருள்வன்நின் கொழுநன்
வீயினைப் பொருவும் பதமடைந் தார்க்கே
 விருப்பின்நீ யருள்வதோர்ந் தடைந்தேன்
காயினைச் சுமந்த பொழிற்றிரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (14)

தாய் தந்தை மனைவி மக்கள் சுற்றத்தினர் என்பவரைக் கொன்று அடைந்தவர்க்கே நின் கணவன் அருள் செய்வான்; ஆனால் நீயோ நின் திருவடியை அடைந்தவர்களுக்கு எல்லாம் விருப்பத்தோடு அருள்புரிவாய் என்பதை உணர்ந்து, யான் நின்னை அடைந்தேன்.

(இங்ஙனம் கொலை செய்தோர்முறையே பரசுராமர், சண்டேசர், செருத்துணையார், சிறுத்தொண்டர், கோட்புலியார் என்பவராவர்).

(14)

**தண்டப்படை :**

குற்றியை யடைந்த பசும்புலை யுழுநர்
 கொடியவன் னாஞ்சிலென் செயுமப்
பெற்றியி னின்னை யடைந்தநா யேனைப்
 பிறையெயிற் றந்தகன் கரத்துப்
பற்றிய தண்டப் படைசெய லென்னே
 பரவிய கருணைவா ரிதியே,
கற்றிணி மதில்கள் சூழ்திரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (15)

குற்றியை (வரப்பை) அடைந்த பசும்புல்லை, உழுபவர்களின் கொடிய நாஞ்சிற்படை (கலப்பை) என்ன செய்யமுடியும்? அதுபோல நின்னையே புகலிடமாக அடைக்கலம் புகுந்த என்னைக் கூற்றுவன் பற்றிய தண்டாயுதம் ஆகிய படை, யாது செய்ய இயலும்?

[தண்டம்(படை), தண்டம்(பயனற்றது), என்பது கருத்து. இஃது ஒருவகைச் சொல்லாட்சி நயம் (Pun) எனப்படும்]

(15)

முடிமிசை யொருமந் தாகினி வாழ
 முதல்வன்வைத் திடுதலிற் சிறந்த
கொடியவ ளென்றி யார்நினைப் பவர்
 காகோதர மெருக்கெலும் பாதி
படிதரு மிடத்திற் சற்றிட முடம்பிற்
 பாதியோ விடமருட் டாயே
கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (16)

அகிலாண்ட நாயகியே! நின் கணவராகிய சிவபெருமான் தமது காதலியாகிய கங்கை (மந்தாகினி) வாழ்வதற்குத் தம் சடைமுடியில் இடங்கொடுத்துள்ளார், ஒருகால் அது யார் என்று நீ ஐயுற்று வினவினால், சடைக்காட்டில் வளரும் ஒரு கொடி என்று சொல்லி, உன்னை ஏமாற்றிவிடக் கருதி, அருகில் பாம்பு எருக்கம்பூ எலும்பு முதலிய பொருள்களையும் இருக்குமாறு செய்துள்ளார். எனினும் அக் கங்கையை ஒரு கொடி என்று எவரும் நினைக்கமாட்டார்கள். சிறிய குறுகிய இடத்தில் உள்ள கங்கையாகிய அப்பெண், வசதியாக வாழும்படி, உன்னைப்போல அவளுக்கும் ஒரு பாதி இடம், நின் கணவரின் உடலில் கிடைக்கும்படி செய்தருள்வாயாக! (16)

**நீர்த்திரள்நாதர் அச்சம் :**

பெருவள னமைந்த நீருரு வாய
 பெருந்தகை, நீருரு வாய
வொருகுல மகளை மலர்மிசைத் தேவு
 முணர்தராக் காட்டிடை மறைத்தா
னருகுநுண் ணிடைநிற் கஞ்சியே யன்றே
 லணியுருப் பாதிமற் றிலையோ,
கருமுகி றவழு மதிற்றிரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (17)

அகிலாண்ட நாயகியே! நீருருவாய் விளங்கும் திருவானைக்காச்சிவபெருமான், நீருருவாகியகங்கை என்னும் ஒரு பெண்ணை, அயனும் அறிய முடியாத சடைக்காட்டிலே மறைத்து வைத்திருக்கின்றான். அது நினக்கு அஞ்சியே போலும்! இல்லையேல், நினக்குக் கொடுத்த பாதியிடம் போக, மற்றுப் பிறிதொரு பாகம் எஞ்சி இருக்கின்றதே! அதனை அவளுக்கு இடமாகக் கொடுத்திருக்கலாம்அன்றோ? (17)

**தலையில் அடிசூட்டல்:**

அலையடி யடைந்த வகத்தடி நிலையா
 தலையடி யேற்கிரங் குபுபுன்
றலையடி சூட்டிப் பிடியடி யென்பான்
 றடியடி விலக்கியா ளிமய
மலையடி யுதித்து வளர்ந்துவெண் ணாவன்
 மரத்தடி வாழ்பவற் புணர்ந்தாய்
கலையடி யுணர்ந்தார் புகழ்திரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (18)

இமயமலையின் அடியிலே உதித்து வளர்ந்து, வெண்ணாவல் மரத்தின் அடியில் வாழ்பவர்(சம்பு கேசுவரர்) ஆகிய பெருமானை மணந்து கொண்ட அகிலாண்ட நாயகியே! அலையின் தன்மையைப் பொருந்தி, மனமானது ஒரு நிலையில் நில்லாமல் அலைந்து திரியும் அடியவன் ஆகிய என்பால் இரக்கம்கொண்டு, என் புல்லிய தலையின் மேல் நின் திருவடி மலரைப் பதியவைத்து, 'பிடி அடி' என்று கூறி வெருட்டுபவன் ஆகிய இயமன், என்னைத் தன் தடியினால் அடித்து வருத்தாமல், அவனிடமிருந்து என்னை விலக்கிக் காப்பாற்றி ஆட்கொண் டருள்வாயாக! (18)

**தாய் மருந்துண்டல்:**

இருவினைச் சிமிழ்ப்புண் டுழல்கொடி
யவன்மற்
றிவற்கரு ளென்றிரங் குபுநின்
னொருமுத லவனுக் குணர்த்துதி வருத்த
முன்னலுன் பரிசினுக் கடாது
வருபசுங் குழவிக் குறுபிணி தீர்க்கு
மருந்தனை யன்றியார் நுகர்வார்,
கருமுகி லுறங்கு மதிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (19)

'இருவினையாகிய கயிற்றாற் கட்டுண்டு உழல்கின்ற கொடியவன் ஆகிய இவனுக்கு அருள் புரிந்தருள்க' என்று என்மீது இரக்கம் கொண்டு, நின் கணவருக்கு நீ வற்புறுத்திக் கூறுக. இங்ஙனம் கூறுதலில் நீ வருத்தம் (சிரமம்) கருதற்க. அது நின்னுடைய அருட்பண்புக்கு அமையாது. குழந்தை அடைகின்ற நோய்களுக்குத் தாயைத் தவிர, மருந்து உண்பவர்கள் வேறு யார் இருத்தல் இயலும்?

[''பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென, நோயுண் மருந்து தாயுண் டாங்கு'' எனவரும் குமரகுருபரர் திருமொழியை ஈண்டு நினைவு கூர்ந்து இன்புறுதல் தகும்.] (19)

**அழகிய செயல்:**

எடுப்பது பிச்சை யேந்துவ தோடாங்
கியக்குவ தொற்றையே றரைக்க
ணுடுப்பது புன்றோன் மற்றிவர் மனையா
யுற்றநீ யுயிர்வயிற் றறலா
யடுப்பது தவிர வூட்டுத லாதி
யறமெலாம் வளர்ப்பையீ தழகே
கடுப்பது தவிர்ந்த மதிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (20)

எடுப்பது பிச்சை, ஏந்துவது ஓடு, இயக்குவது காளை மாடு, உடுப்பது புல்லிய தோல் எனக் கொண்டுள்ள, எளிமை மிக்க ஒருவர்க்கு மனைவியாய் வாழ்க்கைப்பட்டுள்ள நீ, உலகிலுள்ள உயிர்களெல்லாம் வாழுமாறு முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தருள்கின்றாய்! இது மிகவும் வியக்கத்தக்க அழகிய செயலேயாகும். (20

**சகோரமும் காகமும்:**

முற்றவம் புரிந்து முழுமலந் துமித்த
மோனமெய்ஞ் ஞானிய ரன்றி,
மற்றவர் கவரப் படுங்கொனின் கருணை
வானகத் தெழுமதிக் கதிரை
நற்றவம் புரிந்த சகோரமோ கொடிய
நவில்கருங் காகமோ கவருங்
கற்றவர் புகழ்ந்து சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (21)

அகிலாண்ட நாயகியே! முற்பிறவிகளில் தவம் புரிந்து, மலம் முழுவதும் போக்கிக் கொண்ட மோன மெய்ஞ்ஞானியர்களைத் தவிர, மற்றையோர் நின் அருளைப் பெறுதல் இயலுமோ? வானத்தில் உதிக்கும் சந்திரனின் நிலவு ஒளியைச் சகோரப் பறவைதான், கவர்ந்துண்டு களிக்க முடியுமே யன்றி, காகம் அதனையுண்டு களித்தல் இயலுமோ? (21)

**ஓதிமமும் குரண்டமும்:**

தொண்டவாய் மனமா திகளொருங்
குய்க்குந்
தூயவ ரன்றிமற் றோரும்
அண்டரா தியரு மணுகரு நின்றா
ளடைவரோ வளவறு மேன்மை,
கொண்டவான் கங்கை யடைவதோ திமமோ
குரண்டமோ குணப்பெருங் குன்றே
கண்டவர் பவங்கா ணாத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (22)

தொண்டு செய்தலை விரும்பி, மனம் முதலிய கருவிகள் அனைத்தையும் நின் திருவடிகளிலேயே செலுத்திவரும் தூயவர்களே யன்றி, மற்றையோரும் தேவர் முதலியவர்களும் கூட, நின் திருவடிகளை அடையப் பெறுவார்களோ? அளவற்ற சிறப்பினையுடைய கங்கை யாற்றினை, ஓதிமம் (அன்னம்) அடைய முடியுமே யன்றி, மற்றைக் குரண்டம் (காகம்) அடையக் கூடுமோ? (22)

**குயிலும் அரிட்டமும்:**

இடையறா வன்பின் மெய்கொடு துதிப்பா
ரின்றுதி முன்னர்மெய்ந் நிழல்போற்
புடையறா வினையேன் பொய்கொடு
துதிக்கும்
புன்றுதி யெங்ஙன மென்னி,
னடையறாத் தேமாங் குயிற்குர லெதிரோர்
அரிட்டமுங் கதறுதல் பொருவுங்
கடையறா மருதஞ் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (23)

இடையறாத பேரன்பினால் உண்மையுணர்வு கொண்டு நின்னைத் துதிப்பவர்களின் இனிய துதிகளின் முன்னே, உடம்பின் நிழல் போலச் சிறிதும் விட்டுப் பிரியாமல் வினைகள் தொடரப் பெறும் பாவியேன் ஆகிய யான், அன்பு இன்றிப் பொய்யுணர்வு கொண்டு துதிக்கும் புல்லிய துதிகள், தேமாஞ் சோலைகளில் வாழ்ந்து பாடி மகிழும் குயில்களின் இனிய குரலின் முன்னே, வெறுப்பினை விளைவிக்கும் வகையில் மிகவும் இன்னாததாக, அரிட்டம் (கழுதை) கதறிக் கத்துதலுக்கே ஒப்பாகும். (23)

**கருப்பஞ்சாறு:**

*மறைபல துதிக்கு நின்பெரும் புகழை*
*வழுத்திய வான்றவர் நாவு*
*மறையுமோ மற்றைப் புல்லிய தெய்வத்*
*தமைபுக ழுறையுமே லினிமை*
*நிறைதரு கருப்பஞ் சாறவா வியநா*
*நிம்பநெய் யவாவுதல் போலுங்*
*கறையறு வளமை மலிதிரு வானைக்*
*காவகி லாண்டநா யகியே. (24)*

*வேதங்களெல்லாம் துதிக்கும் நின்னுடைய சிறந்த புகழை வழுத்திய பெரியோர்களின் நாக்குகள், பிற புல்லிய தெய்வங்களின் புகழையும் கூற முற்படுமோ? இனிமை நிறைந்த கருப்பஞ்சாற்றை விரும்பி யுண்ட நாக்கானது மிகவும் கசப்புவாய்ந்த நிம்பநெய் (வேப்ப எண்ணெய்)யையும் விரும்புதல் கூடுமோ? (24)*

**கோயில் புகாதவர்கள்:**

*மனைதொறு மிரப்புத் தொழில்கொடு புகுவார்*
*மறலித னாலயம் புகுவார்*
*நினைதர முடியாக் கருக்குழி பலவும்*
*நிரம்புற வோடுபு புகுவா*
*ரினையவர் புகாநின் றிருப்பெருங் கோயி*
*லேழையேன் புகவருள் புரிவாய்*
*கனைகடல் வாவி சூழ்திரு வானைக்*
*காவகி லாண்டநா யகியே. (25)*

*அகிலாண்ட நாயகியே! நின் திருக்கோயில் புகாதவர்களே, வீடு தோறும் பிச்சைக்குப் புகுவார்கள். எமன் உலகில் நரகம் புகுவார்கள்! எத்தனையோ பல பிறவிகளை எடுக்கக் கருக்குழிகளில் புகுவார்கள். இத்தகைய தீவினையாளர்கள் புகாத நின்னுடைய கோயிலில், ஏழையேன் புகுந்து நின்னைத் தினமும் வணங்க அருள் புரிவாயாக! (25)*

**பரிசன வேதி:**

*எண்ணருங் கொடிய பாதகம் பலவு*
*மியற்றுமா பாவியா னெனினு*
*நண்ணரு நினது திருவரு டோயி*
*னண்ணுத லரிதுகொல் புனிதம்*
*பண்ணருங் கொலைசெய் வாளும்பொன் னாமே*
*பரிசன வேதிதீண் டுதலாற்*
*கண்ணருங் கழனி சூழ்திரு வானைக்*
*காவகி லாண்டநா யகியே. (26)*

*நினைக்கவும் கூடாத பல கொடிய பாதகங்களை எல்லாம் செய்கின்ற பாதகன் நான்! என்றாலும் நினது திருவருளிற் கலந்தால், யான் தூய்மை பெறுதல் அரியதோ? செய்யத் தகாத கொலையைச் செய்கின்ற வாள், இரும்புக் கருவி தான் எனினும், பரிசனவேதி தீண்டுமாயின் ,அது பொன்னாக மாறுதல் திண்ணமே யன்றோ?*

*(பரிசனவேதி—இழிந்த உலோகங்களை உயர்ந்த பொன்னாக மாற்றுவது. (The Alchemist's stone). இதனை 'இரச குளிகை எனவும் கூறுவர். சித்தியார் சுபக்கம், 314:319) (26)*

**என் செயல் யாது ?**

*முழுவதுங் குணமே நாடின்முற் றாது*
*முகுந்தனா தியரிடத் தினும்நீ,*
*பழுதற வுணர்த்தா விடினுணர் வாரோ*
*பரமனைப் பண்டவர் புரிதோம்*
*எழுதரி தவரு மின்னரே லம்ம*
*வென்செயல் யாதெனப் புகல்கேன்*
*கழுவிய மணியிற் சூழ்திரு வானைக்*
*காவகி லாண்டநா யகியே. (27)*

*முழுவதுமே குணத்தை ஆராய்ந்தால், ஆட்கொள்ளல் இயலாது. திருமால் முதலியவர்களிடத்திலும் நீ கலந்து உணர்த்தாவிடில், அவர்கள் ஒன்றை உணர்வரோ? இறைவன்பால் அவர்கள் புரிந்த குற்றங்கள் எண்ணில்லாதவை. அவர்களே குற்றம் புரிவாராயின், ஒன்றும் போதா நாயேனின் செயல் எத்தகையதாக இருக்கும் என்று கூற வொண்ணுமோ? (27)*

**அழத் தெரியாத குழந்தை:**

*உலகிடை யழுத பிள்ளைபால் குடிக்கு*
*முண்மையென் றுரைப்பதற் கேற்ப*
*விலகுசீ காழி மழவழ வளித்தா*
*யின்முலைப் பாலழா விடினு*
*மலகற விரங்கி யளிப்பவ ரிலையோ*
*வத்தகு மழவியா னருள்வாய்*
*கலகமில் கழகஞ் சூழ்திரு வானைக்*
*காவகி லாண்டநா யகியே. (28)*

*'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்பது உலகில் வழங்கும் பழமொழி. அதற்கேற்ப, நீ சீர்காழிக் குழந்தை அழுதபோது இனிய முலைப் பாலை அளித்தாய்! குழந்தை அழாவிட்டாலும் கூட, இரக்கம் கொண்டு பால் தரும் தாய்மார்கள் உலகத்தில் இருக்கின்றார்கள் அல்லரோ? யான் அழத் தெரியாத சிறு குழந்தையைப் போன்றவன். எளியேற்கும் நீ அருள் செய்தல் வேண்டும். (28)*

**யாருக்குப் புகழ்:**

*அழுமழ வொன்றற் களித்தனன் றீம்பா*
*லம்பலத் தாடிய பெருமான்*
*பழுதற நீயு மளித்தனை தீம்பால்*
*பசித்தழு மிளமழ வொன்றற்*
*கெழுதரு மிவற்றா னினக்குறு புகழ்போ*
*லெம்பிராற் குண்டுகொ லியம்பாய்*
*கழுமணிச் சிகரி பொலிதிரு வானைக்*
*காவகி லாண்டநா யகியே. (29)*

*அழுத குழந்தை ஒன்றுக்கு (உப மன்னிய முனிவர்க்கு), அம்பலத்தில் ஆடுகின்ற பெருமான் முன்பு ஒரு முறை இனிய பால் அளித்தான். பசித்து அழுத இளங்குழந்தை ஒன்றுக்கு (திரு ஞான சம்தர்க்கு), நீயும் முன்பு ஒரு முறை பால் அளித்தாய்! இங்ஙனம் நீவிர் இருவருமே இரு குழந்தைகளுக்கு இனிய பாலை அளித்திருக்கின்றீர்! எனினும், நினக்குக் கிடைத்த புகழ் போல, இறைவனுக்குப் புகழ் ஏற்பட்டிருக்கின்றதா? கூறுவாயாக. (29)*

*[''பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்'' என வரும் திருப்பல்லாண்டுப் பாடல், ஈண்டு நினைவு கூர்தற்குரியது.]*

### எது சிறந்தது ?

இடையறா வன்பு பெருக்கிநீ பூசை
இயற்றிட வினிதுள முவந்து
சடையறா முடியோ னுறைதரப் பெற்ற
தண்ணிழ னாவலந் தருவோ
புடையறா தமர ருறைதரப் பெற்ற
பொலந்தரு வோசிறந் ததுகட்
கடையறாக் கருணை யாய்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (30)

இடையறாத அன்பு பெருக நீ பூசை செய்தலால், இனிது உளம் உவந்து சிவபெருமான் எழுந்தருளி விளங்கும் குளிர்ந்த நிழலையுடைய வெண் நாவல் மரமோ? அல்லது தேவர்கள் உறை தரப் பெற்ற கற்பக மரமோ? இரண்டினுள் எது சிறந்தது என்று கூறியருள்க. (30)

### பிறைச் சுவடு :

சிறுபிறைக் கொழுந்து வீற்றிருத் தலினாற்
றேவதே வன்றிரு முடிமேன்
மறுவிலச் சுவடு பொலிதரு மைய
மருவுறா தஃதுமற் றெவர்க்கு,
உறுமறைக் கரிய நின்னடி யகத்து
மொளிருமச் சுவடுகா ரணமென்
கறுவொழித் துரைப்பாய் புகழ்த்திரு
வானைக்
காவகி லாண்டநா யகியே. (31)

சிவபிரானின் திருமுடியில் சிறிய பிறைக் கொழுந்து வீற்றிருக்கின்றது. அதனால் தேவ தேவராகிய அவர்தம் திருமுடியின் மேல் அவ் இளம்பிறையின் சுவடு காணப்படும். அது கண்டு யாருக்கும் ஐயம் ஏற்படாது. அத்தகைய சுவடு வேறு எவரிடத்திலும் காணப்படாது. அங்ஙனமாக வேதங்களுக்கும் எட்டாத நின்னுடைய திருவடியிலும், அவ் இளம்பிறையின் சுவடு காணப்படுவதற்குக் காரணம் யாது? மறையாமலும் சினவாமலும் எனக்குக் கூறி அருளுக.

[ஊடலில், சிவபிரான் தமது திருமுடி சோய அம்பிகையின் திருவடிகளில் வீழ்ந்து பணிதலால், அவர்தம் திருமுடியில் உள்ள பிறையின் சுவடு, அம்பிகையின் பாதங்களிலும் காணப்படுகின்றது என்பது குறிப்பு.]
(31)

### பாதியே கவர்ந்தாய்:

எதிர்மலர் தொடுத்த மாரவே ளுடல
மெரிக்குண வாக்கிய பெருமா
னதிர்வரு மெய்யிற் பாதிநீ கவர்ந்தா
யமைதர முழுவதுங் கவர்ந்தா
லுதிர்தலி னினது திறமையா ருணர்வா
ரோங்கவன் வியாப்பியப் படலாற்
கதிர்படு மிதுவே யருடிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (32)

மலரம்புகளை ஏவிய மன்மதனின் உடலை எரிக்கு உணவாகும்படி செய்த சிவபெருமானின் உடம்பில், முழுவதையும் கவராமல், பாதியை மட்டுமே நீ கவர்ந்து கொண்டாய். முழுவதையும் கவர்ந்து கொண்டிருந்தால், எல்லாப் பொருள்களின் உள்ளும் பரவி வியாப்பியப் பொருளாக அவன் மறைந்திருத்தலினால், உனது பெருமையை ஒருவரும் உணர முடியாமற் போயிருக்கும். அதற்காகத்தான் யாவரும் நின் பெருமையை உணரும்படி சிவபெருமானின் திருமேனியில் பாதியை மட்டுமே, நீ கவர்ந்தாய் போலும்! (32)

### காடுபுக்க காரணம்:

தவவலி யுடையோர் பலரையு மயக்கிச்
சடைமுடி யோனெதிர் மயங்கி,
யிவருமம் மயக்காற் புணர்ந்தொரு மகவு
மீன்றமான் மோகினி தனித்துப்
பவர்படர் வனம்புக் குறைதன்மற்
றவன்மெய்ப்
பாதிநீ கவர்ந்ததோர்ந் தன்றோ
கவலரும் வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (33)

திருமால் முன்பு ஒருகால் மோகினி வடிவம் எடுத்தார்; தவ வலிமையுடையோர் (தாருகவன முனிவர்கள்) பலரையும் மயக்கினர்; ஆனால், சடை முடியையுடைய சிவபெருமான் முன்னே மயங்கினார்; அம்மயக்கத்தில் அவரைப் புணர்ந்து ஐயனார் என்னும் குழந்தையையும் பெற்றார். ஆயினும் அவர் தனித்துக் காடுபுக்கு வாழ்தலின் காரணம் யாது? தான் காதலித்தவரின் உடலிற் பாதியை நீ கவர்ந்து கொண்டாய் என்பதுதான் போலும்!

[''மாயோன் மேய காடுறை யுலகம்'' என்னும் தொல்காப்பிய நூற்பாவும், ''அஞ்சன முல்லையின் தெய்வம் என்று அருந்தமிழ் கூறும் செங்கண்மால்'' என வரும் சேக்கிழார் திருமொழியும் ஈண்டுக் கருதற்பாலன] (33)

### வேறு அலேம்:

நீயெனப் பெருமான் விரும்பியோர் தினத்து
நிகழ்தரப் பொலிவதும் புவிக்குத்
தாயெனப் படுநீ அவன்எனப் பொலியுந்
தன்மையும் வேறலேம் என்று
சேயெனப் படுபல் உயிர்க்கெலாம் உண்மை
தெரிப்பது போலுமீ தருளே
காயெனப் பவமுற் றகம்திரு வானைக்
காவகி லாண்ட நா யகியே. (34)

சிவபெருமான் நின்னைப் போலவும், நீ சிவபெருமானைப் போலவும், ஆண்டில் சிவராத்திரியாகிய ஒரு நாளில் விளங்கப் பெறுதல், சிவமும் சக்தியுமாகிய யாம் இருவரும் எமக்குள் வேறுபாடு உடையோம் அல்லோம் என்னும் உண்மையினை, உலகுயிர்களாகிய குழந்தைகளுக்குத் தெரிவிக்கும் அருளினாலேயே போலும். (34)

### எறும்பின் வளை:

பரவுநங் கருணை வான்றவ முடையார்
பாலலாற் புன்மையோர் போலும்
விரவுமோ வென்னி னெழுபெரு வெள்ளம்
விரிதரு வாரிதி மட்டோ

வுரவுதீ ருறவி யளையினும் புகுமே
யுவமையில் கோமளக் கொழுந்தே
கரவுதீர் முனிவர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (35)

அகிலாண்ட நாயகியே! 'நம்முடைய கருணை யானது சிறந்த தவமுடையவர்களிடத்தில் மட்டுமே பெருகிப் பரவும்; புன்மை (இழிந்த) இயல்பு உடையவர்களிடம் சென்று கலவாது' என்று கூறி, என்னை நீ புறக்கணித்தல் வேண்டா. பொங்கி எழுந்து பெருகி ஓடிவரும் வெள்ளமானது, மிகப் பெரிய கடலில் மட்டுமேயன்றி, மிகவும் சிறிய ஓர் எறும்பின் வளையினுள்ளும் சென்று புகுந்து ஓடிக் கலக்கின்ற தன்றோ! (35)

**பித்தன் என்று எண்ணேல்:**

சடையெனும் வனத்து வாழ்தருங் கங்கை
தனித்துறை வாள்கொலென் றெண்ணி
விடைமிசைப் பெருமான் அவளுயிர்
வாழ்வான்
மிலைந்தனன் கொன்றையாங் கன்னப்
பெடையன நடையா யனையவன் றனைநீ
பித்தனென் றெண்ணுதல் பிழையே
கடையுறா வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (36)

விடை ஊர்தியை உடைய சிவபெருமான், தனது சடையாகிய காட்டில் வாழ்கின்ற கங்கை யாகிய தன் காதலி, தனியாக இருத்தல் இயலுமோ? என்று எண்ணி, அவள் உயிர்வாழ்தற் பொருட்டே, மனைவியாகிய நினக்குரிய கொன்றை மாலையைத் தன் சடைமுடியில் சூடிக் கொண்டான். அன்னப் பெடையைப் போன்ற நடையை உடைய அகிலாண்ட நாயகியே, இவ் வுண்மை உணராது, நீ அவனைப் பித்தனென்று எண்ணிக் கொண்டிருத்தல், பெரிய பிழையே ஆகும் (36)

**உலகுயிர்க்குத் தாய் :**

பரவுறு முலகத் துயிரெலா மீன்று
பருவர லவையுறா தோங்க,
உரவுறு கருணை யால்வளர்த் திடுநீ
யொருமலை மகளென வுதித்து
விரவுறு புறவு கிளிமயில் பூவை
விரும்புபு வளர்த்தவா றென்னே
கரவுறு மவர்கா ணாத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (37)

உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் குழந்தைகளாய்ப் பெற்றெடுத்து அவைகளுக்கு ஒரு துன்பமும் வராமல் கருணையினால் வளர்த்து வருகின்ற நீ, மலைமகள் எனும்படி மலையரை யனுக்கு மகளாகத் தோன்றிப், புறவு கிளி மயில் பூவை ஆகிய பறவைகளை முன்பு விரும்பி வளர்த்த தன்மை என்னே! (37)

**காமாட்சி :**

பரிதிவந் துதய மெழமுறுக் குடையும்
பங்கய மலர்மிசை யுறைவா
ரரிமறு மார்பு மயன்றிரு நாவு
மமர்பவ ரென்பர்நின் முகமாம்
விரிமலர்க் கமலத் துறைவரென் றுணரார்
மேதினி மடமையென் சொல்கேன்
கரிசறு வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (38)

திருமாலின் மார்பில் விளங்கும் திருமகளும், பிரமனின் நாவில் இருக்கும் கலைமகளும், சூரியன் தோன்றுதலால் கட்டு அவிழ்கின்ற தாமரை மலரின் மீது அமர்ந்து வாழ்வதாக, உலக மக்கள் கூறுவர். நின்னுடைய முகமாகிய தாமரை மலரிலேயே அவ் இருவரும் வாழ்கின்றார்கள் என்பதனை, இவ் வுலக மக்கள் உணரவில்லை. இவர்களின் அறியாமை நிலையை யான் என்னென்று கூறுவேன்?

[அம்பிகையின் வலக்கண்ணாகத் திருமகளும், இடக்கண்ணாகக் கலைமகளும் விளங்குகின்றனர் என்பது குறிப்பு. திருமகளையும் கலைமகளையும் தனக்கு இரு கண்களாகக் கொண்டிருத்தல் பற்றியே, அம்பிகைக்குக் காமாட்சி என்பது பெயராயிற்று, கா-கலைமகள்; மா-திருமகள், அட்சம்-கண்; அட்சி-கண்ணாக உடையவள். காமாட்சி ஆகிய அம்பிகையை வழி படுவோர், கல்வியும் செல்வமும் நிரம்பப் பெறுவர் என்பது கருத்து] (38)

**தாமரை தாங்குவார்:**

விரும்புநின் செங்கை தாங்கலால்இரண்டாம்
வேற்றுமை விரித்துரை செய்யா
தரும்புதா மரைதாங் குவார்என லான்மூன்
றாவதும் படுசொலும் விரிக்கும்
பெரும்புவி மலர்பூ மாதெனும் பெயர்கள்
பெறும்வினைத் தொகைகுணத்
தொகைப்பேர்
கரும்புபைங் கமுகிற் பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (39)

அகிலாண்ட நாயகியே! திருமகளையும் கலை மகளையும் 'தாமரை தாங்குவார்' எனக்கூறுவர் அதற்கு, நின் சிவந்த கைகளாகிய ''தாமரையைத் தாங்குபவர்'' என்று இரண்டாம் வேற்றுமை உருபு விரித்தோ அல்லது ''தாமரையால் தாங்கப்படுபவர் என மூன்றாம் வேற்றுமை உருபும், படு எனும் செயப்பாட்டு வினையுறுப்புச் சொல்லும் விரித்தோ பொருள்கொள்ளுதல் வேண்டும். இல்லையேல் 'மலர்மாது'—'பூமாது' என்னும் அவர்தம் பெயர்கள் ''மலர்கின்ற மாது'' என வினைத்தொகையும் ''பூவின் மென்மையை உடைய மாது'' எனப் பண்புத்தொகையும் ஆகிய பெயர்களாகவே அமையும். (39)

**பழவினை :**

நந்திய வறியா மையினினைத் துதிப்பே
னாயினே னாயினு மதனால்
முந்திய வினைமுற் றொழிதரா துறையு
முறைமையென் மறவியினேனு
முந்திய வழலைத் தொடிற்சுடா துறுங்கொ
லொழிவருங் கருணைவா ரிதியே,
கந்திதென் பொருவப் பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (40)

அகிலாண்ட நாயகியே! நாயினேன் நின்னை இடைவிடாது பாடித் துதிக்கின்றேன். ஆயினும் என்னுடைய பழவினைகள் சிறிதும் ஒழியாமைக்கு உரிய காரணம் யாது? அறிவோடு அன்றி அறியா

(தொடர்ச்சி 33-ஆம் பக்கம்)

# தணிகை முருகன் தமிழ்மாலை

'' வேதாந்த சித்தாந்த வித்தகர் ''
சீலத்திரு சோமசுந்தர நாயகர்,
சூளை, சென்னை.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

(முற்றொடர்ச்சி)

(தேவர் பசுக்கள் சிவன் பதிஎன்றது)

பிரமனார் தலையும், காமனார் உடலும்,
பிஞ்ஞகன் எந்தையால் அழியும்
தருமமே கண்டாய்; பசுக்கள் என்று அவரைச்
சாற்றிடும் மறைஎன நவின்றான்;
சுரர் முனிவோராம் பசுக்களைப் பாசத்
தொடக்கினில் ஆட்டுவித்து, அருளும்
பரசிவன் எங்கள் பசுபதி மகன்,எம்
பண்ணவன், தணிகை விண்ணவனே. (44)

(சங்கரன் மால் சுதர் தன்மை உரைத்தது)

எந்தை சங்கரனுக்கு இருவர்யாம் புதல்வர்;
எந்தைபோல் அமலம் எய்துதலால்,
விந்தையாயேனும் பிறந்திலம் யோனி;
மேவி மாலவன் சுதர்இருவர்,
நொந்து பல் யோனிதொறும் நுழைந்திழிவர்;
நூல்முகத்து உணர்தி என்றிசைத்தான்;
கந்தவேள், ஞான பந்தன், எம்தணிகைக்
கடவுள், என்கண்ணினுள் மணியே! (45)

(மால் சுதர் பூசை வகித்திலர் என்றது)

எந்தைபோற் புதல்வர் இருவர்யாம்; பூசை
எவ்வுலகத்தும் ஏற்றிடுதல்
தந்திடுங் காட்சி; நூல்களும் உரைக்கும்;
சம்புவை நோற்று மால் பெற்றான்;
அந்த மால் மக்கள் கதியெனில், இல்லை
ஆலயம் பூசை என்று உரைத்தான்;
சந்தமார் தணிகைத் திருமலை மேவும்
சாமியாம், குமர சற்குருவே! (46)

(காரணம் சிவன் எனக் காட்டப் போந்தது)

தேவனும், பகவ நாமனும், அன்றித்
தேயனும், ஈசன் ஆவானும்,
மூவரைக் கடந்த மூர்த்தியும், முக்கண்
மூர்த்தியும், புருடன் ஆவானும்,
யாவுமாம் அட்ட மூர்த்தியும், அன்பர்
யாதனை தபும் உருத்திரனும்,
சேஉகந்து ஏறும் எந்தை என்றுரைத்தான்;
திருத் தணிகாசல பதியே! (47)

[சே—இடபம், விடை, காளைமாடு]

(இதுவும் அது)

பர்க்கனும், வேத நமகம் ஏற்றானும்,
பசுபதிப் பெயர் உடையானும்,
நக்கனும், விச்சுவாதிகக் கோனும்,
நகுதலை மாலை வேய்ந்தானும்,
கைக்கன லானும், கறைமிடற் றானும்,
கங்கை தாங்கிய சடையானும்,
முக்கண் எந்தாதை என்று உரைசெய்தான்;
முன்னவன் தணிகை வாழ்முதலே! (48)

(இதுவும் அது)

ஓம்எனும் பதத்தின் உள்ளொளி யானும்,
ஒரு பிறப்பேனும் எய்தானும்,
சாம வேதனும், எச்சன் தலையோடு
தக்கனைத் தலைஅரிந்தோனும்,
பூமகன் காமன் கூற்றுவன் மாலோன்
புரிதொழிற்கு இன்னல் செய்தானும்,
ஈமம் நின்றாடும் எந்தை என்றுரைத்தான்;
எம்பிரான் தணிகை எங்கோவே! (49)

(இதுவும் அது)

பிரமமும், பிரமக் கிழத்தியும், என்னப்
பேசிடும் மறை, சிவன் உமையைத்;
தருமியும் தருமம் என்னவும் சாற்றும்
தக்க நான்மறை; அவர்தம்மைப்
பரம்உறும் சத்தன் சத்தியும் ஆகப்
பரவுசீர் உபநிடம் போற்றும்;
தரம்உடையவர் எம்தந்தை தாய் என்றான்;
சண்முகன் தணிகை எம்தவமே! (50)

(வேங்கட மலையின் விளக்கம் ஈது என்றது)

மலையுரு வேண்டிப் பெற்ற மாயவனை,
மகிழ்ந்து வேங்கடம் எனும் பெயர்தந்து,
எலையில் பேரின்ப வீடு உயிர்க்கருள
எழுந்தருள் கின்றனம் அதன்மேல்;
இலைநிகர் மலைமற்றுஅதற்கு; எமக்கு என்றும்
ஏற்ற சால்புடைத்து எனப் பகர்ந்தான்;
கலையுரி போர்த்த கண்ணுதல் மகன்,எம்
காவலன் தணிகை நாவலனே'. (51)

(இதுவும் அது)

திருமலை யாகி, எந்தையை நந்தி
தினம் சுமந்திடுவன்; மற்றதுபோல்
திருமலை யாகி மால்எமைச்சுமக்கும்
செல்வம் எய்தியும், சிவன்வடிவைத்
திருமலைப் பாங்கோர் தடத்து ஒருசாருள்
தெளிவுற நிறுவினன் என்றான்;
திருமலை யாகும் தணிகைமால் வரையில்
திகழ் சிவஞான சுந்தரனே! (52)

[திருமலை-திருப்பருப்பதம்; மல்லிகார்ச்சுனம்.
திருமலை—திருவேங்கடம்].

(தேவியும் சுடரும் இலான் சிவன் என்றது)

உயிர்வினைத் தொடர்பால் ஒன்றொடு ஒன்றுஒன்றி
ஒளிர்தரும்; மனைவி காந்தனுமாய்
அயர்வில்சீர் மகவை ஈன்றிடும்; அதுபோல்
ஆதியம் பகவனும் உமையும்
செயிர்தவிர் யானும் சேர்ந்தபேர் அன்றாம்;
தெளியின் ஓர்பொருள் எனும் அதனால்,
உயர்தரும் மனைவி சுதர்இலான், சிவன்என்று
உரைத்தனன்; தணிகை உத்தமனே! (53)

(குருபரன் அருளைக் குலவி மகிழ்ந்தது)

காழி மாதவனாய்க், கவுணியர் மகிழுங்
கண்மணியாய் அவதரித்தே,
ஆழிமா ஞாலத்து அருமறை நெறிதந்து
அருளிய முருகவேள், எம்மான்,
வாழிஎன்று என்னை வருகஎன்று அழைத்தே,
வண்மலர்ப் பாதங்கள் சூட்டிக்,
கீழிடாது ஆண்டான், தணிகைமால் வரையிற்
கேடிலாப் பதம்பெறற் பொருட்டே! (54)

(முருகவேள் நாமம் முக்கியம் உரைத்தது)

சண்முகன், ஆறுமுகன், குமரேசன்,
சாமி, நாகாசலன், அமரர்
கண்மணி, முனிவர் கருத்தின் உள்மணி, எண்
கண்ணனைச் சிறைதவிர்த்து அருள்வோன்,
அண்ணல், எம்கண்ணுக்கு இனியன், என்றுஏத்தும்
அவர்க்கு அருள்செய்குதும் என்றான்;
விண்ணவர் வாழ்த்துந் தணிகையின் ஞான
விளக்கெனத் திகழும் வித்தகனே! (55)

[எண்கண்ணன்-எட்டுக் கண்களையுடைய பிரமதேவன்]

(மாயாவாத மாண்பொருள் உரைத்தது)

பாசமும் பசுவும் இல்பொருள் என்னப்
படிறுஉரைத்து, எவ்வம்இல் பதியே
பாசமும் பசுவும் ஆகிநின்று அழியும்
பச்சையாம் பொய் உரைப்பதனால்,
ஏசுவர் மாயவாதர் என்று அறிஞர்,
ஏதமார் அசத்தியம் பகரும்
பாச வீக்கத்தார் தங்களை, என்றான்;
பனிமலைத் தணிகைவாழ் பரனே. (56)

(தம்மைப் பரம்எனல் சாலாது என்றது)

பரம் உயிர் சகம் மூன்று, இவை கடந்துஒளிரும்
பரம்எனத், தம்மையே பேசிப்
பரநினைவு என்றும், உயிர்நினைவு என்றும்
படிற்று உரையாடுவர் ஞானம்,
திரம்என மதியேல்; சிற்றறி வாளர்
சேர்க்கையால் தீமையே வரும்என்று,
உரமுறக் கூறி அருளினன்; தணிகை
உயர்வரை முளைத்தெழும் சுடரே! (57)

(பிரமகூடத்தர் பேதம் உரைத்தது)

பிரம கூடத்தர் இருவரைப் பேசிப்,
பேதுறா மறை தெளியாதார்
பிரமம் ஒன்றுஎன்பர்; கூடத்தன் அந்தோ
பிறந்தது உண்டோ? எனில், பேசார்;
பிரம கூடத்தர், நித்தியர் என்னும்
பெருமை கண்டுணர்தி என்றிசைத்தான்;
பிரமமாம் தணிகை மலைவளர் ஞானாம்
பிகை, கரத்து ஏந்தும் மாமணியே. (58)

(நித்தியர் பிரமகூடத்தர் என்றது)

சித்து ஒருநான்காய்ச் செப்புவர்; ஈசன்
சிவன் என்று இவரையும் சேர்த்தே
சித்திவை; பிரமகூடத்தர் மாயை
செறிதரும் அவித்தை தோய்ந்திடலால்,
இத்திறம் பேசல் காரியம் கண்டுஆங்கு
எப்படியானும் முன் இரண்டும்
நித்தியம் காண்டி என்றனன்; தணிகை
நெடுவரை மேவும் நின்மலனே! (59)

(இழுக்கு உவமானம் ஏலாது என்றது)

சுத்திகா ரசிதம் என்னவே உலகைச்
சொல்லுவர்; சுத்தியே பிரம
முத்தியால் கூற உளது நிர்மூடர்
உரைப்பது என்னோ? உரை பிரம
சத்திதான் அழிந்து மாழ்குமேல் சுத்தி
தான்அன்றோ, மாழ்கும் வேறொருவன்
பித்துறல் காண்டி என்றனன்; தணிகைப்
பெருமலை மேய பெம்மானே. (60)

[சுத்திகா, சுத்தி—இப்பி. இரசிதம்—வெள்ளி]

(கனவைப் பொய்யெனல் கரிசுஎன்று உரைத்தது)

கனவிடைக் காணும் இன்ப துன்பங்கள்,
கழறுவர் பொய்என அறியார்;
கனவொடு நனவின் பயன் இருவினையின்
காட்சி சேர்தலின், அவைமெய்யாம்
என உரைத்தனன்; எம் துரை, அருட்காழி
ஏந்தலாய் வந்து அவதரித்த
தனம்எனும் தணிகைப் பதிவளர், சுத்த
சாட்குணியப் பெருங் கடலே! (61)

(இதுவும் அது)

கனவிலே கண்டது இன்மையால், நனவிற்
கனவினைப் பொய்யெனில்; அந்தோ
நனவிலே கண்டது உண்டுகொல்? கனவில்
நவிற்றிடார் பொய்என; அதனால்
வினவும் ஓர்இரண்டும், மேல்வரும் ஒன்றும்
மெய்யென விரித்து உரைசெய்தான்;
நினைவுஇகந்து ஒளிரும் தணிகை மால்வரையில்
நிலைத்தருள் நிமல பூரணனே! (62)

(ஈசனே சீவர் என்றதை இடித்தது)

பளிக்கு மண்டபத்தின் நிழல்பல தோய்ந்து,
பல்லுருக் காணும் நாய்போலக்,
களிக்கும் அப்பிரமம் ஒன்று, பற்பலவாக்
காணும் மாயையில் என்றே,
சுளிக்கநேர்ந்து உரைப்பர் மூடர்; வேதாந்த
சூத்திரம் தெளிகிலார் என்றான்;
அளிக்குலம் என்ன அன்பர்சூழ் தணிகை
அமர்ந்த பன்னிரு கரத்துஅரசே! (63)

(இதுவும் அது)

நாய் அறியாமையாற் பலவாக
நாடுறும் நீழலைப், பளிங்கில்
நாயின் வேறான பளிங்கையும் கண்டால்
நாடுமோ, பிரம நன்நிலையே?
நாயதோ பிரமம்? நகுவர்காண் மேலோர்;
ஞாயம்அன்று ஈதுஎன நவின்றான்;
தாயகம் ஆகுந் தணிகை வாழ்ஞானத்
தலைவனாம் சத்தி வேலோனே! (64)

(பொய்ப் போதத்தின் புன்மை தவிர்த்தது)

அறிவு எவன் நினைவிற் கூடும்? அந்நினைவு ஏது?
அறிவுஎனும் பிரமம் ஒன்றே என்று,
அறிய வேதங்கள் உரைக்குமேல், அந்தோ
அதுபரம் உயிர் சகம்ஆகி
நிறையுமாறு உண்டோ? அந் நினைவுஅதனை
நீங்குமாறு எவன் அறி என்றான்;
அறிவினுக்கு அறிவாய்த் தழைத்தொளிர், தணிகை
அங்கிரி வாழும் அற்புதனே! (65)

(சமயவாதிகள் சார்பு இவை என்றது)

தேகமே பிரமம் என்பர், இந்திரியம்
தெய்வம் என்பார், பிராணாதி
ஆகும் அப்பிரமம் என்பர், அருட்கரணம்
ஆகவும் கூறுவார், சீவன்
சோகம்இல் கடவுள் என்பர், மாயோனைச்
சொல்லுவர், பாசமும் பசுவும்
ஆக நீகாண்டி என்றனன்; தணிகை
அம்பதி வாழும் எம்பதியே! (66)

(இதுவும் அது)

மந்தராய் மயங்கிப் பிராந்தி ஞானத்தால்
மடிந்திடுவார் சிலபேயர்,
சிந்தை நொந்து அயர்ந்து சேர் பரிணாமம்
செப்புகின்றார் சிலபேயர்,
பந்த மோக்கங்கள் பரம் உயிர் உண்டோ?
பார்க்கில் என்பார் சிலபேயர்,
அந்த நிட்டூரப் பேய்களிற் சேராது
அருளினன், தணிகை ஆண்டவனே! (67)

(இதுவும் அது)

சீவனுக்கு உற்பத்திகள் முதலாகச்
செப்புவர், மாயையே பிரமம்
ஆவதுங் கூறுவார், அதுபொய்யா
அறைந்திடுவார், அதற்கு அழிவு
மேவிடும் என்பர், ஆணவம் வேறாய்
விளம்பிடார், கன்மம் ஏது? என்பார்,
சாவிபோம் சமயக் கத்து இவை என்றான்;
தணிகைவாழ் தமனியக் குன்றே! (68)

[கத்து, கத்தல்—பொருள்அற்ற வெறும்
இரைச்சல்]

(சிவனிடம் உலகம் ஜெனித்தல் ஈது என்றது)

உலகமும் உயிரும் உதித்து ஒடுங்கிட, மற்று
உமையொரு கூறு உடையானில்,
நிலவும் ஓர்கூறு என்று அருமறை தெரிக்கும்
நிச்சயம் ஈதுஎனப் பகர்ந்தான்;
கலகமா மாயைக் கட்டுஅற என்னைக்
கலந்து பேரின்ப வீடளிக்கும்
மலைமகள் புதல்வன் தணிகைவாழ் முருகன்
வள்ளியை மணம்புணர்ந் தோனே! (69)

(உயிர்கள் சிவனிடம் உதித்தல் ஈது என்றது)

பரனிடம் உயிர்கள், அனலிடைப் புலிங்கம்
பகிர்முகம் ஆதல்போல் வரும்என்று,
உரம் உறக் கூறும் வேதம், என்பால்வந்து
ஒப்புற விரித்து உரைசெய்தான்;
பரமுடன் அபரங் கடந்த மெய்ந்நிலையைப்
பரிவுடன் தந்து, எனையாண்ட
வரன், திருத்தணிகை வள்ளல், தெய்வானை
மகிழ் குமரேச மாநிதியே! (70)

(ஆன்ம இலக்கணம் ஆம்இஃது என்றது)

சேர்ந்ததன் வண்ணம் செறிதரும் ஆன்ம
சித்தை நோக்கிடின், எமைச்சேரும்
கூர்ந்தசீர் உடைமையால், அஃது எம்மிற்
கூறுஎன உரைக்கும் ஆகமங்கள்;
தீர்ந்த அன்பாளர் அறிவர்காண்; இதனைத்
தேர்ந்திடார் கயவர் என்றிசைத்தான்;
சார்ந்து மெய்யன்பர் போற்றும் நற்றணிகைத்
தடவரை மேவு சண்முகனே! (71)

(ஆன்ம இலக்கணம் அன்றுஈது என்றது)

கேவலம் விபுவாய்க் கிளத்துவர், அணுவாய்க்
கிட்டியே உரைப்பர், ஓரிடத்தில்
மேவும் என்பார், கீழ்மேல் உறச் சுழன்று
மேவிடும் என்பர், தீதின்றி
யாவது ஈதுஎன்ன, உயிரினை உடற்கண்
அறைந்திடுவார் இரிந்தோடத்,
தாவில்சீர் உண்மை எமக்கு இனிதிசைத்தான்,
தணிகைவாழ் முருகன் எம்குருவே! (72)

(ஏகம் என்பதன் பொருள் இது என்றது)

ஒன்றுஎன மறைகள் உரைப்பது, பரமன்
ஒருவனே எனவும்; வேறில்லை
என்றது பரன்வேறில்லை என்னவும்; நன்கு
இயம்பினன் பொருள் விரித்து அடியேற்கு;
அன்று அருட்காழி அமர்ந்து மெய்ஞ்ஞானம்
அயின்ற வானவன், தலையாய
குன்றமாம் தணிகைக் கோயிலை விரும்பிக்
குடிகொளும் பரசிவ குருவே! (73)

(அத்துவிதத்தின் அரும்பொருள் உரைத்தது)

அத்துவிதத்தின் அரும்பொருள் தேரின்,
அல்ல ஒன்றுஇரண்டு; அவையன்றி
ஒத்துள இரண்டும் உணர்தி என்றுஇசைத்தான்;
ஒன்றுஅதன்பொருள் எனமாழ்கிக்
கத்துறுவார் தமில்;பொருள் தீதாக்
காட்டி ஆண்டருள் திருத்தணிகை
உத்தமன், வடிவேல் ஒண்கரத்து ஏந்தி
உயிர்த்துணை ஆகி யுள்ளவனே! (74)

(தத்துவமசியின் தத்துவம் உரைத்தது)

தத்துவமசி மாவாக்கிய உண்மை
தலைதடுமாறி, நன்கு அறியாது
உத்திகள் பேசி அழிந்திடும் என்பால்,
உள்ளவாறு அதனை வந்திசைத்தான்;
சத்தியம் பழுத்துச் சகச நன்னிலையிற்
சரித்திடும் எதிவரர், வழுத்தித்
துத்தியம் செய்யுந் தணிகையின் முளைத்த,
சோதியாங் கருணை வாரிதியே! (75)

[எதிவரர்-முனிவர்களிற் சிறந்தோர். துத்தியம்—
தோத்திரம்]

(வைதிகர் மாயாவாதர் அன்றென்பது)

வைதிக மார்க்கம் பேணி வாழ்குநர்,இவ்
வைப்பிடை எவர்எனின்,நாளும்
கைதவம் பேசி, எம்மலால் கடவுள்
பிறிதிலை எனும் கயவரையே,
நைதலில் மனத்தராய் உரைத்திடுவர்;
நான்மறை மிச்சை என்று எழுந்து
வைதிடும் பதகர், காண்டி நீஎன்றான்;
வளர் திருத்தணிகை வானவனே! (76)

[மிச்சை, மித்தை—பொய்]

(வைதிகர் சைவ மறையோர் என்றது)

சைவ வைதிகங்கள் உயிர் உடல் என்றே,
சாற்றலால் மறை உபநிடங்கள்;
சைவமே வைதிகப் பெயர் தாங்கும்
தன்மையால், வைதிகர் ஆவார்;
சைவராய் எம்மைக் கண்டு, உளம் தணியும்
தாபதர் காண்டி நீ என்றான்;
சைவ மாதவர் சூழ் தணிகையின் முளைத்துத்
தழைத்தொளிர் சாமியாம் குகனே! (77)

[தாபதர்—தவநெறி ஒழுகுவோர்]

(ஆகமஞானம் அதிகம் என்றது)

மறைவழி நிற்பார் ஞானம், எஞ்ஞான்றும்
மாட்சி பெற்றிலது; உயர்சைவ
நிறைஒளிர் ஆகமத்தின் நல்வழியே
நேரும் மெய்ஞ்ஞானம்; என்பதனுக்கு
இறைவன் அன்றொரு நால்வரை உயக்காணும்
ஏற்றமே சான்று என உரைத்தான்;
கறைதவழ் மதியந் தவழ் திருத்தணிகைக்
காரணன் ஞான பூரணனே ! (78)

(ஆகமம்கொண்டு அறிவாம்மறை என்றது)

காமிகம் முதலாச் சைவ சித்தாந்தம்
கண்டபேர்க்கு அன்றி வேதாந்த
மாம்அது சித்தி ஆகுமோ? மூலர்
அன்றுஅருள் செய்த மந்திரமாம்
தோம்அறு வழிநீ காண்டி என்றுஇசைத்தான்;
சுருதியும் ஆகமத்தொகையும்
நீமமாய் உதவி, எனக்கு அருள்தணிகை
நீடொளி யாகும் நிர்க்குணனே! (79)

[மூலர்-திருமூலர், மந்திரம்-திருமூலர் அருளிய திருமந்திரநூல்]

(எல்லா வித்தையும் ஈசனது என்றது)

வேதமோடு ஆகமாதி எக்கலையும்,
வித்தகன் எந்தையே சொற்ற
ஏதுவால், வித்தை யாவுக்கும் ஈசன்
என மறை கூர்ந்து இசைத்திடுமால்;
ஈதுஅறிநீ என்று, எவ்வுயிர்த் திரளும்
இயங்கிட இயக்கும் இயந்திரம்போன்று,
ஆதரம் பெருகுந் தணிகைமால் வரையான்
அறைந்தனன்; ஈது அதிசயமே! (80)

(வேத பாகிய ஆகமங்களை விதந்தது)

வேத பாகியமா விளம்பும் ஆகமங்கள்,
விண்டுவின் பாஞ்ச ராத்திரமும்,
பேதமார் லகுலீ பைரவம் சோமம்
பேசு காபாலம் ஆதியுமாம்;
வேத மெய்ப்பொருளை விளக்கும் ஆகமங்கள்,
விதி சிவாகமங்கள் என்று இசைத்தான்;
வேத சிவாகமங்கள் நின்றேத்தும்
வியன் தணிகாசல பதியே! (81)

[வேத பாகியம்—வேதத்திற்குப் புறம்பானது)

(உபயப்பிரட்டர் உண்மை உரைத்தது)

பூசுவது ஒன்று, பிதற்றுவது ஒன்றாய்,
பூரியர் சிலர் திருநீற்றைப்
பூசியே, ராமராம என்றரற்றிப்
புலம்புவார்; அவர் மருட்போத
மாசுஒழிந்திடுமோ? மால் சிவன் ஆமோ?
மறைத்துணிபோ இது? மாய
பாசம் என்றுஉவகை கூர்ந்து உரைத்தனன்;எம்
பதி தணிகாசல பதியே! (82)

(சமயவாதம் சாற்றொணாது என்றது)

சமய வாதத்திற் சார்ந்து உழல்மூடர்
தம்மை நோக்கிடின் மிகுநகையாம்;
அமையுமோ ஞானம்? அடைவரோ முத்தி?
ஆகம வேத சம்மதமோ?
சம தமாதிகளால் தாழ்ந்து எமைவழுத்துந்
தன்மையோர்க்கே சிவமுண்டாம்;
அமைதி என்று இரங்கி அருளினன்; தணிகை
ஆண்டவன் எங்கள் ஆண்டவனே! (83)

[அமைதி—அமையப் பெறுவாய்]

(சைவாசாரியர்தாம் இவர் என்றது)

மாளிகைத் தேவர் ஆதி ஒன்பதின்மர்,
மன்உபமன்னியர் முனிவர்,
ஆளுடையவர் ஓர்நால்வர், பின் நால்வர்,
அறுபத்து மூவரோடு, ஏனைக்
கோள்இல் மெய்த்தொண்டர், சேக்கிழார் முதலாங்
குருபரர்க்கு அன்புசெய் என்றான்;
தாளிணை வருந்தித் தலைமிசை மேவத்
தந்தருள் தணிகை எம் தனமே! (84)

[மாளிகைத்தேவர்—திருவிசைப்பா பாடியவர்களுள் ஒருவர். ஆளுடையவர் ஓர் நால்வர்—சைவ சமய ஆசிரியர்களாகிய அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர். பின்நால்வர்—சந்தான ஆசிரியர்கள் ஆகிய மெய்கண்டார், அருள்நந்தி, மறைஞான சம்பந்தர், உமாபதி சிவனார் என்னும் நால்வர்.]

(சிவபரத்துவ தாபகர் இவர் என்றது)

போற்றும் இராமகண்டர், சீகண்டர்,
புகலும் நாராயண கண்டர்,
சாற்றுசீர்ச் சுதரிசனர், சிவஞானம்
தந்திடும் அப்பதீக்கிதர், நன்கு
ஏத்தும் மெய்யன்பர் எண்ணிலார், வேதம்
எடுத்து உமாபதிக்கு உள ஏற்றஞ்
சாற்றினர் என்றான்; தணிகைவாழ் குமர
சாமியாம் முதிர் கிழவோனே! (85)

(சிவபரத்துவ நூலாம் இவை என்றது)

நிகர்அறு சுருதி சூக்தி, வேதாந்த
நிண்ணயம், சூத்திர விருத்தி,
பகரும் மாபாடியம், பல சைவ
பத்ததி, பல சிவோத்கர்ஷம்,
புகரில் சீர்ச் சிவதத்துவ விவேகம், பின்
போந்த தர்க்கஸ்தவம், இவைகள்
மகிமைசால் சைவநூல் எனக்கூறி,
வழங்கினன் தணிகைவாழ் பரனே! (86)

(சைவசித்தாந்த சாத்திரம் உரைத்தது)

போதமும், சித்தி, சிவப்பிரகாசப்
புண்ணிய நூலும், ஏதங்கள்
ஏதும்இல் களிறும், உந்தியும், முதலா
இயம்பு சித்தாந்த சாத்திரங்கள்
ஓதுவர் பதினான்கு என்ன; எற்கு இயம்பி
உகந்து அளித்தான்; மயில்ஏறி
மாதுஉமை காணவரும் திருத்தணிகை
மைந்தனாம் கந்தன், என்துணையே! (87)

(அடியவர்பூசை ஆற்றுக என்பது)

அடியவர்க்கு ஏவல் ஆற்றுவான் தேடி
அடைந்தனன், கிரனார், மேனிப்
பொடிகொள் சீர் அருணகிரி எனவரும்எம்
புண்ணியர், மூகைதீர்ந்து ஏத்திப்
படிவரும் குமரகுருபர தேவர்
பாத பங்கயங்களே கதிஎன்று,
அடியனேன்; தணிகை அங்கணன் அருள்கூர்ந்து
ஆதரித்து ஆண்டனன் நன்றே! (88)

(அருள்நூல் இவைஎன ஆதரவு உரைத்தது)

கந்தர் அந்தாதி, வகுப்பு, அநுபூதி,
காட்சி சேர்ந்திடும் அலங்காரம்,
சந்தமார் உண்மைத் திருப்புகழ், மேலோர்
சாற்றும் ஆற்றுப்படை முதலா
இந்தநூல் அன்றி, ஏற்றிலம் வேறொன்று;
என்றும் ஏத்திடுதிநீ என்றான்;
கந்தனாம் எந்தை, தணிகைமால் வரையிற்
கண்ட எம் கவுணியக் கன்றே! (89)

(கண்டஅருட்கோலக் காட்சி உரைத்தது)

குன்றுதோ றாடல் உவந்த மாமணியைக்,
குஞ்சர முகத்தவன் நாடும்
என்றன் ஆருயிராம் இளவலைக், குறத்திக்கு
ஏற்ற காந்தனை, இபம்ஊர்ந்து
நின்றசீரானை, மஞ்ஞை ஊர்ந்தானை,
நீண்ட வேற்படை சுமந்தானை,
வென்றிசேர் தணிகைமால் வரைமீது
மேவிடக் கண்டனன் யானே! (90)

(ஊன்உண்டார் கதிதான்கண்டு உரைத்தது)

உயிர்க்கொலை இரங்காது, உண்ணுவார் ஒன்றன்
உயிர் செகுத்து, எங்ஙனே எம்மோடு
அயர்ப்பிலாது ஒன்றுபட்டு அழியா மெய்
ஆனந்தம் எய்துவர்? அந்தோ!
பயிர்ப்பிலாக் கொடிய பாவிகள், அன்னோர்
பக்கல்யாம் இரங்கிலம் என்றான்;
செயிர்த்து நீள்வினையைப் போக்கும் எம்தணிகைச்
செம்மல், எம்கடவுள் மாமணியே! (91)

(பாதகம் ஐந்தின் பான்மை உரைத்தது)

கொலை முதலாகப் பாதகம் புரியும்
கொடியரைத் தீண்டிடில், காணில்,
தலைமுழுகுவர் காண் மேலவர்; அன்னோர்
சார்பு நீத்திடுதி என்று இசைத்தான்;
அலைகடற் பள்ளியான் உளத்தமரும்
அப்பனாம், ஒப்பில் சங்கரனுக்கு,
எலையில்சீர் பிரணவப் பொருள்உரைத்து, அங்கு
எழுந்தருள் தணிகை எங்கோவே! (92)

(பொய்வேடத்தில் புதுமை உரைத்தது)

வேடமும், பூசை மிகுதியும் கொண்டு,
வேடரிற் கொடிய காதகராய்,
மூடர் பல்லோர் இப்புவனியில் திரிவர்;
முன்னவன் அடியருக்கு ஒன்றும்
நாடி ஈந்திலர்; அஞ்ஞான பூரணர்காண்;
நாடிடேல் அவரைநீ என்றான்;
வேடமும் தவமும் தந்து, எனை ஆள
விரும்பும் எம்தணிகை வேதியனே! (93)

(ஈனஞானிகள் இவர் என இசைத்தது)

''ஞானிகள், பூதி கண்டியில் இச்சை
நாடிலார்; பூசையும் புரியார்;
நானிலம் புகழும் அவரை'' என்றுஉன்னி,
நாள்தொறும் போனகம் தேடி,
ஈனமாம் தொழில்கள் யாவுமே புரிவார்,
என்கொல்? ஆச்சரியம் ஈதுஎன்றான்;
ஞானசம்பந்தன் ஆகும் எம் தணிகை
நாயகன், ஞானநாயகனே! (94)

(இதுவும் அது)

மழித்தலும், நீட்டல்தானும் வேண்டா, மெய்ம்
மார்க்கருக்கு எனத் தமிழ்மறை நூல்
வழுத்தவும், சடையை வளர்த்துமே, சிகையை
வாங்கியுமே, ஒழுங்கிலராய்,
எழுத்து வாசனையும் எய்திலார், ஞானம்
எய்தினார் என்ன, ஊர்எங்கும்
பழுத்தவர் ஆகித் திரிவது என்? என்றான்;
பழமலைத் தணிகைவாழ் பரனே. (95)

(ஞானிகள் முதலாம் நால்வரை உரைத்தது)

ஞானமே முதல் நற்பணி ஒருநான்கில்
ஞானி யாவுக்குமே உரியன்;
ஈனம்இல் யோகி மூன்றினுக்கு உரியன்;
இரண்டு உடையான் கிரியாவான்;
மானமார் சரியை ஒன்றுமே சரியா
வான் உடையான்; இவைதெளியார்
ஊனமே பெறுவர் என்று உரைத்தனன்; எம்
உடையவன் தணிகை ஒண்பதியே! (96)

(சரியையே போதும் சார்ந்திடின் என்றது)

துவித ஞானத்தால் உண்டெனுமே, அத்
துவிதம், ஆகமம் அறியென்றே,
அவிரும் மெய்ப்போதம் அறைந்தனர் பெரியோர்;
ஆதலில் சரியையே போதும்;
எவர்கொலோ அறிவார்? ஏகவாதத்தில்
இறங்கி மாழ்குவர் என இசைத்தான்;
அவனியோர் தாழும் தணிகைமால் வரையில்
அமர்ந்தொளிர் அற்புத மணியே! (97)

(தணிகையில் வாழ்வு தானுண்டு என்றது)

யோக போகங்கள் உயிர்களுக்கு அருள,
யோகியாய் இருந்தும், எம்அன்னை
ஆகம் மேவுற நற்போகியாய் இருந்தும்,
அருளுவன்காண் சிவன் எந்தை;
ஏகனாம் அவனை, யோகபோகங்கள்
எய்திலான் எனத் தெளிஎன்றான்;
யோக போகங்கள் தரும் திருத்தணிகை
யூடு,ஒளிர் வான் மதி விளக்கே! (98)

(தணிகையில் தாழ்வோர் தவம் பெரிது என்றது)

ஆலமார் கண்டத்து அப்பனைப் பாடும்
ஆரமுது ஆயினான், எங்கள்
கோலமார் தணிகைக் குமரவேள், வள்ளி
கொழுநனாம் கழுமலத்து இறையை,
வாலிதாம் நிலைபெற்று அன்பினால் வழுத்தும்
மாதவம் உடையரே, எம்மை
ஏலஇங்கு எய்தி ஆட்கொளும் பெரியோர்
என்பது, எம்வாலிதாம் நிலையே! (99)

(வாழ்த்து)

அழுது இருகண்ணீர் வார, மெய்பொடிப்ப,
அன்பினால் உருகி, என்அன்பே!
பழுதில் ஓவியமே! பாலொடு தேனும்
பழமுமாய் இனிக்கும் ஆரமுதே!
விழுதையேன் கண்டாய், தணிகையின் மருந்தே!
வேற்படையாய்! என இழந்து
தொழும், அடியேனைத் தூக்கியே ஆளும்
துணைமலர்த் தாள்கள், வாழியவே! (100)

—: முற்றிற்று :—

# சுந்தரரும், கல்வெட்டுக்களும்

திரு K. M. வேங்கடராமையா, M.A., அண்ணாமலைநகர்.

**முன்னுரை :**

சொற்கோவும், தோணிபுரத் தோன்றலும், சுந்தரரும், திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழ் பாடிச் சைவம் பரப்பியவராவர். இம்மூவரும் பல்லவப் பேரரசு நிகழ்ந்த காலத்தில் திகழ்ந்தவர்கள். சுந்தரர் தம் நாளிலும் தமக்கு முன்னும் இருந்த அடியார்களைத் திருத்தொண்டத் தொகையால் துதித்தார். அந்நாள் முதல் பெரியபுராணம் பாடப்பெற்றது வரையிலும், அதற்குப் பின்னும் செந்தமிழ் நாட்டுச் சான்றோர் அளவிலாத பெருமையுடைய அடியார்களை அமயம் வாய்ப்புழியெல்லாம் போற்றியுள்ளனர் என்பது கல்லெழுத்துக்களால் அறியப்படுவதாம். சுந்தரரைக் குறித்துக் கல்லெழுத்துக்களினின்று அறியப்படுவனவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

**ஆலால சுந்தரர் :**

ஆலால சுந்தரர் என்பது சுந்தரர் திருக்கயிலையில் இருந்தபொழுது கொண்ட திருப்பெயர் ஆகும். இது திருவொற்றியூர்க் கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில் ஒரு விளாகத்துக்குப் பெயராயமைந்திருந்தது.

''ராஜ நாராயண சம்புவராயர்க்குயாண்டு ஏழாவது....சிவத்துரோகிகளை ஆராய்ந்து.... இவர்கள் மனையும் காணியுமாய்ச் சுண்டேசுவரப் பெரு விலையாக விற்று அம்மனைகள் நீக்கி நின்ற மனைகளும் காணியுமாய்க் கல்வெட்டினவிடத்தில்...நற்கால் புலமான ஆலால சுந்தர விளாகம் மூன்றில் ஒன்று....''

அன்றியும் திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்தில் வீராபிஷேகம் செய்தருளிய சுந்தரபாண்டிய தேவரின் 17-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1233இல்) திருநெல்வேலியில் ஆலாலசுந்தரர் திருமடம் என்று ஒரு மடம் குறிக்கப்பெற்றுள்ளது. எனவே ஆலாலசுந்தரர் என்ற பெயர் போற்றப்பெற்றமை தெளிவு.

**இசைஞானியார் :**

இவர் சுந்தரரின் தாய். இவ்வம்மையாரின் பெயரை இரண்டாம் குலோத்துங்க சோழருடைய (1113-1150) திருவாரூர் வடமொழிக் கல்வெட்டினின்றறியலாம். ''ஆளுடையநம்பி மாதாக்கள் இசைஞானியார்'' என்ற அப்பகுதி தமிழ் எழுத்துக்களில் உள்ளன. இக்கல்லெழுத்தில் சுந்தரர் ஆளுடைய நம்பி என்று குறிக்கப் பெறுதலும், அவர் தாயார் பெயர் இசைஞானியார் என்பதும் அவ்வம்மையார் ஞானசிவாசாரியார் என்பவருடையமகள் என்பதும், சைவ கௌதம கோத்திரத்தில் அவ்வம்மையார் பிறந்தார் என்பதும் அறிதற்பாலனவாம்.

**நம்பியாரூரர் :**

ஆளுடைய நம்பி என்றமைபோல, நம்பியாரூரர் என்றும் சுந்தரர் குறிக்கப் பெறுகிறார். இதனை வீரபாண்டியதேவரது திருநெல்வேலிக் கல்லெழுத்துக்களின் வாயிலாகவும், இராசராசனது தஞ்சை இராசராசேச்சுரத்துக் கல்லெழுத்துக்களினின்றும் அறிகிறோம். முதலாம் இராசேந்திரனின் 20-ஆம் ஆட்சிக்குரிய திருமழபாடிக் கல்வெட்டு, நம்பியாரூரனார் படிமத்தைத் திருப்பள்ளித்தாமப் பிச்சன் எழுந்தருளுவித்து நிலம் அளித்ததாகக் கூறுகிறது. முதல் இராசராசனின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்துக் கூகூர்க் கோயிலில் நம்பியாரூரர் கோவிலில் சித்திரைத் திருவிழா நடத்த நிவந்தம் அளித்ததை அறிவிக்கிறது. இராசராசன் திருப்பதியம் ஓத நியமித்த 48 பிடாரர்களில் இருவர்க்கு ஆரூரர் என்ற பெயரும், இன்னும் இருவர்க்கு நம்பியாரூரர் என்ற பெயரும் அமைந்திருந்தமை அறிகிறோம்.

**தடுத்தாட்கொண்டருளிய நாயனார் :**

சுந்தரர்க்குத் திருமணம் நிகழவிருக்கையில் சிவபெருமான் கயிலையில் அருளியவண்ணம் தடுத்தாட்கொள்வான் வேண்டிக் கிழவனாராக வந்து, சுந்தரரை நோக்கித் தமக்கு அடிமை செய்ய வேண்டும் என்றார். இருவர்க்கும் வாது நிகழ்ந்தது. திருவெண்ணெய் நல்லூரில் இவ்வழக்கு விசாரிக்கப் பெற்றது. கிழவனாரே வென்று பணி செய்ய வேண்டுமென்றார். இங்ஙனம் சிவபெருமான் தடுத்தாட்கொண்டமையின், ''தடுத்தாட்கொண்டருளிய நாயனார்'' என்றும், வழக்கில் வென்றமையின் சிவபெருமான் ''அரியவான வழக்கு வென்ற பெருமாள் நல்லூர்''எனப் பெற்றது. மேற்கூறியன யாவும் இராசராசச் சம்புவராயனது கல்லெழுத்தொன்றால் அறியலாம். மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டும், ஏழாம் ஆண்டுக் கல்வெட்டும் இறைவனை ஆட்கொண்ட தேவர் என்று சிறப்பிக்கின்றன.

'சொற்றமிழ்பாடுக' என்றார் தூமறை பாடும் வாயார். யாதினை அறிந்து என் சொல்

லிப் பாடுகேன்' என்றார் சுந்தரர். முன்பெனைப் பித்தன் என்றமையின் பித்தன் என்றே பாடுக என்றார் பரமனார். இதனை நினைப்பிக்கிறது ஒரு கல்லெழுத்து.

ஸ்ரீகயிலாய முடையான் என்ற ஒருவர் ''பிச்சன் என்று பாடச் சொன்னான்'' என்று பெயரிட்ட திருச்சின்னங்களை வழங்கியதாகக் கோப்பெருஞ்சிங்கனது 27-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்லெழுத்து நுவல்கிறது.

''ஸ்வஸ்தி ஸ்ரீ சகல புவநச்சக்கரவத்திகள் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தெவற்க்கு யாண்டு 27-வது மேஷ நாயற்று பூர்வபட்சத்து சதுர்த்தசியும் புதன்கிழமையும் பெற்ற அத்தத்துநாள் திருவெண்ணை நல்லூர் உடையார் ஆட்கொண்டதெவற்கு மத்யஸ்தன் செஞ்சியுடையான் உடையன் ஸ்ரீ கயிலாயமுடையான் இட்ட பிச்சன் என்று பாடச் சொன்னான் திருச்சின்னம் இரண்டினால் வெள்ளி எடை ஐம்பத்து ஐங்கழஞ்சும், ஆவுடைய நாயனார் சீபாதத்து சாத்தின கொடி உடன்கொடுத்த கால்காறை உடன் ஒன்பது மாற்றில் பொன் இருகழஞ்சு. இது பன் மாகேச்வர ரட்சை. (இக்கல்லெழுத்தின் காலம் 6-4-1270).

**வன்றொண்டர் :**

சுந்தரர் வன்மைகள் பேசியபின் வன்றொண்டர் எனப்பெற்றார். இவ்வன்றொண்டப் பெயர் பூண்டவர் திருநெல்வேலித் தெற்கில் மடத்துக் கீழை மடத்தின்கண் இருந்தனர் என்று, கோனேரின்மை கொண்டான் கல்லெழுத்தினின்றும், சுந்தரபாண்டிய தேவர் கல்லெழுத்தினின்றும் அறிகிறோம்.

**நங்கை, பரவையார் :**

சுந்தரர், பரவையாரைத் திருவாரூரில் வாழ்க்கைத் துணையாகக் கொண்டார். நங்கை பரவையாரது திருவுருவமும் தஞ்சை இராசராசேசுரத்தில் எழுந்தருள்விக்கப் பெற்றதென்று ஒரு கல்லெழுத்து கூறுகின்றது. நங்கை பரவையாருக்குத் திருவையாற்றுக் கோவிலில் விளக்கு எரிக்க நிலம் விடப்பெற்றிருக்க செய்தி 'நங்கை பரவையார் திருவிளக்குச் செய்' என்ற கல்லெழுத்துப் பகுதி அறிவிக்கின்றது. இரண்டாம் குலோத்துங்கச் சோழனது ஏழாம் ஆட்சியாண்டுக்குரிய திருவாரூர்க் கல்வெட்டு திருவாரூர்க் கோவிலில் எழுந்தருளுவிக்கப் பெற்ற ஆளுடை நம்பி, பரவை நாச்சியார் படிவங்களுக்கு அநபாய நல்லூர் என்ற ஊர் அளிக்கப் பெற்றதாகக் கூறுகிறது. முதல் இராசேந்திரனது அணுக்கியார், பரவை நங்கையார் என்று இப்பரவையார் பெயரைப் பூண்டிருந்தனர் என்றறிகின்றோம்.

**திருத்தொண்டத் தொகை :**

ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொம எடுத்துத் தேசம் உய்யத் திருத தொண்டத் தொகை பாடினார் சுந்தரர். இப்பதிகம் பெரியபுராணத்துக்குப் பதிகமாக விளங்குவது. இது மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்தது என்று கல்லெழுத்துக்களினின்று அறிகிறோம். திருத்தொண்டத் தொகை நினைவாகத் திருவிடை வாயிலில் 'திருத்தொண்டத் தொகையான் குகை' என்று ஒரு குகை இருந்ததென மூன்றாம் இராசேந்திரனுடைய நாலாம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்து கூறுகின்றது. இக்குகையுள் திருமுறைகள் வைக்கப்பட்டு இருந்தன. திருச்சிமாவட்டம் கோவந்த புத்தூரில் மூன்றாம் இராசேந்திர சோழனது இரண்டாம் ஆண்டுக்குரிய கல்லெழுத்து திருத் தொண்டத் தொகையான் திருமடம் என்ற ஒரு இடத்தைக் குறித்துச்சிலசெய்திகளைச்சொல்லுகின்றது. சிதம்பரம் நடராசப் பெருமான் திருக் கோவிலின் வடக்குக் கோபுரத்தையடுத்துத் 'திருத்தொண்டத் தொகையீச்சரம்' என்ற ஒரு திருக்கோயிலில் தொகையடியார்கள் சிவலிங்கத் திருமேனி வாயிலாக வழிபடப் பெற்றனர் என்று அறிகிறோம். இவ்வாலயம் நவலிங்கம் கோயில் என இந்நாளில் வழங்குகின்றது. இக்கோயிலில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஉருவமும் அமைக்கப் பெற்றிருந்தது எனக் கல்வெட்டுக்கள் புகல்கின்றன. மூன்றாம் குலோத்துங்கச் சோழனது இரண்டாவது ஆட்சி யாண்டுக்கல்வெட்டு இத்திருக்கோயிலைக் குறிக்கின்றது. சிதம்பரத்தில் உள்ள இராசேந்திர சோழனது 24-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று, தில்லையில் ''திருமாசித் திருநாளில் திருத்தொண்டத்தொகை விண்ணப்பம் செய்வார்க்குக் காசு ஐஞ்சு'' நிபந்தமாக அளித்ததாகப் பகர்கின்றது.

**பொன்னார்மேனியன் :**

சுந்தரர் திருமழபாடியில் பாடியருளிய திருப்பதிகம் பொன்னார் மேனியன் என்ற தொடக்கமுடையது. பொன்னார் மேனியன் என்ற தொடர் பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சேனாபதியின் மனத்தைக் கவர்ந்தது. அவர் சேனாதிபதி அரையன் கடக்கங் கொண்ட சோழன் அணி முறி நாடாள்வான் எனப்பெற்றார். அவர் திருமழபாடிக் கோயிவில் செம்புத்தரவால் பொன்னார் மேனியன் என்ற திருமேனியை எழுந்தருள்வித்து அதற்கு நாள் வழிபாட்டிற்கு நிபந்தம் அளித்ததோடு சில அணிகலன்களையும் அளித்ததாக இரண்டாம் இராசேந்திரனுடைய கல்வெட்டு உரைக்கின்றது. இனி இச்சொற்றொடர் பொன்னார் மேனி பட்டர் என்று, ஒரு பட்டர் பெயரில் அமைந்ததாகச் சுந்தரபாண்டியனது கல்வெட்டு உரைக்கின்றது. அன்றியும் மூன்றாம் குலோத் துங்கச் சோழரது முப்பத்திநாலாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலிருந்து ஊரின் உட்பகுதியொன்று ''பொன்னார்மேனி விளாகம்' என்று பெயரிடப் பெற்றிருந்ததாகக் கூறப் பெறுகிறோம்.

**கிழிபெற்றது :**

சுந்தரர் திருப் பாச்சிலாச்சிரமத்தில் பொற்கிழி பெற்றார். மூன்றாம் இராசராசனது இரு

பத்திஏழாம் ஆண்டுக் கல்வெட்டில் கிழிகொடுத்தருளிய திருவாசல் என்று ஒரு வாசல் குறிக்கப் பெறுகிறது.

### உளோம்போகீர் :

சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து, பின்னர்த் திருவாரூருக்குப் புறப்பட்டார். சூள் பொய்த்தமையின் இரு கண்களையும் இழந்தார். கண் இழந்து செல்பவர் திருவெண்பாக்கத்துக்கு வந்தார். சிவபெருமானை நோக்கிக்கண்வேண்டித் திருக்கோயில்உள்ளீரோ என்று பாடினார். இறைவன் உளோம் போகீர் என்று கூறினார். இதனை நினைவுறும் நிலையில் திருவெண்பாக்கம் என்னும் திருத்தலத்துக்கு அண்மையில் திருஉளம்பூதூர் என்ற ஓர் ஊர், உளம்போகீர்புரம் என்று அழைக்கப் பெற்றது எனச் சொல்லப்படுகின்றது.

### சேரமான்பெருமாள் :

சேரமான்பெருமாள் நாயனார் சுந்தரருடைய உற்ற நண்பர். ஆகவே சுந்தரரைச் சேரமான் தோழர் எனல் பொருந்தும். வீரபாண்டிய தேவரது மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் கையொப்பம் இட்டவர், ஒருவர் சேரமான் தோழர் என்று இப்பெயரைப்பூண்டிருந்தார். இராசநாராயண சம்புவராயரது காஞ்சிபுரத்துக்கல்வெட்டு உடையார் ஏகாம்பரநாதர்க்குரிய திருத்தோப்புக்களில் ஒன்று அவர் பெயரால் அமைந்திருந்ததென அறிவிக்கின்றது

### அவிநாசியில் :

சுந்தரர் அவிநாசியில் நிகழ்த்திய அற்புதம் முதலையுண்ட பாலனை அழைத்ததாகும். வீரபாண்டியத் தேவரது அவிநாசியில் உள்ளபதினாலாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, தென்பள்ளியில் இருந்த சுந்தரநாயனாருக்கு அமுது அளிப்பதற்காகப் பாப்பாரப்பூண்டியாகிய வீரராசேந்திரநல்லூர் அளிக்கப்பெற்றதெனப் பகர்கின்றது.

இக்கல்வெட்டில் கையொப்பமிட்டவர்களில் ஒருவர் தம்பிரான்தோழர் என்ற பெயர் உடையவர் என்று அறிகிறோம். தம்பிரான் தோழர் என்பது சுந்தரருடைய பெயர்களில் ஒன்று. தம்பிரான் தோழர் மானக்கஞ்சாறர் என்று,ஒருவரைக் குறித்துத் திருமுட்டம் கோயிலில் உள்ள அவர் படிமத்தின்கீழ் இருக்கும் கல்வெட்டிலிருந்து அறியப் பெறுகின்றது. இங்ஙனம் தம்பிரான் தோழர் என்ற சுந்தரர் திருப்பெயர் மக்கட் பெயராய் அமைந்து போற்றப் பெற்றமையை யறிந்து இன்புறுவோமாக.

இனிச் சுந்தரபாண்டிய தேவரது 21-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று, திருப்புக்கொளியூர்க் குளக்கரையில் சுந்தரர் திருமேனி அரசனால்எழுந்தருளுவிக்கப் பெற்றது என்றும், அதற்குப் பாண்டிமண்டலத்து வியாபாரி அழகிய பாண்டியத்தேவர் நிபந்தமாக இருநூற்றிருபது வராகன் புள்ளிக்குளிகை அளித்தாரென்றும் கூறுகின்றது. குளக்கரையில் சுந்தரர் திருமேனியை எழுந்தருளச் செய்தமை முதலையுண்ட பாலனை அழைத்த அற்புதத்தை நினைவு கூர்தற் பொருட்டேயாம் என்பது ஊகித்து அறிதற்பாற்று.

### ஆளுடைய நம்பி புராணம் :

இரண்டாம் இராசாதி ராசனுடைய ஒன்பதாம் ஆட்சி ஆண்டுக்குரிய திருவொற்றியூர்க் கல்வெட்டு ''இவ்வரசன் படம் பக்க நாயக தேவர் திருமகிழின் கீழ்த் திருவோலக்கம் செய்து அருளியிருந்து ஆளுடைய நம்பிபுராணம் கேட்டருளா நின்றார்'' என்று கூறுகின்றது. மகிழமரத்தின்கீழ் சுந்தரருக்கும் சங்கிலியாருக்கும் திருமணம் நடந்த செய்தி இங்கு நினைவுக்கு வரும். மகிழின்கீழ்ப் படிக்கப் பெற்ற புராணம் பெரியபுராணம் ஆதல்கூடும் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

### தாராசுரத்துச் சிற்பங்கள் :

கும்பகோணத்துக்கு அண்மையில் உள்ள தாராசுரத்துக் கோயில் இறையகத்தைச் சுற்றியுள்ள பகுதியில் நாயன்மார் சரிதங்களை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. அச்சிற்பங்களின் மேல் அவ்வச் சிற்பத்தை விளக்கும் சொற்றொடர்கள் காணப்படுகின்றன. அவற்றில் சுந்தரருடைய வரலாற்றைக் குறிக்கும் சொற்றொடர்கள் காணப்படுகின்றன. சுந்தரருடைய வரலாற்றைக் குறிக்கும் சொற்றொடர்கள் பின்வருமாறு:

(1) உடைய நம்பி எழுந்தருளுகிறார்.

(2) ஆவண ஓலை காட்டினபடி

(3) உடைய நம்பிக்கு ஓலை என்று அருளினபடி.

(4) ஏயர்கோன் கலிக்காமாண்டார்.

(5) உடையநம்பி வேடவழி பறித்தபடி

(6) திருமுருகன் பூண்டியில் பெற்றபடி.

(7) அவிநாசி யாண்டார் முதலை வாய்ப்பிள்ளை.

(8) சேரமான் பெருமாள் காதை.

### முடிவுரை :

இதுகாறும் கூறியவாற்றால் சுந்தரர் வரலாறு தமிழ் மக்களால் பெரிதும் போற்றப் பெற்றமை தெள்ளிதின் விளங்கும். இங்ஙனமே இனியும் சைவ நன்னெறிப் படர்குவார் யாவரும் சுந்தரரது வரலாற்றைப் போற்றி உய்க.

—oOo—

# சேக்கிழார் பரவிய அப்பரடிகள்

பேராசிரியர் திரு. மறை திருநாவுக்கரசு, சென்னை.

''மண்பரவும் பெருங்கீர்த்தி வாகீசர்'' என்று அப்பரடிகளைச் சேக்கிழார் போற்றுகின்றார். சிவநெறியின் கொள்கைகளின் உருவாக - ஒளியாக விளங்கும் அப்பர்பெருமானைச் சேக்கிழார் பெருமான் பரவும் வகையில், சிவ சமயத்தின் உண்மைகளைஉலகவர்க்குஉணர்த்தி அவர்களை உய்விக்கின்றார். சமயநெறிக்கு உயிர் அதன் கோட்பாடுகளே. எனினும், அக் கோட்பாடுகளை மக்கள் போற்றவும் பின்பற்றவும் சமயத் தலைவர்களின் ஒழுக்கமும், உயர் பண்புகளும்,மெய்வரலாறுகளும், வண்மைகளும் (தியாகம்) இன்றியமையாதனவாகும். ஒரு சமயத்தின் பெருமையும், அருமையும், வாழ்வும் அச்சமயத் தலைவர்களின் மாண்புகளையே அடிப்படையாகக் கொண்டு இயல்வதாம்.

இச்சிறப்புக்களால் நிறைந்த ''மெய்த் தவத்து மேலோராம்'' அப்பரை-அவர்தம் தெய்வத்தன்மையினை, அவர்தம் வரலாற்றில் சேக்கிழார் காட்டிப் பரவும் திறங்களில் ஒரு சிலவற்றை ஈங்குக் காண்போம்.

மக்களை, வாழ்வாங்கு வாழச் செய்து தெய்வமாக்கும் மன்பதைத் தொண்டுகள் பலவாம். அவற்றுள் சமயத் தொண்டே முதன்மையானதாகும். ஆகவேதான், அப்பரை அவர்தம் வரலாற்றின் முதற்பாட்டில் சேக்கிழார் ''திருத்தொண்டின் நெறி வாழவரும் ஞானத் தவமுனிவர்'' என்றார்.

சமயத் தலைவர்கட்கும், ஏனைய துறையில் உள்ள தலைவர்கட்கும், அன்பின் அடிப்படையில் எழும் இரக்கமும், அதன் காரணமாக வரும் கொடையியல்பும் தலைசிறந்தனவாகும். இத்தன்மைகள் இளமைப் பருவத்தேயே நம் அப்பர்பால் அமைந்திருந்தமையைச் சேக்கிழார்,

''காவளர்த்துங் குளந்தொட்டும்
 கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
 மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக
 நல்கியும் நானிலத் துள்ளோர்
யாவருக்குந் தவிராத
 ஈகைவினைத் துறை நின்றார்''

என்று குறிப்பிட்டுப் போற்றிப் புகழ்ந்து துதித்துப் பரவினார்.

திருத்தொண்டில் (சமயப்பணியில்) உறைத்து நிற்குந் தவமுடைய தெய்வச் சான்றோர் அதற்கு வாய்ப்பாகத் தூய துறவியராயிருத்தல் பெரும்பான்மை. அத்தன்மை, இளமை மிக்க அப்பர்பால் விளங்கிய திறத்தினைச் சேக்கிழார் 'அறத்துறந்து' சிறந்தார் எனக் காட்டுகின்றார். உண்மைத் துறவிகளாவார், இறைவன்பால் உறுதியான பத்திமை உடையவராயிருத்தல் வேண்டும். அவ்வகையில் அப்பரை, ''மன்னிய அன்புறு பத்தி வடிவான வாகீசர்'' என்று பரவுகின்றார் சேக்கிழார். அதனாற்றான் பெருமானை நீற்றறையில் இருத்தியபோது அவர் ''ஈண்டுவருந் துயருளவோ ஈசனடியார்க்கு என்று மூண்டமனம்நேர்நோக்கி முதல்வனையே தொழுதிருந்தார்'' என்கின்றார்.

கடவுளடியார்க்கு உளதாகும் மேலான இயல்புகளில் தலையாயது பணிவுடைமையேயாம். தானென்ற முனைப்பற்ற இடத்தேதான் பணிவுப் பண்பு மிகுந்து காணப்பெறும். தான் என்ற முனைப்புடையார்க்கு உலகியற் றுன்பங்களும் பிறவித் துன்பங்களும் உண்டாகும். அத்தன்மை விட்டவரே சிவன் (கடவுள்)சேவடியாம் வீடு பேறெய்துவர். இவ்வுண்மையைச் சிவஞானபோதம் என்னும் சிவநெறிநூல்,

நானவன்என் றெண்ணினர்க்கு நாடும்உளம் உண்டாதல்
தான்எனஒன் றின்றியே தானதுவாய்—நான்என ஒன்று
இல்லென்று தானே எனுமவரைத் தன்னடிவைத்து
இல்லென்று தானாம் இறை

என்று கூறுகின்றது. அப்பர்பெருமான்பால் காணப்பெறும் ஒப்புயர்வற்ற உளமுருக்கும் பண்புகளில் இப்பணிவுப் பண்பே, இணையற்றதென்பதனைச் சேக்கிழார்பிரான் இவர்தம் வரலாற்றில் பலவிடங்களில் மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றார். அவற்றில் தலையாயது, அப்பர் அனைய சிவநெறித் தலைவரான திருஞானசம்பந்தர் தமக்கு ஞானப்பாலூட்டிய தம் முயிர்த் தந்தையாராகிய சிவபெருமானைத் தமக்கு ''அப்பர்'' எனப் போற்றினார். அச்

சிவபிரானுக்கு ஒப்பப் பரவும் வகையில் திருநாவுக்கரசரைக் கண்டபோது அவரை ''அப்பரே'' என்றார். இவ்வாறு தம்மைச் சம்பந்தர் சிறப்புற விளித்துப் போற்றியபோது நம் அப்பர்பெருமான் அதற்கு விடையளிக்கை யில் தம்மை ''அடியேன்'' என்றார்.

அன்றியும், அப்பூதியடிகள் தம்மைத் தெய்வமாகப் போற்றுகின்றார் என்றறிந்த பின்னும், அப்பரடிகள் அவர்க்குத் தம்மை அறி விக்க நேர்கையில், தம்மைச் 'சிறுமையேன்' என்கின்றார். திருஞானசம்பந்தர் இவர்ந்து வந்த பல்லக்கினை ''முந்தை வினைப்பயன்'' என்று சிந்தை களிப்புற''த் தாங்கிக் கொண்டு வருகின்றார் நம் அப்பர். ஈதறியாச் சம்பந்தர் ''அப்பர் தாம் எங்குற்றார்?'' என வினவுகை யில், நம்பிரான் ''ஒப்பரிய தவஞ்செய்தேன். ''உம்மடியேன்'' ''உம்மடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற்றேன்'' என்றார். இவ்வாறு கூறிச் சேக்கிழார் அப்பரடி களின் பணிவுப் பண்புகளைப் பரவுகின்றார்.

தொண்டினைச் சொல்லால் - மனத்தால் செய்தல் எளிது. மெய்யினாற் செய்தல் அரிது. அப்பரடிகள் மெய்யினாலுந் தொண்டாற்றி னார். இச் சிறப்பினைச் சேக்கிழார், அப்பரடி கட்குச் சிவபெருமான் தந்த பொற்காசு மாற் றுக் குறையாத மாண்பது என்றும், திருஞான சம்பந்தர்க்குக் கொடுத்த பொற்காசு மாற்றுக் குறைந்தது என்றுங் கூறுங்கால்,

''ஈசர் மிழலை இறையவர்பால்
இமயப் பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம்
திருமா மகனார் ஆதலினால்,
காசு வாசி யுடன்பெற்றார்;
கைத்தொண் டாகும் படிமையினால்,
வாசி இல்லாக் காசுபடி
பெற்று வந்தார் வாகீசர்!''

என்று பரவினார். திருக்கோயிலை - மாந்தர் நடமாடும் வீதியினைத்-தம் கையால் உழவாரப் பணிபுரிந்த அவ் வள்ளலார் மன்பதை உய்யத் தமிழ்மொழித் தலைவராகி மொழிவேந்தராகி முக்காலத்தவரும் உய்யுமாறு தாண்டகச் சது ரர் ஆகவும் திகழ்ந்தார். மக்கள் எய்தவேண்டிய உண்மைச் செல்வம் வீடுபேறே. அதனை மூவா யிரம் பாடல்களுக்கு மேலும் விரித்துரைத்த இப்பெருமானை, ஞான அரசு என்று சேக் கிழார் பரவி ''எல்லையில் சீர் வாகீசர்'' என் கின்றார்.

அகவை முதிர்ந்த பருவத்தும் நடையாக நாடெல்லாஞ் சுற்றியது, திருக்கோயில் வழி பாடாற்றியது, செந்தமிழ் மாமறையாம் தேவாரப் பாடல்களை அருளியது, மன்பதை உய்தற்கேயாம் என்பதனை விளக்க வந்த சேக் கிழார் நமது பெருமானை ''கலைமொழிக்கு நாதர்'' என்று கொண்டாடுகின்றார்.

மாந்தர் அறிவுபெற உதவுவது மொழி. அவ்வறிவு ''வால் அறிவன் தாள் தொழும்'' மெய்யறிவாதல் வேண்டும். அதற்குதவும்வகை யில் தமிழ் மொழியில் மறையாம் தேவாரத்தை அருளிச் செய்த அடிகளைச் சேக்கிழார் ''இன்தமிழ்க்கு மன்னரான வாகீசர்'' என்று போற்றுகின்றார். ''மறை அருளுவார்க்கு வேண்டும் உயர்பண்புகள், உணர்வுகள் அனைத் துங் கைவரப்பெற்ற தவ ஒருமையுடையார் நம்மடிகள் என்பதனை ''மெய்த்தன்மை உணர் வுடைய விழுத்தவத்து மேலோர்'', ''பேத மிலா ஒருணர்விற் பெரியவர்'' என்று பரவிக் காட்டுகிறார். அன்றியும் அப்பரடிகள் உலகி டைத் தோன்றிய காரணத்தை ''உலகில் வரும் இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிரவன் போல்'' என்றார்.

மக்கள் உள்ளத்திருளை நீக்கக் கடவுள் உணர்வு முறுகிக் கண்களில் நீர் பொழிதல் வேண்டும். வாய், இனிய அன்பு மொழிகளால் சிவனைப் புகழ்ந்து போற்றுதல் வேண்டும். உள் ளம் சிவபிரான் அருளையே சிந்தித்தபடி இருத் தல் வேண்டும். தொண்டு செய்யும் கருவிகளும் வேண்டும். பார்வாழப்பணிசெய்தல் வேண்டும். கடவுள் உணர்வை ஊட்டும் புறக் கோலங்கள் இன்றியமையாது வேண்டும். தமக்கு யாதுந் தேவையில்லாதிருத்தல் வேண்டும். கண்டா ரைக் கனிவிக்கும் அருட்பொலிவுமிக்க அழகுத் தோற்றம் வேண்டும். இத்தன்மைகளெல்லாம் நம் பெருமானிடத்துச் சிறந்து விளங்கிய அழ கினைச் சேக்கிழாரடிகள்,

''மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும்
திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழ்
மாலைகளும் செம்பொற் றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமுமாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்'' (1)

''தூய வெண்ணீறு துதைந்த
பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும்
பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயு முடையார்....'' (2)

''சிந்தை இடையறா அன்பும்,
திருமேனி தனிலசைவும்,
கந்தை மிகையாங் கருத்துங்
கையுழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும்
வடிவிற் பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசும்.... (3)

என்று பலவாறு சிறப்பித்துத் தம் புலம்சான்ற பாடல்களால் பாடிப் பரவுகின்றார்.

இதுகாறுங் காட்டியவற்றால், மாபெருந் தெய்வத் தலைவர்கட்கு இருக்கவேண்டும் அன்புக்கொடை, தூயதுறவு, பணிவு, கடவு ளன்பு, பத்திமை உருக்கம், புலமை, நன்மொழி கூறல், அருட்பொலிவுத் தோற்றம், இறைவன் திருவருளில் உறுதிப்பாடு, தொண்டு முதலியன, நம் ஒப்பிலா அப்பரடிகள்பால் விளங்கிய திறத் தினைச் சேக்கிழார் பெருமான் பரவிப் போற் றியதில் சுருக்கங்கருதி ஓரளவே இங்குக் கூறப் பட்டுள்ளமை காண்க! **

# சிவநெறியும் திருமுறையும்

''மும்மொழிப் புலமைச் செம்மல்''

திரு பெ. திருஞானசம்பந்தன், M.A., L.T.,

சைவசமயம், நம் பாரதநாட்டில் மட்டுமின்றிக் கடல்கடந்தும், தொன்றுதொட்டுப் பரவி விளங்கி வருகிறது. இன்று கன்னட நாட்டிலும், காச்மீர நாட்டிலும், கன்னித் தமிழ் நாட்டிலும், வீரசைவம், காச்மீரசைவம், சித்தாந்த சைவம் என்ற பெயர்களில் சைவம் வழங்கி வருகிறது. தொல்காப்பியர் காலத்தில் பெரியோனாகிய சிவபிரானுக்குக் கோயில் எடுக்கப்பட்டது. சங்க காலத்தில் ஆலமர் செல்வன், மாதொருபாகன், முப்புரம் எரித்த முதல்வன் போற்றப்பட்டுள்ளான். ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருமூலர் வேதாகமங்களை ஆதாரமாகக் கொண்ட சைவ சித்தாந்த சமயம் ஞானசம்பந்தர், அப்பர் ஆகிய இரு சைவக் கண்களைக்கொண்டு புத்தொளிபெற்று விளங்குவதாயிற்று. அவர்களின் திருப்பதிகங்களிலும் அவர்களுக்கு முன்னும்பின்னும் வாழ்ந்த காரைக்காலம்மையார், சுந்தரர் மாணிக்கவாசகர் போன்றோரின் திருப்பதிகங்களிலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மலிந்து கிடக்கின்றன.

'வேதாந்த சித்தாந்தம்' என்று திருமூலரால் குறிப்பிடப்பட்ட சைவத்தைப் பல்லவர், சோழர் குலத்து மன்னர்கள் போற்றி வளர்த்திருக்கிறார்கள். இவ்விரு குல மன்னர்களும் ஆரியம், தமிழ் இரண்டையும் போற்றி வந்திருக்கிறார்கள். உலகிலேயே தொன்மையும் இலக்கிய வளமும் கொண்ட இருமொழிகள் இவையே. தெய்வமணம் மிகுதியாகக் கொண்ட மொழிகளும் இவையே. பல்லவர்கள் குறிப்பாக சமஸ்கிருத வளர்ச்சிக்குப் பேராதரவு தந்தார்கள். சோழமன்னர்கள் வேதம் ஓதுவதற்கும். தமிழ்த் திருப்பதிகங்கள் ஓதுவதற்கும் நிபந்தங்கள் ஏற்படுத்தினார்கள். வேந்தர்களன்றி, ஊர் மக்களும் இவ்வகையில் பங்கு பெற்றுள்ளார்கள். விருத்தாசலத்தில் திருப்பதிகம் ஓதுவதற்கு நெற்குப்பையில் வாழ்ந்த மக்கள் வழிவகை செய்துள்ளது முதலாம் இராசராசன் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'சைவசித்தாந்த மார்க்கத்தை அறிந்தவன்' என்று தன்னைப் பெருமையுடன் அறிமுகப் படுத்திக் கொள்கிறான், பல்லவ வேந்தனான இராசசிம்மன் ஐயடிகள் காடவர்கோன். சேரமான்பெருமாள் போன்ற அரசர்கள் தெய்வப் பாடல்களைப் பாடியும்,தெய்வீக வாழ்வுவாழ்ந்தும் வந்திருக்கிறார்கள். மன்னராட்சியின்றி மக்களாட்சி நடைபெறும் இந்நாளில் திருமடங்களும், மக்கள் மன்றங்களுமே சிவம்பெருக்கும் பணியை மேற்கொள்ள வேண்டியவைகளாக இருக்கின்றன.

சைவசமயிகள் மூலநூல்களாகக் கொள்பவை நால் வேதமும், இருபத்தெட்டுச் சிவாகமங்களும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களும், பன்னிரு திருமுறைகளுமாம். 'வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்' 'சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே'என்னும் திருமூலர் கூற்று, இரண்டையும் ஒத்த நிலயில் வைத்துப் போற்றும் பண்பினைக் காட்டுகிறது. எப்படி இவை இரண்டும் சிவ பெருமானால் வெளியிடப்பட்டதால் பிரமாண நூல்களாக ஆகின்றனவோ, அப்படியே சிவாநுபவம் வாய்க்கப்பெற்ற ஆசாரியர்களால் அருளிச் செய்யப்பட்ட திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் பிரமாண நூல்களே.

'திருமுறை' என்ற சொல் மூன்றாங் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டில்காணப் படுகிறது. 'திரு' என்னும்சொல் 'செல்வன் கழல் ஏத்தும் செல்வத்தையும்' குறிக்கும். 'திருவே, என் செல்வமே' என்று அடியாரால் போற்றப்படும் சிவபெருமானையும் குறிக்கும். திருமுறை நமக்குக் கிடைத்துள்ள அரியசெல்வம். அதைப்போற்றும் வகையில் விழா எடுக்கும் பழம் மரபையொட்டி விழா எடுக்கிறோம். விழா எடுப்பதோடு அமையாது தினந்தோறும் திருமுறையை ஓதிவந்தால், சார்ந்ததன் வண்ணமாகும் நமது உயிர், சிவசம்பந்தத்தை இடையறாது பெற்றுச் சிவசாயுச்சிய நிலையை அடைய முயலும்.

சிவன், சீவன், தளை என்ற முப்பெரும் உண்மைப் பொருள்களில் முதலாவதாக நிற்பது சிவன். அவன் புகழைப் பேச முயன்ற வேதமும் தோல்வியுற்றது. மனத்தாலும் எண்ணிப் பார்க்க வியலாத அருமை பெருமைகளை உடையவன் இறைவன். இதைத் தான் வேதம் 'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ' என்று கூறுகிறது.

சிவனே பிரம்மசாரி வேடம்தாங்கி, தன்னை நோக்கித் தவம் புரிகின்ற பார்வதியை நோக்கிப் பேசுகிறார்: ''சிவனுக்கு வீடுவாசல்செ. த்து சுகம் ஏதாவது உண்டா? அவன் மண்டையோட்டை ஏந்தி மயானத்தில் திரிகின்றான். கிழட்டுக்காளை மீதேறிக் கைலாயமலை மீது சுற்றுகின்றான். அவனது தாய் தந்தையரை

யாரறிவார்? பாம்பணிந்து சாம்பலைப் பூசிப் புலித்தோலை அரைக்கசைத்துக் கூத்தாடுகின்றானே. அவனையா விரும்புகிறாய்?'' என்று கேட்டார். பார்வதி கோபமுற்றுக் கூறுகிறாள் ''அவர் மயானத்திலிருந்தாலும், மூவுலகிற்கும் நாயகன். வேண்டுதல்வேண்டாமையிலானாகிய அவனுக்குப் பாம்பும் பொன்னணியும் ஒன்றுதான். சாம்பலும் சந்தனமும் ஒன்றுதான். சொல்லப்போனால் அவரது அளப்பரிய பெருமையை யாரே உண்மையிலேயே அறிய வல்லார்?'' என்று பதில் கூறினாள்.

'நீலமணிமிடற்று ஒருவன்' என்ற சொல், அவனது தன்னலமற்ற, உலக நலத்தையே நாடும் பண்பையல்லவா பறைசாற்றுகின்றது. தேவரும் அரசரும் நஞ்சைக் கண்டு அஞ்சியோட அனைவரையும் காத்தற்பொருட்டுக் கண்டத்திலே பதியவைத்துக் கொண்ட, அவன் திருவருளை நினைந்து போற்றிய நூலோர் பலர். நஞ்சுண்டமைந்த அந்த நாகரிகத்தையும், இன்று உண்ணும் உணவிலும், பருகும் நீரிலும் உள்ளிழுக்கும் காற்றிலும் நஞ்சைக் கலக்கும் நாகரிகத்தையும், எண்ணிப் பார்ப்போமாக.

இருக்கு,எசுர்,சாமம் என்ற மூன்று வேதங்களுள் நடுவாயுள்ள எசுர் வேதத்தின் நடுப்பகுதியிலமைந்துள்ளது ஸ்ரீருத்ரம். அதன் நடுவே அமைந்துள்ளது 'சிவம்' எனும் சொல். சிவனும் சக்தியுமாய் இருக்கும் அவன் அனைத்திற்கும் தோற்றுவாய். 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவனது இருதாள் நிழற்கீழ் மூவகை உலகும் முகிழ்த்தன முறையே' என்று கூறுகிறது ஐங்குறுநூறு. இதையே 'பவன்' என்ற வேதச் சொல் குறிக்கிறது. ருத்ரன், பசுபதி, சர்வன் (உலகை ஒடுக்குபவன்) கபர்தீ (சடையன்),கிரீசன் (கயிலாயன்), பிருகத் (நெடியோன்), பூர்வஜன்(பழையோன்) என்றெல்லாம் வேதங்களில் போற்றப்படுகின்றான். உள்ளன்போடு போற்றும்உத்தம அடியாரின் உள்ளத்தில் கட்டைவிரல் அளவில் வீற்றிருக்கும் இறைவன், உலகனைத்தையும் கடந்த கடவுளாய் அப்பாலைக் கப்பாலாய் இருக்கிறான் என்பதைக் கடோபநிடதம் கூறுகிறது.

''அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண்
அம்மானாய்''

என்று இதனைத் திருவாசகமும் கூறுகிறது.

திருக்கோயிலாகிற படமாடும்கோயில்,நடமாடும் கோயிலாகிற நம் உடலமைப்பை ஒட்டியே அமைந்துள்ளது. நமது கால் ,வயிறு, கழுத்து, மூக்கு, தலை, குடுமி முதலிய உறுப்புக்கள், கோவில் கட்டட அமைப்பை முறையே கீழிருந்து மேலே நோக்கினால், உபானகம், பாதம் (தூண்),பித்தி(சுவர்),க்ரீவம் (கழுத்து), நாசிகை (மூக்கு), சிரம்(தலை), ஸ்தூபி என்ற சிற்பநூற் சொற்களால் குறிக்கப்படும் பகுதிகளோடு ஒத்திருப்பதைக் காணலாம். கோவிலின் ஐந்து பிராகாரங்களும் உடலின் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்று சொல்லப்படும் ஐந்து கோசங்களோடு ஒத்தன. கர்ப்பக் கிருகத்திலுள்ள இறைவன் நம் உடலில் உள்ள உயிர் போன்றவன். வெளிப் பிராகாரங்கள் தொடங்கிக் கருவறைக்குச் செல்லும் ஒருவன் உலகியலிலிருந்து சிறிது சிறிதாக விலகி, சிவனோடு ஒன்றும் நிலைக்குச் செல்லத் தன்னைத் தயார் செய்து கொள்கின்றான்.

மக்களின் பக்குவ நிலைகள்வெவ்வேறாக இருப்பதால், அவரவர் நிலைக்கேற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிமுறைகளை நமது ஆசாரியர்கள் அமைத்தும் வாழ்ந்தும் காட்டியிருக்கிறார்கள். எப்பிறப்பினருக்கும் எந்நிலையினருக்கும் நமது சமயம் இடங்கொடுக்கிறதென்பதை, நமது நாயன்மார்கள் வரலாற்றிலே திருமுறைகளில் காணலாம். ஆவுரித்துத் தின்னும் புலையரேனும், நம் ஈசர்க்கு அன்பராகில் அவருக்கு முக்தியுண்டு. உண்மைப் பக்தி இருந்தால், அந்தப் பக்திவலையில் படுவான் பரமன். 'பொக்கம் மிக்கவர் பூவும்நீரும் கண்டு' சிரிப்பாராம் நம் சிவபெருமான். காஞ்சியில் பெருங்கோயில் எழுப்பிய காடவர்கோனை விட, திருநின்றவூரில் மனக்கோயில் எழுப்பிய பூசலாரின் பூசனையை உவந்து ஏற்றுக்கொண்டருளினான் நம் புனிதன்.

பூசை செய்யும்போது நாம் இறைவனிடத்தில் எதைவேண்டுதல் வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறார். ''புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே வழுவாதிருக்க வரம் தரவேண்டும்'' என்கிறார் அப்பர்பெருமான். பொன்னும் மெய்ப்பொருளும் தருவானிடத்தில், பொன்னையும் பொருளையும் போகத்தையும் வேண்டுவோரே இன்று பலர். இம்மைக்குப் பொருளையும், மறுமைக்கு வீட்டையும் மறவாது வேண்டினால், பக்குவநிலை எய்தியபோது மெய்ப்பொருளையே நாடும் மனம் அமையும். 'உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்தால்' அவன்முன் நிற்பான்.

சான்றோர்கள், செந்தண்மை பூண்டு ஒழுகுவோர்; அவர்கள் வாழ்ந்தால், அவர்களின் வழி மக்கள் அனைவரும் வாழ்வர்.வானவர் வாழ்ந்தால் மக்கள் வாழ்வும் செழிக்கும். ஆனினம் வாழ்ந்தால்தான் உயிரியக்கம் உண்டு. ஆகவே அனைவரும் வாழ வாழ்த்தினர் ஞானசம்பந்தப்பெருமான். 'வாழ்க அந்தணர், வானவர் ஆனினம்' என்பதாக. நமது ஞானசம்பந்தரும் அப்பரும் சமுதாயத்தில் மலிந்திருந்த பிறசமயங்களின் தீய கருத்துக்களை அகற்றி நன்னெறியாம் சிவநெறியைப் பரப்பவே பாடுபட்டார்கள். அத்தகைய சமுதாயக் கண்ணோட்டத்துடன் ஒவ்வொருவரும் இறையருளை வேண்டுதல் வேண்டும்.

—oOo—

# திருக்குடந்தை எம்பெருமான்

'மகாமகிமோபாத்யாய' 'மகாவித்வான்'
திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்,
காஞ்சிபுரம்

நமது தமிழ்நாட்டில் ஆங்காங்கு விளங்கும் திவ்விய தேசத்து எம்பெருமான்களுக்குப் பல்வேறு திருநாமங்கள் வழங்கி வருகின்றன. அரங்கன், வேங்கடவன், பேரருளாளன், திருநாராயணன், அழகர், ஆதிநாதன், கேசவன், தாமோதரன், ஆமருவியப்பன், புருஷோத்தமன், கள்ளப்பிரான் என்று இப்படி, நானாவிதமான திருநாமங்கள் நமது காதில் விழுகின்றன. எனினும், ஆராவமுது என்னும் திருநாமம் நமது காதில் விழும்போதும், நாவில் வரும் போதும் உண்மையிலேயே அமுதம் உண்பதாகவே தோன்றுகின்றது. ஆராவமுதன் என்கிற திருநாமத்திற் காட்டிலும், ஆராவமுது என்கிற திருநாமமே இன்சுவை மிக்கதாய்த் தோன்றுகின்றது. இத் திருநாமத்தை வடமொழியில் 'அபர்யாப்தாம்ருதம்' என்று வழங்கி வருகின்றார்கள். ஆனால் ஆராவமுது என்கிற சொல்லுக்கும், அந்த வடசொல்லுக்கும் ஒருவிதமான சம்பந்தமும் இல்லைபோலவே நெஞ்சு நினைக்கின்றது. சம்பந்தம் இல்லாமல் என்ன? நேரான மொழிபெயர்ப்புதான். ஆயினும் ஆராவமுது என்கிற சொல்லில் உண்டாகும் இன்பத்தின் ஏகதேசமும் (ஒருபகுதியும்), அதில் உண்டாவதில்லை.

திவ்விய தேசங்களில் எம்பெருமான்களுக்கு வழங்கும் திருநாமங்களைப் பற்றிச் சிலர் ஆராய்ச்சி செய்வது உண்டு; அநாதிகாலமாக வழங்கிவருகின்ற திருநாமங்களை ஆழ்வார்கள் தங்கள் திவ்வியப் பிரபந்தங்களிலே எடுத்து ஆளுகின்றார்களா? அல்லது, ஆழ்வார்கள் இட்ட திருநாமங்களைப் பின்புள்ளார் வழங்கி வரத் தொடங்கினார்களா? என்று. இவ்வாராய்ச்சியின் நேர்மையான முடிவு எங்ஙனேயாயினும் ஆகுக. ஆராவமுது என்கிற திருநாமம் மாத்திரம் முதன் முதலாக நம்மாழ்வார் திருவாக்கில்தான் அவதரித்திருக்கும் என்கிற நிச்சயஞானம் நமக்குள்ளது. இத்திருநாமத்தின் சுவையை அறிந்து சுவைக்க வல்லார் மிகச் சிலரே.

நம்மிடத்தில், ஆராவமுது என்கிற ஒரு பையன் மாணாக்கனாக இருந்தான். ஒருசமயம் அவனை அவனது தகப்பனார் தம் ஊருக்கு அழைத்துச் செல்வதற்காக வந்தார். அப்போது நான் அவரிடத்தில் பேசிக்கொண்டிருக்கையில், ''இவனுக்கு ஆராவமுது'' என்று பெயர் வைத்திருக்கின்றீரே; இவன் திருக்குடந்தையில் பிறந்தானோ?'' என்று கேட்டோம். அதற்கு அவர் சொன்னார்-இல்லை இல்லை; இவன் ஆறாவது பையனாகப் பிறந்தான்; அதனால் ஆறாவது என்று பெயர் வைத்தேன் என்றார். இவனுடைய சர்மன் என்ன? என்று கேட்டதற்கு சீநிவாச சர்மன் என்றார். இதைக்கேட்ட உடனே நமக்கு உண்டான துக்கம் சத்தியமாய் அளவு கடந்திருந்தது. திருக்குடந்தை எம்பெருமானுடைய திருநாமத்தைக்கூட, அவர் ஆறாவது என்றே கிரகித்திருக்கின்றார். ஆராவமுது என்னும் திருப்பெயருக்கும், ஆறாவது என்ற எண்ணின் பெயருக்கும் உள்ள வித்தியாசம்கூட அவருக்குத் தெரியவில்லை. நாதன் கோவில் திருவிண்ணகர் புள்ளம்பூதங்குடி ஆதனூர் திருவெள்ளியங்குடி ஆகிய ஐந்து ஊர்களைக் காட்டிலும், ஆறாவதான திருக்குடந்தையிலே எழுந்தருளியிருக்கையாலே ஆறாவது பெருமாள் என்பதாக அவருடைய கருத்தாம். இது நம்மாழ்வார் திருச்செவியில் விழுந்தால் அவர் என்ன பாடுபடுவரோ? அறியோம்!

**

# திருவாசகமும், திருக்கோவையாரும்

ந. ரா. முருகவேள், M.A.,M.O.L.

**முன்னுரை :**

மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த நூல்களுள், திருவாசகம் ஒன்றையே பலரும் பொதுவாக அறிந்திருப்பர். ஆனால் அப் பெருந்தகையாரே, திருச்சிற்றம் பலக்கோவை யார் என்னும் பிறிதொரு சிறந்த தெய்விக நூலையும் அருளிச் செய்யுதுள்ளார் என்பது, கற்றறிந்த ஒரு சிலருக்கே தெரிந்திருத்தல்கூடும். திருவாசகம் சிறந்ததொரு தெய்விகப் பெரு நூல் என்றால், அதனைச் சார்ந்து எழுந்த திருச்சிற்றம்பலக் கோவையாரும், மிகச்சிறந்த தொரு தெய்விக ஞானப் பெருநூல்ஆகும். ''பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' எனச் சிவபெருமானே, மாணிக்கவாசகப்பெருமானை இரந்து வேண்டிப்பெற்ற, இணையற்ற பெருஞ் சிறப்புடையது, திருச்சிற்றம்பலக் கோவையார்.

**திருவாசகமும் திருக்கோவையாரும்:**

*(1)* திருவாசகம், மாணிக்கவாசகரது அயரா அன்பின் திறனை விளக்குகின்றது; திருச் சிற்றம்பலக்கோவையார், அவர்தம் அரிய பெரிய புலமை நலத்தின் பெற்றிமையினைத் திறம்படப் புலப்படுத்துகின்றது.

*(2)* சிவபெருமானின் அருள் நலங்களைப் புகழ்ந்து பாடிப் போற்றுகின்றது திருவாசகம்; நமது அருமைச் செந்தமிழ் மொழியின் சீரிய அகப்பொருள் இலக்கணங்களை அழகுறத் தெளிவித்துணர்த்தித் தேற்றுகின்றது, திருச்சிற் றம்பலக்கோவையார். திருவாசகம் சிவநெறித் திருநூல் ; திருக்கோவையார் செந்தமிழ் மொழிப் பெருநூல்!

*(3)* திருவாசகம், தெவிட்டாத தேனை யனைய சிறப்பினதெனின், திருச்சிற்றம்பலக் கோவையார் அத்தேனிடை ஊறிய தெய்வ நலம் சிறந்த செந்தமிழ் அமிழ்தம் போல்வ தாகும்.

*(4)* மாணிக்கவாசகர், தமது திருவாசகச் செழும் பாடல்களில், ''பூண்ட ஐம்புலனிற் புலப்படா இன்பம் புணர்ந்து மெய்யுணர்விற் பொங்கும்'' சிவானுபவ உணர்ச்சித் திறங் களை வெளியிட்டருளினார்.

இங்ஙனம், தாம் ஒருவர் மட்டுமே தம் தனிநிலையில் நுகர்ந்துணர்ந்த, ஐம்பொறியள விற் புலப்படாச் செம்பொருள் அருளனுபவ இன்ப உணர்ச்சிகளை, அவை இயல்பாகத் தாமே தம் உள்ளத்தில் பொங்கி எழுந்து வழிந் தவாறு, திருவாசகமாகத் திருவாய் மலர்ந்தரு ளிய மாணிக்கவாசகர், அச்சிவானுபவ அரு ளின்ப நல உணர்வுகளை, ஏனைய மக்களா னார்க் கெல்லாமும் எடுத்துரைத்து உணர்த்தி, அவர் தம்மையும் அப்பேரின்ப நலம் தலைப் படுமாறு செய்வித்தற் பொருட்டு,

''பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கம்''

போலப் பல்லாற்றானும் ''மனத்தின்எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு, இனத்திற்சேர்த்தி உணர்த்தல் வேண்டும்'' என்ற முறையில், ''யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்னும் பெருங் கருணையினால், 'பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க' என்னும் நுட்பம் அறிந்து, கடுத்தின்னாதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றுமாறு போல, (கசப்பு மருந்தை, மேலே இனிப்புப் பூசி உண்பித்தல் போல) நாம் அறியப்பெறாத உயரிய கடவுளின்பநலத் தினை, நாம் அறிந்த எளிய காதலின்பச் செய் தியின்கண் வைத்துப் பிணைத்து விளக்கிப் பாடும் விழுமிய பெருந்தெய்விக நூலே, திருச் சிற்றம்பலக்கோவையார் ஆகும்.

**காமஞ் சான்ற ஞானப் பனுவல்:**

திருச்சிற்றம்பலக் கோவையாரின் அளப் பருஞ் சிறப்பினை எல்லாம், விளக்கமுறச் சுருங் கிய முறையில் குறிப்பிடும் ''காமஞ் சான்ற ஞானப் பனுவல்'' என்னும் அரும் பொருட் சொற்றொடர், செந்தில் முருகன் திருவருள் பெற்றுக் கந்தர் கலிவெண்பா என்னும் செந் தமிழ்த் துதி நூலைப் பாடியருளிய குமரகுரு பர அடிகளார் இயற்றியருளிய சிதம்பர மும் மணிக்கோவை என்னும் நூலின்கண்,

''கடங்கலுழ் கலுழிக் களிநல் யானை
மடங்கலந் துப்பின் மானவேல் வழுதிக்கு,
இருநிலம் அகழ்ந்தும் எண்ணில்பல் காலம்
ஒருவன் காணாது ஒளித்திருந் தோயை,
வனசப் புத்தேள் மணிநாப் பந்திக்
கவனவாம் புரவியிற் காட்டிக் கொடுத்துப்
பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்,
ஐந்திணை யுறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருள்எனச் சுட்டிய ஒருபெருஞ் செல்வ!''

எனவரும் பாடற்கண் வருவதாகும். அதன்கண் குமரகுருபரர், மாணிக்கவாசகர், தாம் அருளிச் செய்த திருவாசகம் திருச்சிற்றம்பலக் கோவை யார் என்னும் இரு பெருநூற்கும் உண்மைப் பொருளாவார் அம்பலவாணரே எனச் சுட்டிச் சென்றமையினையும், பாண்டியவேந்தனுக்கு மாலும் அயனுமே காணமாட்டாத இறை வனை வேதப் புரவியின்மேல் வாதுவனாகப் போதரக்காட்டி அவனை உய்வித்த சிறப்பை யும் புகழ்ந்தெடுத்துப் பாராட்டி, மாணிக்கவாச கரைச் 'செந்நாப்புலவன்' எனச் சிறப்பித்தும், திருவாசகத்தினைப் '**பைந்தமிழ்**' எனப் போற்றியும் திருச்சிற்றம்பல கோவையாரை 'ஐந்திணையுறுப்பின் நாற்பொருள் பயக்கும் காமம் சான்ற ஞானப்பனுவல்' என விதந்து கூறியும் மகிழ்ந்தின்புறுகின்றார்.

இந்நூலின்கண் காமச்சுவையும் ஞானப் பொருளும் பிரிவற விரவிக் கலந்திருக்கும் பெற்றியினைத் 'தாலிபுலாகநயம்'பற்றி ஒரு சில பாடல்களின் துணைகொண்டு, ஈண்டு இயன்ற பெற்றி சுருக்கமாக ஒரு சிறிது உணர முயலுவோமாக!

**1. உயிர் என வியத்தல்:**

அகப்பொருள் நூல்களில் 'உயிர் என வியத்தல்' என்பது ஒரு துறை. தலைவன் ஒரு பொழிலின்கண் தலைவியைக் கண்டு, இன்பச் சிறப்பும், பிரியலாகாமையும் பற்றி, அவளைத் தன் உயிர் எனப் பாராட்டி மகிழ்வதாகப் பாடப்பெறுவது அத்துறைக்குரிய பொருள். அதன்கண், மாணிக்கவாசகர் தம் உயிர்க்குயிராக விளங்கும் சிவபெருமானின் செயல்களைப் பற்றிய குறிப்பும் அமையப் பாடியருள்கின்றார்.

''நேயத்த தாய், நென்னல் என்னைப்
புணர்ந்துநெஞ் சம்நெகப்போய்
ஆயத்த தாய், அமிழ் தாய், அணங்காய்,
அரன் அம்பலம்போல்
தேயத்த தாய், என்றன் சிந்தைய தாய்த்,
தெரி யிற்பெரிதும்
மாயத்த தாகி, இதோவந்து
நின்றதென் மன்னுயிரே?''

என்னும் திருச்சிற்றம்பலக் கோவையார் பாடலில், அத்துறைக்குரிய அகப்பொருட்கருத்தேயன்றி,

''என்பால் அருள் உடையதாய் முன்னர் என்னை ஆட்கொண்டு, பின்னர் என் நெஞ்சம் கலங்கி வருந்தும்படி அடியார் திரளுடன் பிரிந்து சென்று, நினைக்கும்தோறும் அமிழ்தம் போல இன்பம் செய்து, கட்புலனாகாதுமறைந்து நிற்றலின் துன்பம் செய்து, தில்லையம்பலம் போலும் பிற நல்ல தலங்களிலும் விளங்கி, என் மனத்தின் கண்ணே நிலைபெற்று, இங்ஙனமெல்லாம் மாயத் தன்மை வாய்ந்து, எனது நிலைபெறும் உயிர் (சிவம்), இதோ வந்து தோன்றிநிற்கின்றது''

என்னும் பிறிதோர் அரிய கருத்தும் அமைந்திருத்தல் காணலாம்.

**2. மறைமுகக் கூற்று:**

தோழி, தலைவனைக் குறித்து மென்மொழியாலும் வன்மொழியாலும் தலைவியின்பாற் பேசி, அவள் குறிப்பறிய முயலுகின்றாள். தலைவி பெருநாணமுடையவள் ஆதலின், தலைவனைத் தான் காதலிப்பதை நேரே கூற முற்படாமல், 'அறியாள் போன்றும்' (85) 'வஞ்சித் துரைத்தும்' (86) மறைமுகமாக முறையே உணர்த்துறிகின்றாள்.

''புரங்கடந் தான்அடி காண்பான்
புவிவிண்டு புக்கறியா (து)
'இரங்கிடு எந்தாய்' என் றிரப்பத்,
தன் ஈரடிக் கென்னிரண்டு
கரங்கள்தந் தான், ஒன்றுகாட்ட, மற்
றாங்கதும் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை அம்பல
முன்றில்அம் மாயவனே!''

குறைநயப்பால் தலைமகனின் நிலைமைகேட்ட தலைமகள் பெருநாணினள் ஆகலின், தலைவன்பால் தான் கொண்டுள்ள காதலின் மிகுதி பற்றித் தோழியின் கூற்றுகட்கு வெளிப்படையாக மறுமொழி கொடாமல், ஓர்ந்து கூட்டினால் மறுமொழியாகும் வண்ணம், கடலின் மேலும் மாயவன் மேலும் வைத்துத் தன் உள்ளக் குறிப்பைப் புலப்படுத்தினாள். இப்பாடல்களில்,

''அடியார்களின் நல்ல சங்கம் (கூட்டுறவு) தரும் முத்தியாகிய வீடுபேற்றினை யாம் பெறுமாறு, எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு நிற்கும் விசும்பினையும் கடந்து நிற்கும் சிவபிரான், கங்கையைத் தலையில் சூடியும், கபாலத்தைக் கையில் ஏந்தியும் ஒருவடிவம் கொண்டு போந்தருளினான்'' எனவும்; ''மாயவன் தில்லை அம்பல முன்றிலில் வரங்கிடந்தும் காண்பதற்கரிய சிவபிரானின் திருவடிகள் எமக்குப் பெரிதும் எளிவந்து இன்னருள் புரிந்தன'' எனவும்; அகப் பொருட்டுறைக்கு அப்பாற்பட்ட வேறு பிற அரிய கருத்துக்களும், இவற்றில் அமைந்திருத்தல் காணலாம்.

**4. புனல்தரு புணர்ச்சி:**

''புனல்தரு புணர்ச்சி'' என்பது அகப்பொருட்குரிய துறைகளில் ஒன்று. சுனைப் புனலில் தவறி வீழ்ந்து துயருற்றுத் தத்தளிக்கும் தலைவியை, எதிர்பாரா வகையில் அவ்வழியே போந்த தலைவன் எடுத்துக் கரை சேர்த்துக் காப்பாற்றுகின்றான். அந் நன்றியை நினைந்து, தோழியின்பால் தலைவனின் குறை நேர்ந்து, அவனை மணப்பதற்குத் தன் உடன்பாட்டினைத் தலைவி குறிப்பினாற் புலப்படுத்துகின்றாள்.

''ஓங்கும் ஒருவிடம் உண்டம்
பலத்தும்பர்உய்ய அன்று
தாங்கும் ஒருவன் தடவரை
வாய்த்தழங் கும்அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்த அன்று
அழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்குஅறி யேன்சிறி யேன்
சொல்லும் வாசகமே!''

எனவரும் அழகிய இனிய அரிய திருப்பாடலில்,

''பிறவியாகிய கடலில் விழுந்து யான் தத்தளிக்குங்கால், என்னைத் தாமே எளிவந்து வலித்தாண்டு கொண்டு பிடித்தெடுத்துக் காப்பாற்றிப் பேருதவி செய்தருளிய தலைவர்ஆகிய சிவபெருமானுக்கு; யான் சொல்லத் தகுந்த நன்றியுரை யாது என்று, சிறியேன் அறிகின்றிலேன்''.

எனவும் வேறொரு ஞானப்பொருள் குறிப்பிற் புலப்பட அமைந்து நிற்றல் உணர்ந்து மகிழ்தற்குரியது.

''தனியனேன பெரும்பிறவிப் பவ்வத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு,
பற்றொன் றின்றிக்,
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலாற்
சுலக்குண்டு, காமவான் சுறவின்
வாய்ப்பட்டு,
இனிஎன்னே உய்யுமாறு என்றென் றெண்ணி,
அஞ்செழுத்தின் புணைபிடித்துக்
கிடக்கின்றேனை,
முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய்
மூர்க்க னேற்கே''

என்ற திருவாசகப்பாடல், ஈண்டு இயைத் தெண்ணி இன்புறுதற்குரியது.

## 5. தூது கண்டு அழுகல்:

''தூதுகண்டு அழுங்கல்'' என்பது ஓர் அகப்பொருள் துறை. தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளுதற்குரிய பொருள் குறித்துப் பிரிந்து சென்றான். சென்றவனைப் பற்றிய செய்தி ஒன்றும் தெரிந்திலது. இவ னைப் போலவே, பொருள்தேடி வருவதற்கும், போர் செய்து பகைவரை அடக்கி மீள்வதற்கும் பிரிந்து சென்ற ஏனையரெல்லாம் தத்தமக் குரியவர்கட்குத் தூதுவர் வாயிலாக அவ்வப் போது செய்திகள் விடுத்துக் கொண்டிருந்த னர். தலைவனோ திரும்பியும் வரவில்லை, தன் நிலை குறித்துத் தூதுவர்கள் வாயிலாகச் செய் தியும் விடுக்கவில்லை. ஆதலின் அவனை நினைந்து தலைவி கவலை கொள்கின்றாள்.

''வருவன செல்வன தூதுகள்
ஏதில வான்புலியூர்
ஒருவனது அன்பரின் இன்பக்
கலவிகள் உள்ளுருகத்
தருவன செய்தெனது ஆவிகொண்
டேகி, என் நெஞ்சில் தம்மை
இருவின காதலர் ஏதுசெய் வான்
இன்று இருக்கின்றதே!''

இப்பாடலின் கண்ணும்,

''தனது மெய்யன்பர்களைப் போல, யானும் இன்பம் எய்த, உள்ளம் உருக்கும் கல விகளை (அருட் செயல்களை) முன்னே செய்து, பின்பு என் உயிர் பிரிந்தாற்போலத் தாம் பிரிந்து அகன்று, ஒருஞான்றும் கட்புலனாகாமல் மறைந்துநின்று, தன்னை யான் நினைந்து வருந் தும்படி செய்த காதலர் (சிவபிரான்), இன்று யாது செய்யக் கருதியிருக்கின்றனரோ? அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் கொண்ட அவர் நன்றே செயினும் பிழை செயி னும் நானோ இதற்கு நாயகம்?'' எனப் பிறி தொரு ஞானப்பொருள் கரந்துறைந்து நிற்றல் கருதியுணர்ந்து மகிழற்பாலது.

## 6. ஊடல் நீடவாடி உரைத்தல்:

இங்ஙனமே ''ஊடல்நீட வாடி யுரைத்தல்'' என்பதும் ஓர் அகப்பொருட்டுறை. தலைவியின் ஊடலைத் தணிக்கத் தலைவன் முயல்கின்றான். 'உப்பமைந் தற்றாற் புலவி' என்னும் நுட்பம் தெளியாத தலைவி தனது ஊடலைச் சிறிது நீடிக்கின்றாள்; அதனால் வாடிய தலைவன் தன் மனம் பெரிதும் வருந்தி யுரைப்பதாக வரு வது பின்வரும் செய்யுள்.

''திருந்தேன் உயநின்ற சிற்றம்
பலவர்தென் னம்பொதியில்
இருந்தேன் உயவந்து இணைமலர்க்
கண்ணின்இன் நோக்கருளிப்
பெருந்தேன் எனநெஞ் சுகப்பிடித்
தாண்டநம் பெண்அமிழ்தம்
வருந்தேல் அதுவன்று இதுவோ
வருவதோர் வஞ்சனையே!''

இப்பாடலில், மாணிக்கவாசகர் தம்மை ஆட் கொண்டருளிய 'பெண்ணோடு கூடிய அமிழ்தம் போல்பவராகிய அம்மையப்பர் (சிவபிரான்), முன்பு தமக்குச் செய்தருளிய தலையளிகளை நினைவு கூர்ந்து இனிய முறையிற் குறிப்பிட்ட ருள்கின்றார்.

''ஒருவாற்றானும் திருந்தாதவனாய்த், தன்னை அடைதல் குறித்து ஒரு முயற்சியும் செய்யாமல் வீணே யுழன்று கிடந்த யான், பிற வித் துன்பத்தினின்றும் தப்பிப் பிழைக்கும் பொருட்டுத் தானே தனது பேரருட் பெற்றியி னால் எளிவந்து தோன்றித் தனது இணைமலர்க் கண்களின் இனிய கடைக்கண் நோக்கத்தினை என்பாற் செலுத்திப் பெருந்தேனைப் போன்று இனிமை மிக்கு, என் கல்மனமும் கரைந்துருக, வாவாவென்று என்னையும் பூதலத்தே வலித் தாண்டு கொண்டான்''

என்னும் பிறிதொரு பொருட் குறிப்பும், இவ் வகப்பொருட்டுறைச் செய்யுளில் இனிதமைந்து, பின்வரும் திருவாசகச் செய்யுள்களை நினை வூட்டுதல் காணலாம்.

''நானும்என் சிந்தையும்
நாயகனுக் கெவ்விடத்தோம்?
தானும்தன் தையலுமாய்த்
தாழ்சடையோன் ஆண்டிலனேல்!
வானும் திசைகளும்
மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே
சென்றூதாய் கோத்தும்பீ!''

''தோலும் துகிலும்
குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும்
பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும்
உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக்
குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!''

இங்ஙனம் அம்மையப்பர் திருக்கோலத் தினையும், அத்திருக்கோலத்தில் சிவபிரான் தமக்குச் செய்த அருட்டிறனையும், திருவாச கத்திலும் மணிவாசகர் ஆங்காங்கே அழகுறப் பாடியிருத்தல் அறிந்தின்புறற்பாலது.

## முடிவுரை:

இங்ஙனமெல்லாம், மாணிக்கவாசகரால் தமது சிவானுபவச் செய்திகளும் ஞானப் பொருள்நலங்களும் செறிந்துவிளங்கவும், காமச் சுவை கனியவும், சிறந்த முறையில் அருளிச் செய்யப்பெற்ற 'காமஞ்சான்ற ஞானப்பனுவல்' ஆகிய திருச்சிற்றம்பலக் கோவையார், திரு வரசக அருளனுபவங்களையே உலகியல் அனு பவ நிலையிற் பொருத்தி விளக்கும் தகைமை வாய்ந்து கடல் எனப் பரந்து விரிந்த கருத்துச் சிறப்பும் வளமும் மிக்குடையதாய்த் திகழ்ந் தொளிர்வது! அதன் அருமை பெருமைகள் விரிப்பிற் பெருகியும் தொகுப்பின் எஞ்சியும் செல்லுமாதலின் 'சமுத்திர கலச நியாயம், பற்றி ஈண்டைக்கு வேண்டிய அளவின் மட்டும், இயன்ற பெற்றி ஒரு சிறிது எடுத்துக் விளக்கப் பட்டது. 'கடல் கண்டோம் என்பார் யாவரே முடிவுறக்கண்டார்.'

**

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையினால் பாடித் துதித்தலினால் எனது பழவினைகள் ஒழியவில்லை எனின், அஃது எவ்வாறு பொருந்தும்? நெருப்பை நினைத்தோ மறந்தோ தொட்டாலும் அது தவறாமல் சுடத்தானே செய்யும்? அதுபோல. யான் அறிவு முதிர்ந்தோ அல்லது அறியாமை மிகுந்தோ நின்னைத் துதித்தாலும், என் பழவினைகள் நீங்கி விடுதல் வேண்டுமல்லவா? (40)

**சொற்கள்**

அங்கையேந் துறுபைங் கிள்ளையின்
மொழியோ
வறுமுகக் குழவிவாய் மொழியோ,
சங்கையே குழையாக் கொண்டவ னூட
றணித்திடப் புகலுமின் மொழியோ
மங்கைநின் செவிக்கு நாயினேன் புன்சொன்
மற்றுநீ யிரங்கலெவ் வாறோ,
கங்கைதாழ் பொன்னி சூழ்திரு வானைக்
காவகி லாண்ட நாயகியே. (41)

அழகிய கையில் ஏந்தியுள்ள கிளியின் சொற்களையும், ஆறு திருமுகங்களை உடைய முருகனாகிய குழந்தையின் மழலை மொழிகளையும், சங்கக் குழையணிந்த சிவபிரான் நின் ஊடல் தணியும்படி கூறுகின்ற இனிய பணி மொழிகளையும், கேட்டு மகிழ்கின்ற நின் செவிகளுக்கு, நாயினேனது புன் சொற்கள் ஒரு பொருட்டாமோ? என்புல்லிய சொற்களைக் கேட்டு, என்பால் நீ இரக்கங் கொள்வது எங்ஙனம்? (41)

**ஞாயிறு எங்கு எழில் என்:**

ஒப்பினின் புகழே கேட்கவென் செவிகண்
ஓங்குநின் னுருவமே காணத்
தப்பினின் றனையே பாடிட வாய்கை
தவாதுநின் னடிப்பணி யாற்ற
விப்படி யுறுமேற் செங்கதி ருதய
மெத்திசை யெழினுமற் றென்னே,
கப்பிணர்த் தருக்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (42)

அகிலாண்ட நாயகியே! என் செவிகள் ஒப்பில்லாத நின்னுடைய புகழையே கேட்பனவாக. கண்கள் நின் சிறந்த திருவுருவினையே காண்பனவாக. வாய் நின்னையே புகழ்ந்து பாடுவதாக. கைகள் நின் திருவடித் தொண்டினையே செய்வனவாகுக. இந்நிலை எனக்கு வாய்த்து விட்டால், பின்னர் எனக்குச் சூரியன் எத்திசையில் தோன்றினால்தான் என்னே? (42)

**திருவைந் தெழுந்து:**

ஓதுறு முறைமை யொன்றின்முன் மூன்று
ளொருசிறி யேற்குநின் பதிக்கும்
போதுறு குழனீ நடுப்பொலி தலினாற்
புரிந்துநின் பதியொடு மெனைப்பின்
றீதுறு மிரண்டி னீக்கியொன் றாக்குந்
திறனினக் கன்றியார்க் குளது,
காதுறு கண்ணார் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (43)

அம்மையே! திருவைந் தெழுத்தை ஓதுகின்ற முறைகள் ஒன்றில், முன்னேயுள்ள மூன்று எழுத்துக்களுள், சிவபெருமானுக்கும் எனக்கும் நடுவே நீ எழுந்தருளி விளங்குகின்றாய். அதனால் பின்னுள்ள இரண்டு தீமைகளினின்று நீக்கி, நின் கணவராகிய சிவபெருமானோடு என்னைச் சேர்ப்பிக்கும் ஆற்றல், நினக்கே அன்றி வேறு யார்க்கு உளதாகும்.

[திருவைந்தெழுத்தை ஓதும் முறைகளுள் ஒன்று, நமசிவய என்பது. இதன்கண் முன்னேயுள்ள மூன்று என்பது 'சிவய' என்பது. இம் மூன்றினுள் சி சிவத்தையும், வ அம்பிகையையும், ய உயிரையும் குறிக்கும். ஆதலின். 'சிறியேற்கும் பதிக்கும் நீ நடுவிற் பொலிகின்றாய்' என்றார். பின் தீதுதரும் இரண்டு என்றது, நம என்பன. இவை முறையே மறைப்பாற்றலையும், மலத்தையும் குறிக்கும். சிவத்தோடு உயிரைக்கொண்டு போய்ச் சேர்ப்பிப்பது திருவருளேயாதலின், அம்பிகையை 'நின் பதியோடும் எனை ஒனறாககும் திறன நினக்கு அனறி யார்க்கு உளது!' என்றார்] (43)

**நீ வியாப்பியமா?**

கோவணம் மறையாக் கொண்டனன்
பெருமான்
கொண்டனை நீயுமே கலையாத்
தூவண வவன்மா தேவன்மா தேவி
துதிக்குநீ யெனிற்றிரு நெடுமா
லேவண அவற்கு நீவியாப் பியமென்
றிசைப்பதெங் ஙனமருட் டாயே,
காவண மறுகு மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (44)

வேதத்தைச் சிவபெருமான் கோவணமாகக் கொண்டான்; நீ மேகலையாகக் கொண்டாய்; அவன மாதேவன்; நீயோ மாதேவி. இவ்வாற்றால் நீவிர் இருவருமே சமநிலையினர் ஆவீர்! இங்ஙனமாகவும், சிவபெருமானுக்குள்ளே அடங்கி, நீ வியாப்பியப் பொருளாக இருக்கின்றாய் என்று, சிலர் சொல்வது எங்ஙனம் பொருந்தும்? (44)

**தேவொடு மாறுளாய் கொல்லோ!**

பொறியரி தொடரு மருமலர்த் தாளோன்
பொலியனந் தொடர்சடா முடியோ
னறியுநின் கொழுநன் பொறியரி தொடரு
மலர்க்குழ லினைநடை யன்னஞ்
செறிதரத் தொடர்மென் பதத்தினை
யெனினீ
தேவொடு மாறுளாய் கொல்லோ
கறிபயி லளிசூழ் பொழிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (45)

நின் கொழுநன் ஆகிய சிவபெருமான், அரி (திருமால்) தொடருகின்ற மலர்போன்ற திருவடிகளையுடையவன்; அன்னம் (பிரமன்) தொடருகின்ற சடை முடியை யுடையவன்; ஆனால் நீயோ அரி (வண்டுகள்) தொடரும் தலைமுடியையும், நடையழகு கண்டு மகிழ்ந்து அன்னங்கள் தொடரும் மெல்லிய பாதங்களையும் கொண்டுள்ளாய்! ஈது என்? நீ நின் கணவருடன் ஏதேனும் மனமாறுபாடு கொண்டுள்ளனையோ? (45)

**அம்மையின் திறமை :**

திருந்துறு தந்தை யாகிய வரையைத்
திரிபுர மெரித்தநாட் குழைத்த,
பெருந்திற லுணர்ந்தம் மலையுளம் மகிழப்
பெருந்தகை நிறமுலைக் கோட்டாற்
பொருந்துறக் குழைத்தாய் போலுநின்
றிறமை
புகலுதற் கடங்குமோ தாயே
கருந்துழாய் மார்பன் புகழ்திரு வானைக்
காவகி லாண்ட நாயகியே. (46)

அம்மையே! திரிபுரம் எரித்த காலத்தில், சிவ பெருமான், மேருமலை ஆகிய நின் தந்தையை வில்லாக வளைத்தான். அவ்வீரப் பெருஞ்செயலை யுணர்ந்து, சிவபெருமானின் மார்பை நீ நின் முலை யாகிய மலையால் தழுவிக் குழையும்படி செய்து, வென்று, மேரு மலையாகிய தந்தையின் உள்ளம் மகிழும்படி செய்துவிட்டாய்! நின் திறமை, யாம் புகலுதற்கு அடங்குமோ ? (46)

**வன்னி :**

மறைமுதல் பொருவ வேந்தினை நீயும்
மலர்புரை தருகையில் வன்னி,
யுறைதரு மனையா னிறமுநின் னிறமு
மொத்தன வாயினு மவன
தறைதரு மெழுநா வதுநின தொருநா
வதுசெவி யவாமொழி யதுதான்
கறையற வெதுநீ புகறிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (47)

வேத முதல்வன் ஆகிய சிவபெருமானைப் போல, நீயும் உன்னுடைய மலர்போன்ற திருக் கையில் வன்னி ஏந்தினாய்; அவனது திறமையும், நின்னுடைய திறமையும், ஒரு தன்மையிலேயே உள்ளன. ஆயினும், அவன் ஏந்தியிருப்பது ஏழு நாக்குகளை யுடையது; எனினும் அவை பேசுந் தன்மையன அல்ல. நீ ஏந்தியிருப்பதோ, ஒரே யொரு நாக்கு மட்டுமே யுடையது; எனினும் செவிக் கினிய சொற்களைப் பேச வல்லது! இவ்விரண்டி னுள் எது சிறந்ததென்று நீ கூறியருள்க.

[வன்னி என்பது, முறையே நெருப்பை யும், கிளியையும் குறிக்கும். சிவபிரான் தன் கையில் நெருப்பை ஏந்தியுள்ளான். அம்பிகை கிளியை ஏந்தியுள்ளாள். நெருப்பு ஆகிய அக்கினித் தேவன் ஏழு நாக்குகளை யுடைவன் என்பது கவி மரபு.] (47)

**உணராத் தன்மை:**

குடகட லொடுங்கு மிரவிதண் மதியங்
குணகட லுதிக்குமென் றுரைக்கும்
படவர வேந்து முலகநின் னொருநகைப்
பங்கயத் தொடுங்குநின் கொழுநன்
றடமலர் வதனத் துதிக்குமென் றுணராத்
தன்மையென் மென்மைசான் மயிலே
கடவுளர் பலருஞ் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (48)

சூரியன் மேற்குக் கடலில் மறையும்; சந்திரன் கிழக்குக் கடலில் உதிக்கும் என்று, உலக மக்கள் கூறுவர். நின்னுடைய ஒரு கையிலுள்ள தாமரை யில் சூரியன் மறைவான்; நின்னுடைய கணவர் ஆகிய சிவபெருமானின் திருமுகத்திற் சந்திரன் உதிப்பான் என்று, உலக மக்கள் உணர்ந்து கொள்ளாத தன்மை என்னே? (48)

**நீயும் செய்க !**

பெருவழக் கெடுத்துப் பேரவை யேறிப்
பேசுவ குறையறப் பேசி,
யொருதிரு நாவ லூரனை யாண்டா
னோங்குவெண் ணாவலூ ரண்ணல்,
அருளொடு நீயு மத்தகு செயலொன்
றாற்றினன் றென்றியா னினைந்தேன்,
கருளற வொளியின் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (49)

வெண்நாவல் மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள நின் கணவர் ஆகிய சிவபெருமான், பெரிய வழக் குத் தொடுத்து, நீதி மன்றத்தில் ஏறி, நிரம்பவும் விவாதம் செய்து, திருநாவலூரில் தோன்றிய சுந் தரமூர்த்தி சுவாமிகளை ஆட்கொண்டார். நீயும் அருள் கூர்ந்து, அங்ஙனம் ஒரு செயலைச் செய்து என்னை ஆட்கொண்டால் நலமாக இருக்கும் என்று யான் நினைக்கின்றேன். (49)

**மாயோன் அல்லேன்:**

முதுபுக ழுடைநின் பதியிரு பாத
முழுமலர்க் கருச்சனை யாற்றின்
மதுமல ரொன்று குறையினு மதற்கு
மாறுகண் ணிடந்திடல் வேண்டு
மதுசெய மாயோ னல்லன்யா னின்பொன்
னடியருச் சனைசெய்வான் புகுந்தேன்
கதுமென வருள்செய் தருடிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (50)

மிகுந்த புகழை உடைய நின் கணவராகிய சிவபெருமானின் திருவடிகளுக்கு வழிபாடு புரி வதாயின், ஒரு மலர் குறைந்தாலும், அதற்கு ஈடாகக் கண்ணை இடந்து அப்புதல் வேண்டும். அங்ஙனம் செய்வதற்கு யான் திருமால் அல்லேன். ஆதலின், நின்னுடைய திருவடிகளையே அருச்சித்து வழிபடுவதற்காக யான் நின்னை அடைந்தேன். (50)

**ஈது என்னே !**

தருமமென்று உரைக்கு மளியமர் நின்கைத்
தாமரை மலரின தலர்ச்சி
பெருமதி மலர்ச்சி மாற்றுமென் றுரையார்
பெருமதி யலர்ச்சியே செழித்த
மருமலி கமல மலரின தலர்ச்சி
மாற்றுமென் றுரைப்ப ரீதென்னே
கருணையங் கடலே யருட்டிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (51)

அறம் என்று சொல்லப் பெறும் அளி(வண்டு) அமர்கின்ற நின்கையானது தாமரை மலர்போன்ற தாகும். நின் செங்கை ஆகிய தாமரைப் பூவின் மலர்ச்சி, சந்திரனின் மலர்ச்சியை மாற்றும் என்று

கூறாமல், சந்திரனே மணங்கமழும் தாமரையின் மலர்ச்சியை மாற்றி விடுவான் என்று உலக மக்கள் கூறுவர். இங்ஙனம் கூறுவது என்னே!

[சந்திரன் தோன்றினால் தாமரை குவியும். இது இயற்கை நிகழ்ச்சி. இதனை ஆசிரியர் தம் கற்பனையின் மாட்சிமையால் மாற்றிப் பாடி மகிழ்விக்கின்றார். அம்பிகையின் செங்கை தாமரை மலர் போன்றது என்றும், அதனது மலர்ச்சி அழகு கண்டு சந்திரன் ஒளிமழுங்குகின்றான் என்றும், ஆசிரியர் செய்துள்ள கற்பனைத்திறம் போற்றற்பாலது.] (51)

### ஆற்றுதல் தகாது:

நீவினோ தத்தா னின்பதி முகக்க
 ணிகழ்கைசேர்த் தெடுத்திடுங் கால
மோவிய மனையாய் கணமுமின் றுனக்கஃ
 தும்பரா தியபல வுயிர்க்கும்,
மேவிய கோடி யுகம்பல வாமவ்
 விநோதநீ யாற்றுத றகாது,
காவியங் கண்ணார் பயிறிரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (52)

ஓவியம் போலும் அழகிய திருவுருவை உடைய அகிலாண்ட நாயகியே! நீ விளையாட்டாக நின் கணவரின் திருமுகத்தில் உள்ள கண்களைக் கையால் அணைத்து மறைக்கும் காலம், நினக்கு ஒரு சிறு கணத்தின் கூறே ஆயினும், அது தேவர் முதலிய பல உயிர்களுக்கும் எத்தனையோ பல கோடி யுகங்கள் ஆகிவிடும். அதனால் நீ அவருடன் அங்ஙனம் விளையாடுதல் தகுதியன்று.

[சிவபிரானுக்கு ஞாயிறு திங்கள் தீ என்னும் முச்சுடர்களுமே கண்களாக விளங்குதலின் அம்பிகை அக்கண்களை ஒரு சிறு கண நேரம் மூடி விளையாடினாலும், அது தேவர் முதலிய பல உயிர்களையும் பல கோடி யுகங்கள் இருளிற் கிடந்து உழன்று வருந்தும்படி செய்யும். ஆதலின் 'அவ்வினோதம் நீ ஆற்றுதல் தகாது' என்றார்] (52)

### மதிக்குலம் அன்றோ ?

தென்னவன் புரிந்த பெருந்தவப் பேற்றாற்
 செழுந்தழ லகத்தொரு மகவே,
யென்னநீ யுதித்த வாஞ்சையுட் குறித்தே
 யிறைநுதற் கண்புதை யாது,
மன்னமற் றிருகண் புதைத்தனை நின்னை
 மதிக்குல மென்பதோர்ந் திலையோ,
கன்னவி றோளார் பயிறிரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (53)

சிவபெருமானின் கண்களை மூடி நீ விளையாடிய பொழுது, சூரியனாகிய வலக் கண்ணையும், சந்திரனாகிய இடக் கண்ணையுமே மூடினாய். நெருப்புக் கண்ணாக மூன்றாவதாக உள்ள நெற்றிக் கண்ணை மூடாமல் விடுத்தாய். அதற்குக் காரணம், முன்னம் நீ மலையத்துவச பாண்டியன் செய்த பெருந்தவத்தின் பயனாக வேள்வித் தழலில் தோன்றியருளிய வாஞ்சையினாலேயே போலும்! ஆயினும், பாண்டியர்கள் சந்திர குலத்தைச் சேர்ந்தவர்களாயிற்றே! அதனை நீ எண்ணிப் பார்த்ததில்லையோ? (53)

### பெருமை என்புகல்வேன்:

அரும்புமேர் நின்கைக் கணிபல அணிந்துள்
 ளவாவொடு தாங்குமா தர்களை,
விரும்புபு சுமக்கு மெல்லிதழ்க் கமல
 மெய்த்தவ முடையன வெனவே,
யிரும்புவி புகன்றா லனையமா தர்கட
 லிருந்தவப் பெருமையென் புகல்கேன்,
கரும்புநேர் மொழியார் பயிறிரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (54)

அழகு தோன்றுதற்கு நிலைக்களனான நின் திருக்கைகளுக்கு, அணிகலன்கள் பலவற்றை அணிவித்து, அக்கைகளை மிக்க விருப்பத்தோடு ஏந்தித் தாங்குகின்ற திருமகளையும் கலைமகளையும், விரும்பிச் சுமக்கின்ற செந்தாமரை வெண்டாமரை மலர்களையே, மிக்க பெருந்தவம் உடையன என்று உலகம் புகழும் என்றால், நின் கைகளை ஏந்தும் பேறு பெற்ற அவ்விருவரின், பெறலரும் பெருந்தவத்தை என்னென்று புகழ்வது?

[தமக்கு இனியராயினார் இருபுறத்தும் இருந்து கைகொடுப்ப, அவர்தம் கைகளின் மீது தமது கைகளை அமர்த்திக் கொண்டு, உலாப்புறப்படுதல், பெருநிலையிலுள்ளோர்க்கு இயல்பு. இதனைத் திருமடங்களின் தலைவர்கள் பாற் காணலாம். இம் முறையில் இருபுறத்தும் நின்று, திருமகளும் கலைமகளும் கைகொடுத்து, அம்மையின் இரு திருக்கைகளையும் தாங்கும் பெருமையும் உரிமையும் பெறுவர். ஆதலின்'அனைய மாதர்கள் இருந்தவப் பெருமை என் புகல்கேன்?' என்றார்] (54)

### ஊடலில் தாக்குதல்:

சிலம்பகத் துதித்த நின்னடி தற்சூழ்
 சிலம்பகத் துதித்தமா தரைவல்
வலம்பகப் பொலியு முலையினா யங்கை
 மலரகத் துதித்தமா தென்ன,
வுலம்பகப் பொருதோ ளரன்முடிக்
 கொளாமை
 யுணர்ந்தன்றோ வூடலிற் றாக்குங்
கலம்பக முலாமுற் புனைதிரு வானைக்
 காவகி லாண்டநா யகியே. (55)

சிலம்புகளை அணிந்த அம்பிகையின் திருவடிகள், ஊடற் காலத்தில் சிவபிரானின் திருமுடியை எற்றித் தாக்கும். அதற்குக் காரணம், தனது அழகிய கையினின்று தோன்றிய கங்கையாகிய பெண்ணைத் திருமுடியில் எடுத்து வைத்துக் கொண்டது போலவே, தனது சிலம்பின் மணிகளினின்று தோன்றிய பெண்களையும், சிவ பெருமான் செய்யாமற் போயினனே என்னும் சீற்றமே போலும்!

[தேவர்கள் சூரபதுமனால் படுகின்ற துயரங்களைக் கேட்ட சிவபெருமான், அவர்தம் துயர் தீர்ப்பதன் பொருட்டு முருகனைத் தோற்றுவிக்கத் திருவுளங் கொண்டு, தனது திருமுகங்களினின்று ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்தினார். அவற்றின் வெம்மை கண்டு, அம்மையும் அஞ்சி நடுங்கிச் சிறிது ஓடினாள். அப்போது அவள் கையினின்று கங்கை

யும், சிலம்பின் மணிகளினின்று மகளிர் ஒன்பதின்மரும் தோன்றினர். முருகனின் துணைவர்களாகிய வீரவாகு தேவர் முதலிய நவ வீரர்கள் அம்மகளிர் ஒன்பதின்மர்பால் தோன்றியருளியவரேயாவர் என்பது வரலாறு. அம்மையின் ஊடலுக்குத் தற்குறிப்பேற்றமாகக் காரணம் கற்பித்தவாறு.] (55)

### குருகுவரை கொன்றனை :

பெரியவர்க் கிடுக்கண் புரிவதை யுணர்ந்து
பெரும்புகழ்த் தந்தைதன் மரபென்,
றரியவர் சிந்தை யாலயம் புகுவா
யயர்ந்துமெண் ணாமல்வண் குறிஞ்சிக்
குரியவன் கரத்துப் புகூஉக்குரு குப்பே
ரொருவரை கொன்றனை யழகே?
கரியவன் பிரமன் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (56)

அம்பிகை, பெரியவர்களின் உள்ளங்களையே கோயிலாகக் கொண்டு உறைகின்றாள். அதற்குக் காரணம், அவ்வுள்ளங்களைத் தன் தந்தை ஆகிய மலையரையனின் மரபு என்று அவள் கருதுவதே யாகும். ஆயினும், அவள் கிரவுஞ்சம் என்னும் மலையின் மீது சிறிதும் இரக்கம் காட்டாமல், குறிஞ்சி நிலத்துக்குரிய முருகப் பெருமானின் திருக்கையில் வேலாகச் சென்று புகுந்து, அதனைஅழித்தாள். அதற்குக் காரணம், கிரவுஞ்சம் என்னும் அம்மலையானது, முனிவர்களாகிய பெரியவர்களுக்குப் பலவகை இடுக்கண்கள் புரிந்துவந்தமையேயாகும்.

[இறைவன் வீற்றிருக்கும் தன்மை, அளப்பரும் பெருமை, மெய்யொளி தழைக்கும் தூய்மை, ஓங்கியுயர்ந்திலங்கும் மாட்சிமை, ஆகிய பல ஒப்புமைகளால் பெரியவர்களின் உள்ளங்கள் திருக்கயிலாயம் போல விளங்கும் (பெரியபுராணம்—22). ஆதலின், அவற்றைத் தன் தந்தையாகிய மலையரையனின் மரபு என்று கொண்டு, அம்பிகை அவற்றில் எழுந்தருளி விளங்குவாள். இதுபற்றியே, 'தந்தை தன் மரபு என்று அரியவர்சிந்தை ஆலயம்புகுவாள்' என்றார். குருகுப்பேர் ஒரு வரை என்றது, கிரவுஞ்சம் என்னும் மலையை. முருகனுக்கு வேற்படையை அளித்தவள் அம்பிகையே யாதலாலும், 'சக்தி' என்பது அதற்கு ஒரு பெயர் ஆதலாலும், 'குருகுப்பேர் ஒருவரை கொன்றனை' என்றார். நல்லதிற் புகுந்தும் அல்லதை அழித்தும், நடுவுநிலைமை காத்தமையின் 'அழகே' என்றார்] (56)

### கிள்ளை ஏந்தினை :

நினையுணர் மகடாய் மரபென வொருமா
நெடுங்கை
யேந்தினன் பெம்மான், அம்மான்,
றனையுணர் மகன்றாய் மரபெனக்கிள்ளை
தன்னைநின் கையிலேந் தினையால்,
வினையுண ரார்சொன் னீயுநின் பதியும்
விரும்புறு மாடலென் னுரைக்கேன்,
கனையுண ரளிசூழ் பொழிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (57)

நினது மருமகள் ஆகிய வள்ளியம்மையினது தாயின் மரபைச் சேர்ந்தது என்று கருதிச் சிவ பெருமான், தன் திருக்கையில் மானை ஏந்தினான்; வள்ளியாகிய அழகிய மானைக் கண்டெடுத்தநம்பி என்னும் வேடர் குலத்தலைவனது தாயின் மரபைச் சேர்ந்தது என்று, நீ கிளியையேந்தினாய். நீயும் நின் கணவரும் விரும்பிப் புரியும் ஆடலை, யான் எங்ஙனம் புகழவல்லேன்.

[வள்ளியம்மை மான் வயிற்றிற் பிறந்தவள். ஆதலின் அவளது தாயின் மரபு என்று சிவபிரான் மானை ஏந்தினான்; வள்ளியம்மையைக் கண்டெடுத்தவேடர் குலத்தலைவனின் தாய், தத்தை (கிளி) என்னும் பெயரினள், ஆதலின் 'மகன் தாய் மரபு என நீ கிள்ளை ஏந்தினை' என்றார், இது தற்குறிப்பேற்றம்] (57)

### விலக்கிட விதி எவன்?

பொலிதரப் பசந்து நீர்மழை யெங்கும்
பொழியுமே புயலது போல,
மலிதரப் பசந்து நீயும்வண் கருணை
மழைபொழி குவைகொடு வினையான்
மெலிதர லுற்ற வெனையொழித் திடுவான்
விதியெவன் விமலமெய்ச் சுடரே,
கலிதரு துயர்சா ராத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (58)

மேகமானது அழகுறக் கறுத்து, நீர் ஆகிய மழையைப் பொழியும். அங்ஙனமே, நீயும் பசுமை நிறம் பெற்று இரக்கம் கொண்டு, கருணை ஆகிய மழையைப் பொழிவாய். மேகமானது எல்லா இடத்திலும் மழைபொழியும்; எந்த இடத்தினையும் விலக்குவதில்லை. அவ்வாறே, நீயும் எல்லோருக்கும் அருள் புரிதல் வேண்டும். என்னை மட்டும் அருள் செய்யாமல் நீ விலக்குவது ஏன்? அங்ஙனம் ஒரு விதி எந்நூல்களிலேனும் உள்ளதோ? (58)

### பக்தியில்லாத பாடல் :

நறையிலா மலரோ நயமிலா மொழியோ
நயனமில் லாதவாண் முகமோ,
பொறையிலாத் தவமோ மகவிலா
மனையோ
புனலிலா ஓடையோ நீதி,
முறையிலா வரசோ மதியிலா இரவோ
மூடனேன் பத்தியில் பாடல்,
கறையிலா வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (59)

அகிலாண்ட நாயகியே! மூடன் ஆகிய யான் பாடுகின்ற பக்தியில்லாத பாடல், மணம் இல்லாத மலர், இனிமை இல்லாத சொல், கண் இல்லாத முகம், பொறுமை இல்லாத தவம், குழந்தை இல்லாத வீடு, தண்ணீர் இல்லாத ஓடை, நீதி முறை இல்லாத அரசாட்சி, சந்திரன் இல்லாத இரவு முதலியவற்றைப் போன்று பயனற்றதேயாகும். (59)

### சிலந்தியின் பந்தர்:

குணமிலேன் மொழிபா நயமில தெனினுங்
குறித்ததை யேற்றருள் செய்ய,

விணர்மலி குழானிற் கேதகுஞ் சிலம்பி
யியற்றுநூற் பந்தரு முவந்து,
புணரருள் புரிந்தா னின்பதி யந்தப்
புராணம்நீ யோர்ந்தனை யன்றே,
கணமலி முனிவர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (60)

நற்குணம் இல்லாத யான் பாடுகின்ற பாடல்கள் இனிமையில்லாதவை என்றாலும், அவற்றை ஏற்றுக்கொண்டு அருள் புரிதல், நினக்கே தக்கதாகும். எளிய சிலந்தி இயற்றிய எச்சிலாகிய நூலின் பந்தரையும், நின் கணவர் ஆகிய சிவபெருமான் விரும்பி ஏற்றுக் கொண்டு அருள் புரிந்தருளினார்! அந்தப் புராண வரலாற்றை நீ அறிந்திருக்கின்றாய் அன்றோ?

[''சிலந்தியும் ஆனைக் காவில் திரு நிழற் பந்தர் செய்து, உலந்தவண் இறந்த போதே கோச்செங்கணானு மாகக், கலந்த நீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள் குலந்தனிற் பிறப்பித் திட்டார்'' எனவரும் அப்பர் தேவாரமும், ''தெருண்ட வாயிடை நூல் கொண்டு சித்திரப் பந்தர் சிக்கென இயற்றச் சுருண்ட செஞ்சடையாய், அது தன்னைச் சோழன்ஆக்கிய தொடர்ச்சி கண்டு அடியேன்,'' என வரும் சுந்தரர் தேவாரமும் பிறவும் இங்கு உணர்தற்குரியன.] (60)

## தோற்றதும் விசேடம்:

வரிவிழிக் குடைந்த மானையு நுதற்கு
மானுறாப் பிறையையு மல்குற்,
கிரிதரும் படவெவ் வரவையு மருங்குற்
கிணைதராத் துடியையுஞ் சுமந்தான்,
றுரிசறு வனப்பார் நின்னுறுப் பினுக்குத்
தோற்றதும் விசேடமென் றுணர்ந்தே,
கரியகண் டத்தோ னருட்டிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (61)

திருவானைக்கா அகிலாண்ட நாயகியே! நினது விழியின் அழகுக்குத் தோல்வியுற்ற மானும், நெற்றிக்கு ஒப்பாக மாட்டாத பிறைச் சந்திரனும், நின் அல்குலின் சிறப்பிற்கு அஞ்சிப் புறங்கொடுத்து ஓடும் கொடிய பாம்பும், நின்னுடைய நுண்ணிடைக்குச் சமம் ஆக இயலாத உடுக்கையும், குற்றமற்ற அழகு நிறைந்த நின் உறுப்புகளுக்குத் தோல்வியடைந்ததும், ஒரு வகையில் விசேடமேயாகும் என்னும் கருத்துப் பற்றியே, சிவ பெருமான் அவற்றை ஏற்றுச் சுமந்து கொண்டிருக்கின்றான் போலும்!

[அம்பிகையின்விழி மான் போலவும், நெற்றி பிறைச் சந்திரனைப் போலவும், அல்குல் அரவைப் போலவும், இடை துடியைப் போலவும் இருத்தலைச் சுவையமையக் குறிப்பிட்டபடி. 'கான முயல் எய்த அம்பினில், யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது' என்பது திருக்குறள். ஆதலின் 'நின் உறுப்பினுக்குத் தோற்றதும் விசேடம்' என்றார்.] (61)

## உறுப்புக் குறை:

பொறையரு ளடக்க மன்புப சாரம்
பொலியுமா சாரநல் வாய்மை,
யறைதரு மின்ன குறையுளே னெனினு
மடிமையே நினக்கியா னுறுப்புக்
குறையுடை யாரும் மக்களென் றெடுத்துக்
கூறுவ ருலகர்நீ யுணர்வாய்,
கறையற விளங்கு மருட்டிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (62)

பொறுமை, இரக்கம், பணிவு, அன்பு, உபசாரம், ஒழுக்கம், வாய்மை முதலிய பண்புகள் ஒன்றும் இல்லாத குறைகளையுடையவன் யான்! என்றாலும், யான் நினக்கு அடிமையே யாவன். 'அடிமையல்லன்' என்று, நீ என்னைத் தள்ளுதல் கூடாது. உறுப்புக் குறை யுடையவர்களையும் கூட, உலகத்தோர் மக்கட் பிறவியினர் என்றே சிறப்பித்துக் குறிப்பிடுவர். (62)

உரைசெய்வெண் ணாவ னிழலுறைபெருமா
னோங்கருண் முறைசெலுத் தியகோன்,
விரைசெய்பூங் கொன்றை யவனென நீயும்
விருப்பொடு செலுத்திடல் வேண்டும்,
புரைசெயென் பாலே மற்றது செலுத்திற்
பொருப்பின்மே லிடுசுடர் போலாங்,
கரைசெயா வளங்கண் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (63)

அகிலாண்ட நாயகியே நின் கணவராகிய சிவபெருமான், தான் விரும்பிச் சூடுவது கொன்றை மலரேயாயினும், பெண்ணாவல் மரத்தினையும் வெறுக்காமல் விரும்பி, அதன்கீழ் உறைந்து, யாவர்கும் முறைசெய்து அருள் புரிகின்றான். அதுபோல நீயும் நின் அடியவர்களுக்கு மட்டுமேயன்றி, கொடிய வனாகிய எனக்கும் அருள்புரிந்தால், நின்னுடைய திருவருளின்திறம், குன்றின்மேல் இட்ட விளக்குப் போலச் சிறந்து விளங்கி, அனைவரும் புகழ்ந்து போற்றத் தக்கதாகத் திகழும். (63)

## ஆரம் பூண்டவன் :

புண்ணிய வெள்ளை நாவலோ னாரம்
பூண்டவ னெனும் பெயர் புனைந்தான்
றண்ணிய குணத்து நீயுமென் பாட
றழுவுபு பூணுவை யாயி,
னண்ணிய பாடல் பூண்டவ ளெனுமோ
ரரும்பெயர் நினக்குமுண் டாமே,
கண்ணிய வரங்க டருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (64)

அகிலாண்ட நாயகியே! வெள்ளை நாவல் மரத்தின் கீழ் வீற்றிருப்பவர் ஆகிய சிவபெருமான் (ஜம்புகேசுவரர்), 'ஆரம் பூண்டவன்' என்னும் ஒரு பெயரை முன்பு பெற்றிருக்கின்றார். நீயும் என்னுடைய பாடலை ஏற்று அணிந்து கொள்வாயாயின், 'பாடல் பூண்டவள்' என்னும் ஓர் அழகிய பெயர் நினக்கும் உண்டாகும்.

[''ஆரம் நீரோடு ஏந்தினான் ஆனைக் காவு சேர்மினே'' எனச் சம்பந்தரும், ''ஆரம் கொண்ட எம் ஆனைக்காவுடை ஆதியை நாளும் ஈரம் உள்ளவர் எம்மை

யும் ஆளுடையாரே'' எனச் சுந்தரரும், திருவானைக்காப் பெருமான்,ஆரம் பூண்டவன் எனப்பெயர் பெற்ற செய்தியைக் குறித்தல் காணலாம்.] (64)

**திருவடி நிழல்:**

தழைசெய்வெண் ணாவ னறுநிழ லுறைவான்
றனிமுத லவனொரு பாகத்,
துழைசெயொள் விழியா யுறைகுவை நீமற்
றுன்னடி நிழலிலெஞ் ஞான்றும்,
விழைசெய்யா னுறையப் புரிந்திடி னதனான்
மிக்கபுண் ணியம்நினக் குண்டே,
கழைசெய்பூங் கழனி பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (65)

சிவபெருமான் வெள்ளை நாவல் மரத்தின் கீழ் உறைகின்றார். அவருடைய ஒரு பாகத்தில் நீ உறைகின்றாய். உன்னுடைய திருவடி நிழலில் எஞ்ஞான்றும் யான் உறையும்படி நீ புரிந்தருளினால், நினக்கு மிக்க புண்ணியம் உண்டு. (65)

**நீ மெல்லியல்;**

பிரம்படி பட்டுங் கல்லடி யேற்றும்
பிறைபொரு வில்லடி கொண்டும்,
நிரம்புற வருள்வா னோங்குவெண் ணாவ
னிழலுறை பவனடி யார்பா
லுரம்பயி லவன்போல் நீயவ்வா றேற்றின்
புதவுந லல்லண்மெல் லியனீ,
கரம்பறு கழனி மலிதிரு வானைக்
காவகி லாண்ட நாயகியே. (66)

திருவானைக்காவில் வெண் நாவல் மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள சிவபெருமான், அரிமர்த்தன பாண்டியன்பால் பிரம்பு அடி பெற்றும், சாக்கிய நாயனுர்பால் கல்லடி ஏற்றும், அர்ச்சுனன்பால் வில்லடி கொண்டும், அவர்களுக்கு நிரம்பவும் அருள் புரிந்தான். வலிமை மிக்க அவனைப் போல, நீ அவற்றையெல்லாம் ஏற்று இன்னருள் புரிபவள் அல்லள். நீ மெல்லிய இயல்புடையவள்! (66)

**விட விதி என்?**

பற்பல ரறியப் பித்தனென் றெள்ளிப்
பனவபோ வென்றுளார் தமையும்,
பொற்பலர் பெருமான் விடாமென வாண்டு
புரந்தன னங்ஙன மின்றி,
வெற்பலர் மருந்தே துதித்துவா வென்னும்
வினையினேன் றனைவிட விதியென்,
கற்பலர் நந்த வனத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (67)

பற்பலரும் அறியும்படி 'பித்தன்' என்று கூறி இகழ்ந்து, 'வேதியக் கிழவனே, யான் உனக்கு அடிமையல்லன். போ' என்று வெகுண்டு பழித்துக் கூறியவர்களையும், சிவ பெருமான் 'விட மாட்டேம்' என்று வலிந்து ஈர்த்து ஆட்கொண்டு காத்தருளினார். அவ்வாறு இல்லாமல், யானோ நின்னைப் பெரிதும் துதித்து, வா என்கின்றேன். நீ என்னைக் காப்பாற்றாமல், கைவிடுவதற்கு விதி எங்கே யுள்ளது? (67)

**அம்மையின் அருட்டிறம்:**

தேவியோ டினிது வந்தருள் புரிந்தான்
சிவனடி யார்க்கென்ப தன்றி,
யாவிநேர் கொழுந னோடுவந் தாண்டா
ளம்மையென் பாரிலை யன்னே,
மேவியச் சீர்த்தி நினக்குறா விதமென்
விளம்பிட வேண்டுநா யேற்குக்,
காவியார் தடஞ்சூழ் தருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (68)

'தேவியோடு வந்து சிவபெருமான் அடியார்களுக்கு அருள் புரிந்தான்' என்று கூறுகின்றனரே யன்றி, 'உயிர் போன்ற கணவரோடு வந்து அம்மை அடியார்களை ஆண்டு கொண்டாள்' என்று கூறுகின்றவர்கள் இலர். இதற்குரிய காரணம் இன்னதென நீ எனக்கு விளம்பியருளல் வேண்டும்.

[அம்மை, தானே அருள்செய வல்லவள்; சிவபெருமானோ அம்பிகை உடன் வர அவளது துணை கொண்டே அருள் செய்வான் என்பது கருத்து.] (68)

**அடியவர் குறிப்பு :**

அடியவர் குறிப்போர்ந் தாண்பனை காய்க்க
வாற்றெதிர் செல்லவே டென்பின்
பொடிமட வரலா கக்கராம் விழுங்கும்
பொருடரச் செய்தனன் பரமன்,
கொடியனேன் குறிப்போர்ந் துன்னடிக்
கன்பு
கொளப்புரி வதுமுனக் கரிதோ,
கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (69)

அகிலாண்ட நாயகியே! நின் கணவராகிய சிவபெருமான் தன் அடியவர்களின் உள்ளக் குறிப்பை உணர்ந்து, ஆண்பனை பெண்பனை போலக் காய்க்கவம் வைகையாற்று வெள்ளத்தை ஏடு எதிர்த்து செல்லவும் எலும்பு பெண்ணாகவும் முதலை தான் விழுங்கிய சிறுவனை மீண்டும் உயிருடன் கொணர்ந்து அளிக்கவும், செய்தருளினான். அதுபோல, நீயும் கொடியவனாகிய என்னுடைய உள்ளத்தின் விருப்பத்தினை உணர்ந்து, என்னை உன் திருவடிக்கு அன்புகொள்ளும்படி செய்வது கூடாதோ! அஃது உனக்கு எளிய செயலேயன்றி அரிய செயல் ஆகுமோ! (69)

**பவளவாய் அமிர்தப் பயன் :**

அயனரி குலிச னமரருண் ணடுங்க
வடர்ந்தெழுங் கொடுவிடம் வாங்கி,
நயனமூன் றுடையா னுண்டனன் முன்னம்,
நங்கைநின் பவளவா யமிர்தப்,
பயனுணர்ந் தன்றோ வலனெனி னனைய
பரமனெவ் வாறுணத் துணிவான்,
கயன்மலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (70)

பிரமன் திருமால் இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் நடுங்கும்படி பொங்கி எழுந்தகொடிய

நஞ்சினைச் சிவபெருமான் முன்பு அஞ்சாது உண்டருளினான். அதற்குக் காரணம், நின்னுடைய பவளம் போலும் திருவாயில் ஊறும் அமிர்தம் விளைக்கவல்ல பயனை, அவன் உணர்ந்திருந்ததே யாகும். இல்லையேல் அக் கொடிய நஞ்சினை யுண்பதற்கு இறைவன் எங்ஙனம் துணிவு கொண்டிருப்பான்? (70)

**அம்மையின் நெற்றிக்கண் :**

ஒளிமிகு சம்பு லிங்கநா யகர்போல்
உடையையா னுதல்விழி நீயு,
மளிமிகு மனையார் மாரனை யெரித்தார்
யாரைநீ யெரித்தனை யம்மா,
விளிமிகு நாயேன் வினையினை யெரித்தா
லிரும்புக ழுவரினு நினக்காங்
களிமிகு மமரர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (71)

ஒளி மிகுந்த சம்புலிங்கேசுவரர் போல நீயும் நெற்றிக்கண் பெற்றிருக்கின்றாய். அவர் தமது நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்தார். அம்மா! நீ நின் நெற்றிக் கண்ணால் யாரை எரித்தாய்? பாவியாகிய என்னுடைய பாவங்களை யெல்லாம் எரிப்பாய் எனின், அவரைவிட நினக்குப் பெரிய புகழ் ஏற்படும். (71)

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

**மேரு விற் பிடித்தாய் :**

நெடுவலி கொடுமா மேருவிற் பிடித்தாய்
நீயஃ துணர்குவன் யானு,
மடுதிறற் சூலி பிடித்தன னென்பா
ரவனியுட் சிலர்கருத் தென்னோ?
விடுகிடை நீயு மவனும்வே றல்லீ
ரென்பதை யுணர்ந்தனர் கொல்லோ,
கடுவிழி மடவார் பயிறிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (72)

அகிலாண்ட நாயகியே! திரிபுர சங்கார காலத்தில் மேருமலையாகிய வில்லைப் பிடித்தவள் நீயே என்று யான் உணர்வேன். ஆனால், உலகிற் சிலர் சிவபிரான் பிடித்தான் என்று கூறுகின்றார்கள். அவர்களின் கருத்து யாதோ? நீயும் அவனும் ஆகிய இருவரும் வேறு அல்லீர் என்பதையுணர்ந்தே, ''ஒற்றுமை நயம்'' பற்றி அவர்கள் அங்ஙனம் கூறுகின்றனர் போலும்!

[சிவபிரான் மேரு மலையை வில்லாகக் கொண்டபோது, அதனைப் பிடித்த இடப் பக்கத்துத் திருக்கை, அம்மையின் பாகத்தைச் சேர்ந்ததாகலின், ''நெடுவலி கொடு மாமேருவிற் பிடித்தாய் நீ! அஃது உணர்குவன் யானும்'' என்றார். இக்கருத்து, திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய ''கற்றார் பயில் கடல் நாகைக் காரோணத்து எம் கண்ணுதலே! வில் தாங்கிய கரம்,வேல் நெடுங்கண்ணிவியன் கரமே; நற்றாள் நெடுஞ்சிலை நாண் வலித்த கரம் நின்கரமே; செற்றார்புரம் செற்ற சேவகம் என்னைகொல் செப்புமினே?'' என்னும் தேவாரத் திருப்பாடலைத் தழுவியது] (72)

**தேர்ந்து ஒருவழி நின்றேன் :**

அம்பலத் தாட வெடுத்ததா டுணையென்
றறைவனோர் கான்மலை யரையன்,
வம்பலர் முன்றிற் றிருமணத் தம்மி,
வைத்ததா டுணையென்ப னோர்காற்,
செம்பொரு டுணியா னென்றெனை யிகழே
றேர்ந்தொரு வழிநின்றே னன்னாய்,
கம்பலர்த் தடஞ்சூழ் தருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (73)

அகிலாண்ட நாயகியே! யான் ஒரு சமயம், தில்லையம்பலத்தில் நடனம் ஆட எடுத்த திருவடியே துணை என்று சொல்லுவேன்; மற்றொரு சமயம், மலையரசனின் முற்றத்தில் நிகழ்ந்த திருமணத்தின் போது, அம்மியின் மீது வைக்கப்பெற்ற திருவடியே துணை என்று சொல்லுவேன். நூல்களின் உண்மைப் பொருளைத் தெளியாதவன் என்று நீ இகழ வேண்டா! எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தே, யான் ஒரு வழியைக் கைக்கொண்டு கடைப்பிடித்து நிற்கின்றேன்.

[அம்பலத்தில் ஆட எடுத்த திருவடியும், திருமணத்தின போது அம்மியில் வைக்கப் பெற்ற திருவடியும், அம்மையின் திருவடியே என்பது கருத்து. நூல்கள் பலவகை வழிகளைக் கூறினும், அம்மையின் திருவடிகளைப் புகலிடமாக அடைதலே அருட்பேற்றுக்குச் சிறந்த நெறியாதலின், 'மெய்ப்பொருள் துணியான் என்று எனை இகழேல்: தேர்ந்து ஒரு வழி நின்றேன்' என்றார்.] (73)

**முயலகனை மிதித்த கால்:**

எதிரறு பொதுவிற் குறட்பிணர் வெரிந்மே
லியைத்திட றகாதென வுணர்ந்து,
முதிருணர்வுடைய பரன்மறைச் சிலம்பார்
மொய்வலத் தாணிறீஇ யிடத்தா,
ளதிர்வர வெடுத்தான் வழுதியவ் வருமை
யறிதரான் பிழைத்தனன் பொறுத்தாய்,
கதிரருட் கழகே யதுதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (74)

ஒப்பற்ற தில்லையம்பலம் ஆகிய சபையில், முயலகன் என்னும் குறட் பூதத்தின் முதுகின் மேல் பதியும்படி செய்தல் தகாது எனக் கருதியே, பேரறிவுடைய சிவபெருமான், வேதம் ஆகிய சிலம்பை அணிந்த கால்களுள், வலக்காலை ஊன்றி, இடக்காலை அதிர எடுத்து வீசி ஆடினான். பாண்டிய மன்னன் இதனை அருமையறிய மாட்டாமல், தவறு செய்தான் எனினும், அப்பிழையை நீ பொறுத்துக் கொண்டாய். அது நின் அருட்டன்மைக்கு, அழகே யாகும்.

[இப்பாடல் ''கால் மாறி ஆடிய திருவிளையாடல்'' பற்றியது. கணவனையன்றிப் பிறரைத் தீண்டவும் கற்புடை மகளிர் கூசுவர். ஆதலின், பெருமான் அம்மையின் பாகத்துக்குரிய இடப்பக்கத்துக் காலை, முயலகன் மீது இயைத்திடல் தகாது எனக் கருதி, அவன் மீது தன் வலக்காலை ஊன்றி ஆடினார் என்பது, கவிஞரின் தற்குறிப்பேற்றம். அம்பிகையின் அருளியல்பைப் புலப்படுத்தியதாகவும் கொள்ளலாம்.] (74)

## நின்பதம் மென்பதமோ?

பரவுவெண் ணாவ னீழலோ னிடத்தாள்
பற்றிய வென்முனங் குறுக,
வுரவுசெய் தண்ட தரனுள நடுங்கு
முதைத்ததத் தாளென வுன்னி,
விரவுமப் பதநின் பதமன்றோ வதனை
மென்பத மென்பதென் விளம்பாய்,
கரவுறாப் புலவர் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (75)

வெண் நாவல் மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள சம்புகேசுவரர் ஆகிய சிவபெருமானின்இடப் பக்கத்துத் திருவடியைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டுள்ள என் முன்னே வருவதற்கு, வலிமை மிக்க தண்டாயுதத்தைத் தாங்கியுள்ளவன் ஆகிய கூற்றுவன், தன்னை முன்னொரு காலத்தில் மார்க்கண்டேயனின் பொருட்டு உதைத்தது அந்தத் திருவடியே என்று உணர்ந்து, உள்ளம் நடுங்கி அஞ்சுவான். சிவபெருமானின் அந்த இடப்பக்கத்துத் திருவடி உனக்குரிய திருவடியே அன்றோ! அதனை 'வன்பதம்' என்னாமல், 'மென்பதம்' என்று கூறுவது ஏன்?

[கூற்றை யுதைத்த இறைவனின் திருவடி, அம்மைக்கு உரியது எனவே, அம்மையை வழிபடுதலால் இறப்பச்சம் நீங்கப்பெறலாம் என்பதும், அம்மையின் பாதங்கள் மெல்லிய இயல்புடையவை யாயினும், தன் அடியார்களின் இடர் களைந்து காத்தலில் மிக்வும் வலிமை வாய்ந்தவை என்பதும் கருத்து.]
(75)

## திருநீறிட்டான் திருமதில்:

ஒரு கருங் கேழ லுருவெடுத் திணையி
லுன்பதி யடிமலர் காண்பான்,
பெருநில மகழ்ந்த மாயவ னினது
பிறங்குபே ராலயஞ் சூழ்ந்த,
பொருவினீ றிட்டான் மதிலடி கண்டாற்
போதுமே புண்ணியக் கொழுந்தே,
கருள்கடிந் தொளியின் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (76)

ஒரு கரிய பன்றியின் உருவை எடுத்துக் கொண்டு உன் கணவனின் திருவடி மலரைக் காண விரும்பி, திருமால் இப் பெரிய நிலத்தை அகழ்ந்து கொண்டு சென்றனரே, எற்றுக்கு? திருவானைக் காக்கோயிலிலுள்ள திருநீறிட்டான் திருமதில் அடியினைக் கண்டாற் போதுமே! அது செய்திருத்தல் கூடாதா? அவர்.

[இறைவன் ஒரு சித்தராகப் போந்து, திருநீற்றையே கூலியாகக் கொடுத்துக் கட்டுவித்த மதில், ஆதலின் திருவானைக் காக் கோயிலின் மதில், ''திருநீறிட்டான் மதில்'' என்னும் சிறப்புப் பெயர் பெற்றது.]
(76)

## மெல்லியலா, வல்லியலா ?

உயன்மறந் தடருந் திரிபுரஞ் சிதைப்பான்
ஒருவரை யெளிதினிற் குழைத்த
பயன்மதி முடித்த பாடல்சால் பெருமான்
பாழியந் தடநெடுந் தோள்கள்,
வியன்முலைக் கோட்டாற் குழைத்தரு
ணினக்கு
மெல்லிய லெனும்பெயர் தகுமோ,
கய மலர்த் தடங்கண்மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (77)

திரிபுரம் எரிப்பதற்காக ஒப்பற்ற பெரிய மேருமலையையே எளிதாகக் குழைத்து வளைத்த வலிமை மிக்கவர் சிவபெருமான்! அவருடைய நீண்ட பெரிய வலிமை மிக்க தோள்களையே, நின்னுடைய சிறந்த முலைத் தடத்தாற் குழைத்து நெகிழ்வித்தருளிய நினக்கு ''மெல்லியல்'' என்னும் பெயர் எவ்வாறு பொருந்தும்? வல்லவனையும் குழைத்த ''வல்லியல்'' அல்லையோ நீ! (77)

## எச்சில் உண்டவன் :

மையவாண் மகனெள் ளெச்சிலுண் டாற்கு
மகிழ்ந்தருள் செய்துநின் கொழுநன்
மெய்யவாஞ் சீர்த்தி படைத்தன னெனக்கு
விரும்பிநீ யருளுவை யாயி,
னையபெண் மகளேள ளெச்சிலுண் டானுக்
கருளினா ளெனும்புகழ் நினக்காங்,
கையர்வந் தணுகற் கருந்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (78)

கருநிறம் படைத்த திருடன் ஆகிய ஓர் ஆண் மகனின் வாயினின்று எள்ளெச்சிலை வாங்கியுண்ட வரகுண பாண்டியனுக்கு அருள் புரிந்து, நின் கொழுநன் ஆகிய சிவபெருமான், சிறந்த புகழ் அடைந்தான்; நீ எனக்கு அருள் புரிந்தால், அழகிய பெண்களின் இழிதகைய எச்சிலையுண்டவனுக்கு அருள்புரிந்தாள் என்று, நீ நின் கணவனிலும் மேலான புகழை அடையப் பெறலாம். (78)

## தவளைகட்குப் பரிசு :

புனல்பயி றவளை முழங்கநின் கொழுநன்
புகழ்ப்பெய ருரைத்ததா வுணர்ந்து,
மினல்பயில் கனகம் வீசினா னொருவன்
மெய்ம்மையே நின்பெய ருரைக்கு,
முனல்பயில் குழாம்பு கேன்றொழேன் புகழே
னுவந்திடே னெங்ஙன முய்வேன்,
கனல்பயின் மணிமா மதிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (79)

நீரில் வாழ்கின்ற தவளைகள் கத்துதலைக் கேட்டு, அவைகள் நின் கணவரின் திருப் பெயரைக் கூறி வழுத்துவதாகக் கருதிக் கொண்டு மகிழ்ந்து உள்ளம் உருகி, வரகுண பாண்டியன் என்னும் அரசன் ஒருவன், அவற்றிற்குப் பரிசாகப் பொற் காசுகளை வாரி வீசினான். ஆனால் யானோ நின் திருப் பெயர்களைக் கூறி வழுத்தி வழிபடுகின்ற அடியவர் திருக் கூட்டத்திற்குள் புகவும், அவர்களைத் தொழவும், புகழவும் மாட்டேன். நான் எவ்வாறு உய்தியடையப் போகின்றேன். (79)

மாவியல் பெருமான் மான்பிறை சுமந்தேன்
வாமபா கத்தினி தமரும்,
நீவிளை யாடற் கென்பனம் பற்க;
நிகழஃ திடைமரு தூரின்,
மேவியோ ரரசில் விழுங்கிய தாதி
வெறுப்பன மறைப்பதற் கென்று
காவியங் கண்ணா யுணர்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (80)

திருவானைக்கா அகிலாண்ட நாயகியே! கருங்குவளை மலர் போன்ற கண்களையுடைய அன்னையே சிறந்த பெரிய இயல்புகளையுடைய திருவானைக் காப் பெருமான், ''எனது இடப்பாகத்தில் இனிதாக வீற்றிருக்கின்ற நீ விளையாடுவதற்காக, யான் மானையும் பிறைச் சந்திரனையும் சுமந்திருக்கின்றேன்'' என்று நின்பால் நின்னை ஏமாற்றச் சொல்லுவான்; அதனை நீ நம்புதல் வேண்டா; திருவிடைமருதூரில் வரகுணபாண்டியன் ஆகிய அரசனின் மனைவியை விழுங்கியது முதலிய, நீ வெறுக்கத் தக்க தனது செயல்களை மறைப்பதற்காகவே, அங்ஙனம் அவன் மானையும் பிறையையும் சுமந்து உன்னை மகிழ்விக்க முயல்கின்றான் என்று நீ உணர்ந்து கொள்க! (80)

'சிறந்த பொருள்களெல்லாம் இறைவனுக்கே உரியன' என்னும் கருத்தில் வரகுணபாண்டியன், அழகிற் சிறந்து விளங்கிய தன் மனைவியைத் திருவிடை மருதூர் மகாலிங்கப் பெருமான்பால் கைபிடித்து அழைத்துச் சென்று ஒப்படைத்தான் என்பது வரலாறு.

**பேதையும் பித்தனும்:**

அண்டகோ டிகளென் றுரைத்திடுஞ் சிற்றி
லமைத்தமைத் தாடிடு வாய்நீ,
துண்டவாண் மதியஞ் சூடிய சடிலச்
சுந்தர னழித்தழித் தாடும்,
பிண்டநூ லென்றும் பேதைநீ யனையான்
பித்தனென் றுரைப்பது மெய்யே,
கண்டவாம் மொழியார் பயிறிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (81)

அகிலாண்ட நாயகியே! அண்ட கோடிகள் என்று சொல்லப்படும் சிற்றில் இழைத்து நீ விளையாடுவாய்; பிறைச் சந்திரனைச் சூடிய சிவபெருமானோ, அவற்றை அழித்து விளையாடுவான். இங்ஙனம் இடைவிடாது மாறி, மாறி நீவிர் இருவரும் விளையாடுதல் பற்றியே, நின்னைப் பேதை என்றும், நின் கணவனைப் பித்தன் என்றும் வேதங்கள் கூறுகின்றன போலும்! (81)

**அறியாமை:**

மகளென நினைந்து தாயென விளித்த
மலையிறை மனையறி யாமை,
புகரறு பிரமன் முதற்பல வுயிர்க்கும்
பொருந்துதா யாமுனைக் கணேசன்,
நகநகு முருகக் கடவுடா யென்று
நவிலறி யாமையை யேய்க்கும்,
ககனமே லோங்கு மதிற்றிரு வானைக்
காவகி லாண்ட நாயகியே. (82)

மலையரையன்பால் நீ தோன்றியருளியபோது, அவனது மனைவி நின்னை மகள் என நினைத்துத், தாய் (அம்மா) என அழைத்தாள். அவளது செயல் பெரிதும் அறியாமையுடையதாகும். அஃது எது போலும் என்னில், பிரமன் முதலிய எல்லா உயிர்களுக்குமே தாயாகிய நின்னை, விநாயகர், முருகர் ஆகிய இருவர்க்கு மட்டுமே தாய் என்று, உலக மக்கள் கூறுகின்ற அறியாமைச் செயலைப்போலும். (82)

**அறம் முப்பத்து மூன்று ஆம்:**

இலங்கற முப்பத் திரண்டென வகுத்தாங்
கிகலற வவையெலாம் வளர்த்து,
மலங்குயிர் பலவும் புரக்குநீ கொடியோன்
மாட்டருள் புரியினஃ தவற்றுட்,
துலங்குமொன் றொடுசே ராதுகொ
றனிப்பிற்
சொற்றிமுப் பத்துமூன் றென்றே
கலங்கலில் வளமை மலிதிருவானைக்
காவகி லாண்டநா யகியே. (83)

விளங்குகின்ற அறங்கள், முப்பத்திரண்டு வகைப்படும் என வகுத்து, அவற்றை முறையே குறைவறச் செய்து, உயிர்கள் எல்லாவற்றையும் காத்து வருகின்ற நீ, கொடியவனாகிய எனக்கும் அருள் புரிந்து காத்தல் ஆகாதோ? காத்தால், அது முப்பத்திரண்டு அறங்களுள் ஒன்றாக அமைவதோடு, அறங்கள் முப்பத்து மூன்று என்னும் பெருமையையும் அடையும் அன்றோ? (83)

**கேட்டோ முகில் மழைவழங்கும்:**

இளைத்தடைந் தேனை ஆள்தியென்
றுனையா
னிரந்திரந் தேத்தநீ யிரங்கி,
வளைத்தபே ரருளா லாளுவ தனிலு
மன்றநீ யேயருள் புரிந்தான்
முளைத்தசீர் பரவ விடமிலை கேட்டோ
முகின்மழை வழங்கிடும் தாயே,
களைத்தடஞ் சிகரி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (84)

அம்மையே! யான் உன்னை வருந்தி வந்தடைந்து பலகால் இரந்து இரந்து துதித்த பின்தான், நீ என்னை ஆட்கொண்டு காத்தல் வேண்டுமோ? நீயே முன்வந்து நின் அருளால் என்னைக் காத்தல் ஆகாதோ? கேட்பதனாலா, மேகங்கள் மழை பொழிகின்றன? கேளாமலே மேகங்கள்மழை பொழிவது போல, யான் இரந்து துதியாமலே என்னை நீ ஆட்கொண்டு காத்தால், அது நினக்கு அளப்பரும் புகழை விளைவிக்கும் அன்றோ? (84)

**நொந்தவர் வைவர்:**

பிழைபல வுடையே னாயினு மவற்றைப்
பேதைநீ யென்பதற் கிணங்கக்
குழைமனத் தகற்றி யாளவே வேண்டுங்
கூர்ந்தினி தாண்டிடா யென்னின்,
மழைமலர்க் கூந்தற் கங்கையைப் புகழ்வேன்
வைவரே நொந்தவர் தாயே,
கழைமலி கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (85)

அம்மையே, யான் குற்றங்கள் பல உடையவன். என்றாலும், பேதை என்னும் நின் பெயருக்கு ஏற்ப, நீ அவற்றை மனத்திற் கொள்ளாது ஆட்கொண்டு காத்தல் வேண்டும். ஆட்கொள்ளாமற் போனால், ஒருவரால் ஏதேனும் வருத்தமுற்றோர் அவரை வைது இகழ்வது உலக இயல்பு. ஆதலின், நின்னை இகழும் முறையில், யான் நினக்கு மாற்றாள் ஆகிய கங்கையைப் புகழத் தொடங்கி விடுவேன். (85)

### உணரவல்லார் யார்?

சடைமிசை மாதை நோக்கியா ரெனினீ
சங்கர னீரென்பான் முகமு
னிடைதெரி தரலென் னென்னினோக்
குறுநின்
னெழின்முக மதனிழ லென்ப,
னுடையநா யகிநீ மறுத்திடிற் பிறரா
லுணரென்பா னுணரவல் லவர்யார்,
கடையுற லொழிந்த வளத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (86)

அம்மையே! நின் கணவர் தம் சடை முடியின் மீது, நீ அறியாதபடி ஒரு பெண்ணை மறைத்து வைத்திருக்கின்றார். இது யார்? என்று அவரை நீ ஐயுற்று வினவினால், அவர் இது வெறும் நீர் என்று கூறி மறைப்பார். அது கேட்டு நீ வறிது இருந்து விடாதே. இடையிடையே முகம் தெரிகின்றதே, இது ஏன்? என்று கேள். அதற்கு அவர், நின் அழகிய திருமுகத்தின் நிழலே அங்ஙனம் உனக்குத் தெரிகின்றது என்பார். இல்லை என்று நீ மறுத்தால், அதற்கு அவர், நீ பார்த்தால் அங்ஙனம் தான் உனக்குத் தெரியும். வேறு யாரையாவது பார்க்கச் சொல்லிக் கேட்டுத் தெரிந்து கொள் என்பார். அங்ஙனம் பார்த்துணர்ந்து சொல்ல வல்லவர்கள் யாவருளர்? (86)

### அனைவரையும் புகழ்வேன்:

எனக்ருள் செயினின் கொழுநனைப் புகழ்வே
னிமயநின் றந்தையைப் புகழ்வேன்,
மனக்கினி தாநின் மைந்தரைப் புகழ்வேன்
மலரினின் றோழியர்ப் புகழ்வே,
னினக்கினி யவரா மடியரைப் புகழ்வே
னின்னையும் புகழுவேன் றாயே,
கனக்கடி மதில்சூழ் தருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (87)

அம்மையே! நீ எனக்கு அருள்புரிந்தால், நின்னை மட்டுமேயன்றி, உனக்கு இனியர் ஆகிய கணவர், தந்தை மைந்தர் தோழியர் அடியவர் ஆகிய எல்லோரையுமே யான் புகழ்வேன். (87)

### அன்பின் ஐந்திணையை விளக்கவோ?

பூவண நகரிற் பொன்னனை யாளிற்
புகுந்தனன் முன்புகா மாரி,
தூவண வன்பி னைந்திணை யெனும்நூல்
சொற்றதை விளக்கின னென்னின்,
மாவணத் தளிர்நேர் மேனியா யுலக
மாதுகொ னீவிடை யிதற்கென்,
காவண நிறைவீ தித்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (88)

மன்மதனை வென்றவர் ஆகிய சிவபெருமான், முன்பு ஒரு காலத்தில் திருப்பூவணம் என்னும் தலத்தில் பொன்னனையாள் என்னும் விலைமகளின் இல்லத்திற்குச் சென்றது எற்றுக்கு? 'அன்பின் ஐந்திணை' எனும் தமிழ் இலக்கண நூல்கள் கூறும் அகப்பொருளின் திறனை விளக்குவதற்காகவே, அங்ஙனம் அவன் செய்தருளினான் என்றால், நீ உலகப் பெண்களுள் ஒருத்தி என்றன்றோ, முடியும்? (88)

### கவர்ந்தது ஏன்?

பேயொடு நடிக்கும் பித்தனே யென்றோ
பெருங்கதி யிலியிவ னென்றோ,
தாயொடு தந்தை யில்லவ னென்றோ,
தம்பிரா னொருதிரு மேனி,
நீயொரு பாதி நின்முனோர் பாதி
நிலவுறக் கொண்டது நன்றே,
காயொரு வாத்தென் பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (89)

சிவபெருமான் ஆகிய எங்கள் தலைவரின் திருமேனியில் நீ ஒரு பாதியும், நின் தமையன் ஆகிய திருமால் ஒரு பாதியுமாக முழுவதையுமே பகிர்ந்து கொண்டமை, இவன் பேயொடு நடிக்கும் பித்தன், கதியிலி, தாய்தந்தையிலி என்னும் காரணம் பற்றியோ? (89)

### நீயே அவன்:

மோகினி யுருக்கொண் டொருதரம்,
புணர்நின்
முன்னவன் றனக்குமோர் பாதி,
யேகலி லெழினின் றனக்குமோர் பாதி
யெம்பிரான் மேனியி லென்றா,
லாகிய நீயே யவனெனத் தெரிந்தே
னல்லையென் றாற்பொறுப் பாயோ,
காகனம் சுமக்கும் வளத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (90)

மோகினி வடிவம் கொண்டு ஒரு முறை புணர்ந்த நின் தமையனுக்கும் ஒரு பாதி; அழியா இயல்பின் அழகையுடைய நினக்கும் ஒரு பாதி, எங்கள் பெருமானின் திரு மேனியில் என்றால், நீயே அவன் எனத் தெரிந்து கொண்டேன். நீ அவன் அல்லை, நீ அவனின் வேறு என்றாற் பொறுப்பாயோ? (90)

### படைப்புத் தொழில்:

பல்லுல கீன்ற நின்றிரு வுதரப்
பாலுள தென்னுநின் னிடைநே,
ரொல்லுமா றிலதா யினுமொரு பக்க
மொத்தலிற் சிருட்டியை யாற்றும்,
வெல்லுநா யகன்கைத் துடியெனி னின்றன்
மெல்வயிற் றிற்கது புகழோ,
கல்லுமா மலத்தர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (91)

அம்மையே! நின்னுடைய நாயகர் ஆகிய சிவபெருமானின் கையிலுள்ள துடி (உடுக்கை) யானது, சிருட்டி ஆகிய படைப்புத் தொழிலைப் புரியும் என்பர். பல உலகங்களையும் ஈன்றருளிய நினது திருவயிற்றுக்கு அருகேயுள்ளதாகிய நினது இடைக்கு முழுவதும் ஒப்பாதல் இல்லையாயினும், ஏதோ ஒரு வகையில் சிறிது ஒப்புமையுடையதாக இருத்தலினாலேயே, அந்தத் துடிக்கு அப்படைப்பு ஆற்றல் அமைவதாயிற்றுப் போலும். (91)

**புல்லும் படையாகும் :**

வண்படு கருப்புச் சிலைகொடு நெடிய
வலிபடு மேருவிற் கொண்ட,
தண்படு மதியஞ் சூடியைப் பொருது
சயம்படு நகைபுரிந் துவப்பா,
யொண்படு வலர்க்குப் பசும்புல்வன் படையென்
றுரைப்பதை விளக்கினை தாயே,
கண்படு மனச்செய் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (92)

அம்மையே! மிக்க வல்லமையுடைய மேரு மலையை வில்லாக வளைத்த சிவபெருமானை, நீ நின் கரும்பு ஆகிய வில்லினாற் போரிட்டு வெற்றி கொண்டு புன்முறுவல் பூத்து மகிழ்ச்சி கொள்வாய்! இச் செயலால், 'வல்லவனுக்குப் புல்லும் படையாகும்' என்னும் பழமொழியின் பொருளை, நீ எங்களுக்கு விளக்கிக் காட்டி விட்டாய்! (92)

**தலை மதியான் :**

தேவிநின் னிடைதோ ளொத்திடு குணத்தாற்
சிதம்பர தலத்தும்வேய் வனத்தும்,
மேவிய நகைமுத் தணிமுலை யொக்கும்
விதத்தினாற் றிருமுல்லை வாயில்,
பாவிய கயிலை யிடத்தும்வீற் றிருப்பன்
பரன்றலை மதியனே யன்றோ,
காவியன் ககன முறுந்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (93)

சிவபெருமான் சிதம்பரம், வேய்வனம், திருமுல்லைவாயில், கயிலை ஆகிய தலங்களில் மிகவும் விரும்பி எழுந்தருளி விளங்குகின்றான். அதற்குக் காரணம், சிதம்பரம் நின் இடையையும் வேய்வனம் நின்தோள்களையும், திருமுல்லைவாயில் நின் அழகிய பற்களையும், திருக் கயிலைமலை நின் முலைகளையும் ஒத்திருக்கும் தன்மையே யாகும். சிவபெருமான் ''தலை மதியான்'' அல்லனோ? அதனால் தான், இவ்வொப்புமைகளை யுணர்ந்து, இத் தலங்களை விரும்பி யருளினான்.

[இடை உண்டோ இல்லையோ எனஐயம் விளைவித்து இரகசியமாக விளங்குதலின், அதற்குச் சிதம்பரம் ஒப்புமையுடையாதயிற்று. தலைமதியன் என்பது இரட்டுற மொழிதல்; தலையில் மதியை அணிந்திருப்பவன்; தலை சிறந்த மதி நலம் வாய்ந்தவன் என இருபொருட் குறிப்புக் காண்க.] (93)

**வச்சிரவனம் :**

சுவைபடு கனிசெய் பனசநெட் டரம்பை
சூதமா மலகம்வெண் ணாவ
லிவைமுதற் பலவான்றருநிழ லுறைவா
னினியநின் மொழிச்சுவை யவாவி,
நவைபடு கொடிய வச்சிர வனமும்
நயந்தனன் பித்தனா தலினாற்,
கவைபடு சூலி யெழிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (94)

சுவை மிகுந்த கனிகளைத் தருகின்ற பனைமரம், வாழைமரம், மாமரம், நெல்லிமரம், நாவல் மரம் என்பவற்றின் நிழலில், முறையே திருப்பனந்தாள் (வன்பார்த்தான் பனங்காட்டூர், புறவார் பனங்காட்டூர்), திருப்பைஞ்ஞீலி (திருமருகல், திருக்கழுக்குன்றம்). திருவேகம்பம், திருநெல்லிக் காவல் ஜம்புகேசுவரம் ஆகிய திருவானைக்கா என்னும் தலங்களில் எழுந்தருளி விளங்கும் சிவபெருமான் பித்தன் ஆதலினாலேயே, பாலைப்பண் போனற நின் சொல்லினிமை விரும்பி, வச்சிரவனம் (திருப்பாலை வனம்) என்னும் தலத்தையும் விரும்பி மகிழ்ந்து எழுந்தருள்வானாயினன். (94)

**பிழை இலான் :**

இறையவன் வாமத் துறையுநீ தொழில்செ
யிமையவர் தருப்பணங் காட்ட,
மறைவின்மற் றதனை நோக்கியவ் விறைவன்
வலப்புறத் தொருமடக் கொடிநன்,
குறைவதென் னெனமற் றவனொடு பிணங்கே
லுற்றுநோக் கிடிற்பிழை யில்லான்,
கறைமலி களத்தன் வளத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (95)

அம்மையே! நின் கணவர் ஆகிய சிவபெருமானுக்கு வழிபாடு புரியுங்கால், தேவர்கள் எண்வகை மங்கலப் பொருள்களுள் ஒன்றாகிய கண்ணாடியை அவர்தம் திருமுன் காட்டுவர். அதனை நீ மறைவாகப் பார்த்து, நும் வலப்பக்கத்தில் ஒரு பெண் தங்கியிருப்பது ஏன்? என்று, அவருடன் ஊடல் கொள்ள வேண்டா. அவன் ஒரு பிழையும் இல்லாதவன். இடப்பக்கமுள்ள நின் திருவுருவமே, அக் கண்ணாடியில் வலப்பக்கத்தில் உள்ளதுபோல் மாறித் தெரிகின்றது. (95)

**ஒரு கதியிலை :**

கொடியது பிறத்த லதனினு மம்ம
கொடியதே யிறத்தலிவ் விரண்டுந்
தடிதர நினைந்தேன் றந்தைதா யில்லான்
றறுகண்வெங் கூற்றுதைத் தாற்குன்,
னடியனென் றுணர்த்தி யருள்விலக் குவையே
லகிலமீ தொருகதி யுண்டோ,
கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (96)

பிறப்பு கொடியது; இறப்பு அதனினும் கொடியது. ஆதலின் பிறப்பு இறப்பு ஆகிய இரண்டையுமே நீக்கிக் கொள்ள யான் நினைத்தேன். தந்தை தாய் இல்லாதவனும், கூற்றுவனை உதைத்தவனும் ஆகிய சிவபெருமான்பால், 'இவன் என் அடியவன்' என்று நீ அறிமுகம் செய்து வைத்தருள். அங்ஙனம் செய்யாமல் என்னை விலக்கி விடுவாயானால், எனக்கு உன்னைத் தவிர வேறு யாதொரு புகலிடமும் இல்லை. (96)

**விதிவிலக்கு இலான் :**

தடியுண லென்றும் வனசரர் பெருமான்
றருதடி மிசைந்தன னொழிக,
மிடியிடை யவர்மா லென்றும்நிற் களித்தான்
மேனியிற் பாதியா தலினாற்,

படிவிதி விலக்கி லான்பர னென்னைப்
பற்றியா டற்கவை குறியான்,
கடிதரா துணர்த்து நீதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (97)

சிவபெருமான் வேதாகமங்களில் 'ஊன் உண்ணற்க' என்று வலியுறுத்தி விதித்திருந்தும், கண்ணப்பர் ஆகிய வேடுவர் அளித்தபோது தானே ஊனைச் சுவைத்து உண்டு மகிழ்ந்தான். அதுதான் போகட்டும். 'பெண்கள் மயக்கத்தை விளைப்பவர்கள், அவர்களை விரும்பற்க' என்று அனைவர்க்கும் தானே கூறிவைத்திருந்தும், தான் மட்டும் பெண்ணாகிய நின்னை விரும்பி, நின்பால் மயங்கி, நினக்குத் தன் உடலிற் பாதியையும் கொடுத்து விட்டிருக்கின்றான். இங்ஙனம் தானே தன் கூற்றுகளுக்கு மாறாகச் சிவபிரான் நடந்திருத்தலின், அவன் தனக்கு ''விதி விலக்குகள் இல்லாதவன்''. எனவே என்னை ஆட்கொள்ளுவதிலும் அவன் விதிவிலக்குகளைக் கவனிக்க மாட்டான். ஆதலின், என்னை ஆட்கொண்டு அருள்புரியும் வண்ணம், நீ அப்பெருமானிடம் கூறிச் சிபாரிசு செய்தருள்க. (97)

**கருணை எங்கு இனி :**

வரக்கருங் கொண்மூ மழைபொழி யாதேன்
மண்பயி ருயும்வகை யுண்டோ,
திரக்கடுங் கவலை சிதைதரப் பல்காற்
செய்யும்விண் ணப்பநீ யுணர்ந்து,
மிரக்கமில் லவள்போ லிருத்தியேற்
கருணை
யெங்கினி யிருப்பது தாயே,
கரக்கரும் வளங்கண் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (98)

கரிய மேகம் மழை பொழியாவிட்டால், உலகில் பயிர்கள் வளர்வது உண்டோ? என்னுடைய கவலைகளைத் தீர்க்கும்படி, நின்னிடம் யான் பலகால் விண்ணப்பம் செய்தலை உணர்ந்தும், இரக்கம் இல்லாதவள் போல நீ இருந்தால், அருள் என்பது இனி எங்கே இருக்கும்? (98)

**சிவமயம் :**

மாயவ னாயோர் பாதியில் லவளாய்
மற்றொர்பா தியுங்கவர்ந் தனையால்,
நாயகன் மேனி யெனினவன் வடிவம்
நாடொறு மறைந்ததா யிருக்கச்,
சேயமண் சத்தி மயமெனா தந்தோ,
சிவமய மென்பதென் னுரையாய்,
காயமீ தெழுந்த மதிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (99)

அம்மையே! சிவபெருமானின் திருமேனியில் ஒரு பாதியைத் திருமாலாகவும், மற்றொரு பாதியை மனைவியாகவும் நீயே கவர்ந்து கொண்டாய்! அதனால் சிவபிரான் தமக்கெனத் திருமேனியின்றி மறைந்தே இருக்கின்றார். ஆயினும், இவ்வுலகமானது 'சக்தி மயம்' என்னாமல் 'சிவமயம்' என்றே கூறிவருகின்றது. இதற்கு யாது காரணம் கூறியருள்க. (99)

**திருவடிகள் :**

பனிபடு நின்றாட் பங்கயம் பொங்கு
பனிவரை யகநக நிகழுந்
துனிபடு பொழுது பரன்முடி மதியந்
துண்ணெனத் தாக்குநீர் வாவி,
நனிபடு முட்டாட் பங்கயம் பெறுமோ
நவின்றன விணையிலென் றுணர்ந்தேன்,
கனிபடு பொழில்விண் கமழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (100)

குளிர்ந்த நின் திருவடியாகிய தாமரைகள், இமயமலையின் உள்ளம் மகிழும்படி மெல்லென நடக்கும்; ஊடற்காலத்திற் சிவபிரானின் திருமுடியிலுள்ள மதியைத் துண்ணெனத் தாக்கும். இத்தகைய திருவடிகளை, நீர்நிலைகளில் உள்ள முடகள் பொருந்திய தாமரை மலர், தாங்கப் பெறுமோ? நின் திருவடிகள் தம்முள் இணையானவை அல்ல போலும்! (100)

**முடிவுரை :**

உலகப் பெரும் கவிஞர்களுள் தலை சிறந்த ஒருவராக மதிக்கப் பெறுபவர், வில்லியம் ஷேக்ஸ்பியர் என்பவர். அவர் தம் அழகிய கவிதைகளை எத்தனையோ பற்பல அறிஞர்கள் ஆராய்ந்து வியந்து பாராட்டி வருகின்றார்கள். அவர்களுள் பேராசிரியர் டௌடன் ( Prof. Dowden) என்பவர், 'ஷேக்ஸ்பியரின் நூல்கள் தொடக்கத்திற் பற்பல குறைபாடுகளைக் கொண்டனவாக இருந்து, பின்னரே படிப்படியாக வளர்ந்து சிறந்து முதிர்ந்து பெருமையுற்றன' என்று, ஆராய்ந்து விளக்கிக் காட்டி யிருக்கின்றார். ஷேக்ஸ்பியரின் நூல்களை அவர் தொழிற்கூடத்தில் (In the Workshop), உலகத்தில் ( In the World ), ஆழத்தினின்று ( Out of the Depth ), உச்ச நிலையிற் சென்று (At the Zenith) இயற்றப்பட்டன என்று, நான்கு வகைகள் அமையப் பிரித்து வைத்து ஆராய்கின்றார். வயதும், அறிவும், அநுபவமும் வளர வளரத்தான், கவிஞனின் கவிதைத் திறம் முதிரப் பெறும் என்பது, அவர் ஆராய்ந்து விளக்கும் அரிய சிறந்த கருத்து ஆகும்.

'அகிலாண்ட நாயகி மாலை' என்னும் இந்நூல், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால், தமது இளமைக் காலத்திலேயேபாடப் பெற்றிருந்தும், 'இறங்குதுறை நீத்தாயிற்று' என்பதற்கு ஏற்ப, அவ்விளம் பருவ நிலையிலேயே, கவிதை இயற்றத் தலைப்பட்ட தொடக்ககாலத்திலுமே, அவர் அடைந்துவிட்டிருந்த புலமையின் நிறைவையும், கவிதைத் திறனின் முதிர்ச்சியையும் தெளிவுற விளக்க வல்லதாகத் திகழ்கின்றது. சாத்திரம், தோத்திரம், இலக்கணம், இலக்கியம், கற்பனை, கவித்திறன், சொல் நயம் முதலிய பற்பலவற்றின் சிறப்புக்களும், இந்நூலிற் பொற்புற அமைந்திருத்தல் காணலாம்.

இத்தகைய சிறந்த இந்த நல்ல இனிய நூலை, அம்பிகையின் துதி நூல் வரிசைகளுள் ஒன்றாகப் பெரிதும் மதித்துப் போற்றி, நாம் அனைவரும் அன்புடன் ஓதி, நலம் பெற்றுய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்.

# நிசும்ப சூதினி

'இலக்கியப் பேரறிஞர்'
திரு. மு. அருணாசலம், எம்.ஏ.,

நிசும்பன் என்பவன் ஓர் அசுரன். இரணிய கசிபு மரபில் வந்தவன். சும்பம் என்றால் கொலை; நிசும்பன்-கொலைஞன். இந்தஅசுரன் பிரமனை நோக்கிப் பெருந் தவமிருந்து அரிய வரங்களைப் பெற்றிருந்தான். தேவர்களுடைய பிரார்த்தனைக்கு இணங்கி, பராசக்தி காளி வடிவில் சென்று நிசும்பனை அழித்து, தேவர்களுக்கும் உலகத்தாருக்கும் பெரும் நன்மை செய்தாள். அதுபற்றி அக் காளிக்குச் சூதினி என்ற பெயர் வழங்குவதுண்டு. இப்பெயர் நிசும்ப மர்த்தினி என்றும் வழங்கும். தவிர, நிசும்பனைக் கொன்றது துர்க்கை என்றும், துர்க்கைக்கே நிசும்ப சூதினி என்ற பெயர் உண்டு என்றும் கருத்துக்கள் வழங்கும்.

இது வல்லாமலும், தம்மைத் தாமே அழித்துக் கொள்வதற்குச் சுந்தோபசுந்த நியாயம் என்று சொல்வதும் உண்டு. சுந்தன் உபசுந்தன் என்ற இரண்டு அரக்கர், உலகத்திற்குப் பெரும் கொடுமை செய்ய, அவர்களை ஒருவராலும் அடக்க முடியவில்லை. அந்த நிலையில் பிரமனுடைய சிருஷ்டியில் திலோத்தமை தோன்றினாள். அவளை யார் அடைவது என்ற போட்டியில் சுந்தோபசுந்தர் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டார்கள். சுந்தோபசுந்தரைச் சும்பர் நிசும்பர் என்று சொல்வதும்உண்டு.

சங்க காலத்தின்பின் சோழநாடு தெற்கே பாண்டியராலும், வடக்கே பல்லவராலும் ஆக்கிரமிக்கப்படவே, சோழர் நெடுங்காலம் ஒடுங்கி உறைய வேண்டியிருந்தது. பௌத்த சமயக் களப்பிரரான அச்சுத விக்கந்தன் முதலியோர், காவிரிப்பூம்பட்டினத்தில் ஏகாதிபத்தியம் செலுத்தவே, சோழர் உறையூரில் ஒடுங்கி உறைந்தார்கள். இவர்கள் பரம்பரையில் தோன்றிய சிறப்பு மிக்க ஓர் அரசன், கோச்செங்கட்சோழன் என்ற நாயனார். இவருக்குப் பின் நெடுங்காலம் சோழர் வரலாறு மறைப்புண்டிருந்து, ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் விசயாலயன் என்ற ஒரு வலிமிக்க சோழன், பல்லவ ஆதிக்கத்தின் கீழ் ஒரு குறுநிலத் தலைவனாகப் பதவி ஏற்றிருந்து, தக்க சமயத்தில் தஞ்சையின்மீது படையெடுத்து, தஞ்சை, வல்லம், செந்தலை முதலிய இடங்களில் ஆட்சிபுரிந்த முத்தரையரைப் போரில் முறியடித்துத் தஞ்சையில் தனிக்கொடி நாட்டினான். இவனுடைய பரம்பரை சுமார் 450 ஆண்டுக்காலம் சோழர் பேரரசாக வளர்ந்து இருந்தது என்று வரலாறு கூறும்.

விசயாலயன் வழிபட்ட தெய்வம் நிசும்ப சூதினி. இதைப் பத்திரகாளி என்றும் சொல்லுவர். தஞ்சையைக் கைப்பற்றிய பிறகு இவன் அந்நகரில் ஒரு சிறு நிசும்ப சூதினி ஆலயம் அமைத்தான். அவ்வாலயம் இன்றும் உள்ளது. அது மிகச் சிறிய கற்கோயில். கருவறையில் நிசும்பசூதினி உருவம் ஒன்றே உள்ளது. அங்கு வேறு ஏதும் இல்லை.

நிசும்பசூதினி வடிவம் ஆறடி உயரமும், அதற்கேற்ற கனத்த ஆகிருதியும் உடையது. கருவறை வாயிலில் துவாரபாலகியரும் உள்ளனர். இவை சுதையால் அமைந்தவை. நிசும்பசூதினி உருவம் இருந்த கோலம். இடக் கால் மடித்துள்ளது. வலக்கால் கீழே படுத்துக் கிடக்கின்ற நிசும்பன் தலையில் மிதித்திருக்கிறது. அவனையன்றிப் பின்னும் சில அசுரர்களை ஓர் ஆசனம் போல் அமுக்கி வைத்து அவ்வாசனத்தின்மீது தேவி அமர்ந்திருக்கிறாள். தேவிக்கு எட்டு கைகள். அட்டபுஜங்கள். எட்டு கைகளிலும் சூலம், வாள், கேடயம், கபாலம், டமருகம், வில், அம்புகள் உள்ளன. ஒரு கை கஜ அஸ்தம். வாகனம் இல்லை, தலையில் சுடர் அமைந்த கிரீடம் உள்ளது. தேவியின் தலை இடப்பக்கம் சற்றுச் சாய்ந்தே உள்ளது.

இந்த ஆலயத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் சிறப்பான நாள். தை வெள்ளி மிகவும் சிறப்பு. அவற்றுள்ளும் மூன்றாவது வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பு. அளவற்ற புஷ்ப அலங்காரம். அன்று பால் அபிடேகம் மிகவும் விசேஷமானது. கோயில் கற்கோயில். வடக்கு நோக்கிய சந்நிதி. விஜயாலயன் கட்டிய நிலையில் இன்றும் உள்ளது. எந்த வளர்ச்சியும் இல்லை. கோயில் அமைந்துள்ள இடம், சீர் நிலையில் உள்ள மக்கள் வாழும் இடம். இது காளிகோயில் என்றே ஊர்மக்கள் சொல்லுவார்கள். வடபத்திரகாளி என்றும் சொல்லுவதுண்டு. மக்கள் வெள்ளியினால் செய்த சூலமும் கிரீடமும் செய்து வைத்திருக்கிறார்கள். தேவியின் கிரீடத்தின் உச்சி அதிக உயரத்தில் ஆனதால், அபிஷேகம் செய்யும் குருக்கள் ஒரு பலகை போட்டு அதன்மேல் நின்றுகொண்டு தான் அபிஷேகம் செய்வார்.

அந்தச் சுற்றுப்புறத்தில் இந்த தேவிக்கு இராகுகாலக் காளி என்று பெயர் வழங்குகிறது. கோயிலுக்குப் போகும் தெருவுக்கு இராகுகாலக்காளி சந்து என்று சொன்னால்தான் தெரியும். கோயிலுக்கு எதிரில் ஒரு சிறு சிவன் கோயில். கோயில் தஞ்சை அரண்மனை நிர்வாகம்.

பிற்காலத்தில் சோழச் செப்பேடுகள், விசயாலயன் தஞ்சையைக் கைப்பற்றியதும், அங்கு நிசும்பசூதினியைப் பிரதிட்டை செய்து அத்தேவியின் அருளால் நாற்கடல் சூழ் நானிலத்தை ஆண்டான் என்று கூறுகின்றன. **

# தீக்கையும் அதன் வகைகளும்

'தீக்கை' என்னும் சொல்லுக்கு 'மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது' என்று பொருள். தீக்கையானது நயனம் பரிசம் வாசகம் மானதம் சாத்திரம் யோகம் அவுத்திரி எனப் பலவகைப்படும். தீக்ஷை, தீட்சை, தீக்கை என்பன, ஒரு பொருளனவே யாகும்.

1. *நயன தீக்கை:* ஆசிரியன் மாணவனைத் தன் அருட்பார்வையினால் அன்புடன் இனிது நோக்கி ஆட்கொண்டருளுதல். நயனம்-கண், பார்வை. மீனானது தன் முட்டைகளை அடைகாத்தல் ( Incubation ) செய்யாமல், அவற்றைத் தன் கண்களினால் உற்று நோக்குதல் மூலமாகவே குஞ்சு பொரிக்கச் செய்தல் போல்வது இது. 'மீனாட்சி' என்னும் பெயர்க் காரணமும் ஈண்டு நினைவு கூரற்பாலது. மாணிக்கவாசகர் தம் ஞானாசிரியரை ''உடையாய்! என்னைக் கண்டு கொள்ளே'' என்று வேண்டுதல் காணலாம்.

2. *பரிச தீக்கை:* ஆசிரியன் மாணவனைத் தன் திருக்கையினாலும் திருவடியாலும் தொடுதல். பரிசம் - தொடுதல், தீண்டுதல். இது பெட்டைக் கோழியானது தன் முட்டைகளின் மீது அமர்ந்து அடைகாத்தல் செய்து, அவற்றைக்குஞ்சு பொரிக்கச் செய்தல் போன்றது. சிவபிரான் சுந்தரமூர்த்திகளுக்குத் திருவதிகையில் சித்தவடமடத்தில், அவர் உறங்கும் போது, கிழவடிவிற் போந்து, பலகால் அவர்தம் தலையை மிதித்துத் திருவடித் தீக்கை புரிந்தருளிய வரலாறு, இங்கு நினையத் தகுவது. 'சென்னி மிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்' என்னும் பெரியபுராணப் பாடலும் (அப்பர்-195) ஈண்டுக் கருதுக.

3. *வாசக தீக்கை:* ஆசிரியன் மாணவனுக்குச் சில சொற்களைக் கூறியோ, திருவைந்தெழுத்துப் போன்ற மந்திரங்களை உபதேசம் புரிந்தோ, ஆட்கொண்டருளுதல். வாசகம்-சொல். ''சும்மா இரு சொல் அற என்றலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே'' என அருணகிரிநாதரும், ''என்னை ஓர் வார்த்தையுட்படுத்துப் பற்றினாய்'' ''நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்தாய்....'' என்று மணிவாசகரும் பாடியருளியிருத்தல் காணலாம்.

4. *மானத தீக்கை:* ஆசிரியன் மாணவனை 'இவன் ஈடேறி நலம் பெற்று உய்க!' என்று அருளுணர்வுடன் தன் மனத்தில் நினைத்து ஆட்கொண்டருளுதல். மனஸ் - மனசு - மானசம் - மானதம் - மனத்தினாற் செய்வது. ஆமையானது தான் ஓர் இடத்தில் இட்ட முட்டைகளைப் பிரிந்து கடலில் நெடுந்தொலைவு சென்றுவிட்ட போதிலும், அவற்றையே நினைவு கூர்ந்திருந்து, நினைவு மாத்திரத்தினால் குஞ்சு பொரிக்கச் செய்தலைப் போன்றது. நினைவுக்கும் எண்ணங்களுக்கும் மிகுந்த ஆற்றல் உண்டு. இந்நாளில் Hypnotism, Mesmerism, Telepathy என வளர்ந்து வரும் கலைகள் பலவும் நினைப்பாற்றலின் இயல்பினை மெய்ப்பித்து, வருகின்றன.

5. *சாத்திர தீக்கை:* ஆசிரியன் மாணவனுக்குப் பதி பசு பாசங்களின் இலக்கணங்களையும், பசுக்கள் பாசத்தின் நீங்கி வீடுபேறு அடையும் முறைமைகளையும் குறித்து, ஏதேனும் ஒரு நூல் வழியாகப் போதித்து ஆட்கொள்ளுதல். சிவபெருமான் மாணிக்கவாசகர்க்குத் திருப்பெருந்துறையிற் குருந்தமர நிழலில் சிவஞான போதம் உபதேசித்து ஆட்கொண்டருளினர் எனக் கடவுள்மா முனிவர், வாதவூரடிகள் புராணத்திற் பாடியிருத்தல், ஈண்டுக் கருதற்பாலது.

6. *அவுத்திரி தீக்கை:* ஆசிரியன் மாணவனுக்கு ஓமம் முதலியன வளர்த்துச் சடங்குகளுடன் செய்யும் தீக்கை. இந்நாளில் நம்போல்வார் பலரும் செய்து கொள்ளப் பெறுவது இத் தீக்கையே ஆகும். ஹோத்திரம் - ஓமம். ஹோத்திரம், ஔத்திரம். ஔத்திரத்துடன் செய்யப்படுவது ஔத்திரி, அவுத்திரி. இவ் அவுத்திரி தீட்சையானது கிரியாவதி என்றும், ஞானவதி என்றும் இரண்டு வகைப்படும். குண்டம் மண்டலம் அமைத்துத் தீ வளர்த்து, சுருக்கு சுருவங்களால் நெய்கொண்டு ஆகுதி புரிந்து, கிரியைகள் வாயிலாகச் செய்யப்பெறும் தீக்கை, கிரியாவதி எனப்படும். இவற்றையே ஆசிரியன் தன் மனத்திற் கற்பித்துக் கொண்டு செய்தருள்வது, ஞானவதி என்று பெயர்பெறும்.

7. இனி, தீக்கையைச் சமயம் விசேடம் நிருவாணம் என மூன்றாகவும் நூல்கள் கூறும். சமயதீக்கை, சமய ஒழுக்கம் கடைப்பிடித்

தற்குத் தகுதியும் உரிமையும் அளிக்கும். விசேட தீக்கை, சமய ஒழுக்கம் கடைப்பிடித்தற்குத் தகுதிபெற்ற மாணாக்கனை ஆசிரியன் சிவபுத்திரன் ஆகும் வண்ணம் செய்தருள்வது. இதனால் சிவபூசை செய்தற்கும், யோகநெறி நிற்றற்கும்,சிவாகமங்கள் ஓதுதற்கும் தகுதியுண்டாகும். நிருவாண தீக்கை,சமயம் விசேடம் என்னும் இரண்டு தீக்கைகளும் பெற்றுக் கொண்ட மாணாக்கனுக்கு, முப்பொருள்களின் பொதுவியல்பு உணர்த்தும் முகத்தால் மலத்தை நீக்கி, உண்மை ஞானம் விளங்கச் செய்வது. இதனாற் சிவாகமங்களின் உண்மைப் பொருளை ஆராய்தற்கு உரிமை பெற்று, சிவஞானம் விளங்கிச் சிவம் பிரகாசித்து, மலவாசனை நீங்கி, நாம் வீடுபேறு தலைக் கூடலாம்.

பலவிதம் ஆசான் பாச மோசனந்தான் பண்ணும்
படி; நயனத் தருள்பரிசம் மானதமும்
அலகில் சாத்திரம் யோகம் அவுத்திராதி
அநேகம்உள; அவற்றின் அவுத்திரி இரண்டு
திறனாம்
இலகு ஞானம்கிரியைஎன; ஞானம் மனத்தால்
இயற்றுவது; கிரியைஎழிற்குண்ட மண்டலாதி
நிலவுவித்துச் செய்தல்; கிரியாவதி தானும்
நீர்ப்பீசம் சபீசம் எனஇரண்டாகி நிகழும்.

—சித்தியார் 255.

''மூவகை ஆருயிர் வர்க்கம்; மலத்தார், கன்ம
மூலமலத்தார், மூன்றும் உடையார் அன்றே;
தீவகமாம் என உருவாய் வந்து நாதன்
திருநோக்கால், பரிசத்தால், திகழும்
வாக்கால்
பாவனையால், மிகுநூலால், யோகப் பண்பால்
பரவி வரும் அவுத்திரியாற் பாச நாசம்
மேவ அருள் உதவும்; அவுத்திரி இரண்டு திறனாம்;
வியன்கிரியை ஞானம்என விளம்பு மாறே''

''விரும்பிய மந்திராதிகாரம், அர்ச்சனாதி காரம்,
மேவும் யோகாதிகாரம் எனச் சமயம், விசேடம்,
வரும்பொருவில் நிருவாணம்.....''

—சிவப்பிரகாசம் 8-9.

**—ஆசிரியர்**

# "பத்துக் கோலாம் அடியார் செய்கை"

இறைவனின் அடியவர்கள் பத்து வகையான செயல்கள் அல்லது இயல்புகளைப் பெரும்பாலும் பெற்றிருப்பார்கள்.

(1) உலகத்தையும் உலகியற்கைப் பொருள்களையும் அருள் வடிவமாகக் காணும் இயல்பு.

(2) கருவி கரணங்களை முறையே களைந்தொழிக்க முயலும் சிந்தனை.

(3) முற்பிறவிகளிற் பட்ட துன்பங்களை நினைத்து நினைத்து நெட்டுயிர்ப் பெறிதல்.

(4) திருவருள் மேலீட்டால் உடம்பில் இளஞ்சூடு எப்பொழுதும் நிலவுதல்.

(5) ஊண் உறக்கம் உலகநுகர்ச்சி என்பனவற்றிற் கருத்தின்றி, அவற்றைத் துறக்க முயலுதல்.

(6) பிறரோடு உரையாடுதற்கும் பழகுதற்கும் தாமாக முயலாமல் அவற்றைத் தவிர்த்தொழுகல்.

(7) எப்பொழுதும் மௌனம் கடைப்பிடித்து ஒழுகுதலையே விரும்பி மேற்கோடல்.

(8) பித்தேறினாற்போல உலகியற் பொருள்களிற் பாகுபாட்டுணர்வு தோன்றாமல் நிற்றல்.

(9) பிராணவாயு அடங்கி நிற்க மூர்ச்சை எய்தியிருத்தல்.

(10) தற்போதம் என்பது சிறிதும் இன்றிச் செயலற்று விளங்குதல்

இப் பத்துவகையான செயல்களையும் இயல்பாகவே பெற்றிருத்தல் பற்றியே, இறைவன் அடியார்களுக்குப் 'பத்தர்கள்' என்பது பெயர் ஆயிற்று. ''பத்துக்கொலாம் அடியார் செய்கை தானே'' என்பது, திருநாவுக்கரசர் தேவாரம். ''பத்துடை அடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கு அரிய வித்தகன்'' என்பது நம்மாழ்வார் திருவாய்மொழி.

1. தத்துவரூபம், 2. தத்துவ தரிசனம், 3. தத்துவ சுத்தி, 4. ஆன்மரூபம், 5. ஆன்ம தரிசனம் 6. ஆன்மசுத்தி, 7. சிவரூபம், 8. சிவதரிசனம், 9. சிவயோகம், 10. சிவபோகம்.

என்னும் தசகாரியம் ஆகிய பத்தையும்கூட, இறைவனின் அடியார்களுக்குரிய பத்துச் செய்கைகளாகக் கூறுவர். மேற்குறித்த பத்துச் செயல்கள் ''ஒழிவில் ஒடுக்கம்'' என்னும் நூலில், அதற்கு உரை வகுத்த திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் அவர்களாற் குறிப்பிடப் பெற்றிருப்பனவாகும்.

**—ஆசிரியர்**

# திருவிருத்தத்தின் சிறப்பு

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுள் தலைவராகத் திகழ்பவர், நம்மாழ்வார்! நம்மாழ்வார் அருளிச் செய்த பிரபந்தங்கள் நான்கு. அவைகள் முறையே திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்பனவாகும். இவற்றுள் 'திருவிருத்தம்' என்னும் பிரபந்தத்தின் பெயர் குறித்துப் பெரியோர்கள் பலவகை விளக்கங்களைக் கூறுவர்.

**திருவிருத்தம் :**

1. 'விருத்தம்' என்னும் சொல், தமிழில் 'கட்டளைக் கலித்துறை' என்னும் ஒருவகைச் செய்யுளைக் குறிக்கும். 'குறள்' என்னும் செய்யுள் வகையினால் அமைந்த நூல், 'திருக்குறள்' எனப் பெயர் பெற்றாற்போல, விருத்தம் என்னும் செய்யுள் வகையால் இயன்ற இந்நூலும், திருவிருத்தம் எனப் பெயர் பெறுதாயிற்று.

2. இனி, வடமொழியில் விருத்தம் என்னும் சொல் 'செய்தி' எனப் பொருள்தரும். ''இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை அடியேன் செய்யும் விண்ணப்பம் மெய்ந்நின்று கேட்டருளாய்'' என்று, ஆழ்வார் எம்பெருமான்பால் இவ்வுலக வாழ்வில் தமக்குள்ள வெறுப்பை விரித்துரைத்து, எம்பெருமானைக் கலந்து அனுபவித்தலிலேயே, தமக்குக் காதல் பெருகிக் கிளர்ந்தோங்கும் செய்திகளை வெளியிட்டு, விண்ணப்பித்துக் கொள்ளுகின்ற விதத்தில் அமைந்திருக்கும் காரணம்பற்றி, இதனைப் பெரியோர்கள் 'திருவிருத்தம்' எனப் பெயரிட்டுச் சிறப்பித்து வழங்குவாராயினர்.

3. இனி, வேறொரு வகையாகவும், பெரியோர்கள் இதற்கு விளக்கம் கூறுவது உண்டு. இந்நூலின்கண் நம்மாழ்வார் ''ஞானத்தில் தம் பேச்சு, பிரேமத்திற் பெண் பேச்சு'' எனப்படும் முறையில், பெரும்பாலும் தம்மைப் பிராட்டியாகவே வைத்துத் தமது உள்ளத்திற் பொங்கிப் பெருகிஎழும் காதற் கனிவுணர்ச்சிகள் பற்றிய செய்திகளை வெளியிடுகின்றார். ஆதலின், திருவிருத்தம் என்பதற்குத் திருமகளின் செய்திகளைக் கூறும் நூல் (திரு-திருமகள்; விருத்தம்-செய்தி, காதற் செய்தி) என்றும் சிலர் பொருள் கூறுவர்.

4. திருவிருத்தம் என்னும் இந்நூலின் சிறப்பு எல்லையற்றது. தமிழுக்குப் பெரிதும் சிறப்பாக உரிய அகப்பொருள் இலக்கணத் தினைத்தழுவி, அதன் துறைவகைகள் பல அமையப் பெற்றிருப்பது. சொற்றிட்பம், பொருள்நுட்பம், ஆழ்ந்துசெல்லும் கருத்தமைதி, குறிப்புப் பொருள் நுணுக்கங்கள், கற்பனை நலங்கள் முதலிய கவிதைத் திறன்கள், பலவற்றாலும் ஒப்புயர்வற்றுச் சிறந்து திகழ்வது, இந்நூல்!

கசப்பு மருந்தை உண்ண மறுப்பவர்க்கு, அவர் உவக்குமாறு அதன்மேலே இன்சுவை தீற்றிவைத்து உண்பிக்குமாறு போலப் பாமர மக்கள் எளிதில் உணர்ந்து நுகர முற்படாத பக்திச்சுவையினை, அவர்கள் உவந்து நுகரும் வண்ணம், பண்புயர்ந்த காதற்சுவையாகப் பாங்குற அமைத்து, எளிய சிற்றின்பம் பற்றிக் கூறுவதுபோல, அரிய இனிய பேரின்பம்பற்றி அழகுற விளக்குவது, திருவிருத்தம் என்னும் இந்நூலின் சிறப்பியல்பாகும்.

மேலோடு காண்பவர் அறியும் வெளிப்படைப் பொருள் (அந்நியாப தேசம்), ஆழ்ந்து நுணுகி ஆராய்ந்து கற்பவர் உணரும் உள்ளுறை பொருள்(சுவாபதேசம்) என்னும் இருவகைப் பொருள்களும் எழிலுறக் கொண்டு, இந்நூல் இலங்குகின்றது.

**திருவிருத்தத்தின் சிறப்பு:**

இத்தகைய இந் நூலின் ஏற்றமிக்கபெருஞ் சிறப்பினை, மிகவும் வியந்து, கிடாம்பியாச்சான் என்னும் வைணவப் பெருஞ்சான்றோர் ஒருவர், ''கருப்பப்பை ஆகிய வட்டமான குழியிற் பத்துத் திங்கள்காறும் கிடந்து, அதனினின்று வெளிப்பட்டு உலகிற் பிறந்து, பின்பு இழிந்த காமம் ஆகிய கொடிய குழியிலே விழுந்து, நரை திரை மூப்புப் பிணி என்னும் பலவகைத் துயரங்களை விளைவிப்பதில் ஒப்பற்ற கிழட்டுத் தன்மையை அடைந்து, மிகவும் வருந்திப் பிறந்தும் இறந்தும் அலைந்துகொண்டிருக்கின்ற உலக மக்களே! உங்களுடைய உயிரானது அடைதற்குரிய நன்மையாகிய பயன்களுக்கு, ஓர் இடையூறுகூட அணுகவொட்டாத படி, திருக்குருகூர் என்னும் திவ்விய தலத்தில் தோன்றிய தலைவரான நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தம் என்னும் நூலில் உள்ள நூறு பாடல்களில், ஒரு பாடலின் ஓர் அடியையாவது கற்று உணர்ந்துகொள்ளுங்கள்; உணர்ந்து கொண்டால், நீங்கள் எம்பெருமான் எழுந்தருளி வீற்றிருக்கின்ற வைகுந்தம் என்னும் திருநாட்டில் மிகமேலோன பேரின்பத்தை நுகர்ந்துகொண்டு வாழ்ந்திருப்பீர்கள்!'' என்னும் கருத்தமைய,

''கருவிருத்தக் குழி நீத்தபின்,
காமக் கடுங் குழிவீழ்ந்து,
ஒருவிருத்தம் புக்கு உழலுறுவீர்!
உயிரின் பொருள்கட்கு
ஒருவிருத்தம் புகுதாமல்
குருகையர்கோன் உரைத்த
திருவிருத்தத்து ஓர்அடி கற்று
இரீர், திருநாட்டு அகத்தே''

[விருத்தம்-வட்டம்; கிழட்டுத்தன்மை; இடையூறு; செய்யுள்வகை. பொருள்கட்கு - நன்மை ஆகிய பயன்களுக்கு. குருகை-திருக்குருகூர்; ஆழ்வார் திருநகரி. இரீர்-இருப்பீர்களாக. திருநாடு-வைகுந்தம்]

என்னும் இனிய தனியன் ஒன்றினால், கிடாம்பியாச்சான் என்னும் வைணவப் பெருந்தகையார், திருவிருத்தத்தின் சிறப்பை விளக்கியிருத்தல் காணலாம்.

***